# செம்மண்

நிலம் 01 துகள் 06 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 22 - 28 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-





# வீதியை அகற்று!

## விசித்திரமான மக்கள் போராட்டம்!

**வெள்ளவாய்க்காலின் பாதையில் நீரோட்டத்தை மறித்து 6 இஞ்சி உயரத்தில் கொங்கிறீட் வீதி போட்ட நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி**

*செம்மண் ஆய்வுக் குழு*

யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி வீதி வழியே பயணிக்கும்போது தின்னவேலிச் சந்தியை அண்மிப்பதற்கிடையில் வலது கைப் பக்கத்தில் குறுக்கிடுகிறது பிள்ளை யார் வீதி. அந்த வீதி வழியாகச் சென்றால், சரியாக இரண்டு வளைவுகளின் பின்னர் சிறியதொரு நாற்சந்தி வரும். அந்த நாற் சந்தியில் இடது கைப்பக்கமிருப்பது தாழை யடி வீதி. கடந்த பல மாதங்களாக இந்த வீதிதான் பிரச்சினையின் மையப்புள்ளி. அபிவிருத்தி என்கிற பெயரில் பிரதேச சபை போட்ட ஒரு வீதியால் தமது பிர தேசமே பாதிக்கப்பட்டுவிட்டது என்று குமுறும் அந்தப் பகுதி மக்கள் வீதியை அகற்று என்று கேட்டு இப்போது போராட்டம் தொடங்கியிருக்கிறார்கள்.

> உந்தக் கொங்கிறீட் போட்டாப் பிறகு என்ர றோட்டாலை ஓடிப்போற தண்ணி அங்காலை மேவி ஓடமுடியாமல் முடங்கி நிற்குது. மழை வந்தால் ஒரே வெள்ளம். வீட்டுக்குள்ள போகேலாமக் கிடக்கு. என்னத்த ஆராய்ஞ்சு இந்த றோட்டப் போட்டாங்களோ தெரியேல்ல

தார் வீதியாக இருந்த அந்த வீதியை எந்தவிதத் தேவையும் ஆய்வும் அற்று 6 இஞ்சி வரையில் உயர்த்திக் கொங்கிறீட் வீதியாக நல்லூர்ப் பிரதேச சபையினர் மாற்றி அமைத்ததால் உரு வாகியிருக்கிறது இந்தப் பிரச்சினை.

"கன காலமாத் தார் றோட்டாத்தான் கிடந்தது. அதிலை டமேஜ் எண்டும் பெரிசா இருக் கேல்ல. அந்த மூலையில ஓரிடத்தில மட்டும் கொஞ் சமா உடைஞ்சு கிடந்தது. ஆனாலும் பிரதேச சபை இந்த றோட்ட கொங்கி றீட்டா மாத்திப்போட்டுது. எங்களை ஏதும் கேக் கேல்லை. இந்த வீதியில இருக்கிற ரெண்டொரு பேரின் நன்மைக்காண்டி இதைப் போட்ட தேயொழிய இந்த றோட்டால மற்ற எல்லாருக்கும் கஷ்டம்தான்" தாழையடி வாழ் மக்களின் பொது வான முறைப்பாடு இதுதான்.



வீதியிலுள்ள பொருளாதார வசதி படைத்த ஒரு சில குடும்பங்கள் பிர தேச சபைக்குள் கொண்டிருந்த செல் வாக்கைப் பயன்படுத்தி இந்தத் தேவையற்ற அபிவிருத்தி மேற்கொள் ளப்பட்டுள்ளது என்பதைச் செம்மண் குழு நேரில் ஆய்வு செய்தபோது அறிய முடிந்தது.

அந்தப் பகுதியிலுள்ள பெரும் பாலான மக்களுக்குப் பொருத்தமற்ற வீதியாக இந்தக் கொங்கிறீட் வீதி அமைந்துள்ளது. குறிப்பாக வெள்ள நீர் வழிந்தோடும் அதன் இயல்பு நிலையைக் குழப்பும் விதமாக முன் யோசனையேதுமற்று வீதி அமைக் கப்பட்டுள்ளது. இந்த கொங்கிறீற் வீதியை அமைப்பதற்கு முன்பாகச் சாத்தியக் கூற்று அறிக்கை பெற்றீர்களா, சுற்றுச்சூழல் ஆய்வு நடத்தினீர்களா, தொழில்நுட்ப ஆலோசனை பெறப்பட்டதா, எல்லாவற்றுக் கும் முதலில் மக்களின் சம்மதம் பெறப்பட் டதா என்கிற செம்மண்ணின் கேள்விகளுக்குப் பிரதேச சபையிடம் தெளிவான பதில்கள் இல்லை.

அப்படி ஏதாவது ஆவணங்கள் இருந்தால் பரிசீலனைக்காக அவற்றைத் தாருங்கள் என்றால், "அது எமக்கு முன்பிருந்த நிர்வா கத்தால் தொடங்கப்பட்ட திட்டம்", "இப்போது ஆவணங்களைப் பெற முடியாது", "பார்க்க வேண்டும்" போன்ற பதில்கள்தான் சபைத் தலைவரால் தரப்பட்ட பதில்களாக இருந்தன.

"அபிவிருத்தி எனும் பெயரில் நல்லூர்ப்

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

**துணை ஆசிரியர்: ந.ஜெயதாஸ்**


## அதிபர் உரையில் புதிதாக ஏதுமில்லை

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றம் வியாழக்கிழமை தனது முதலாவது அமர்வுக்காகக் கூடியது. 42 வருடங்கள் இல்லாத பல மாற்றங்களுடன் இந்த அமர்வு இடம்பெற்றது. பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை தற்போதைய ஆட்சியாளர்கள் பெற்றுள்ளனர், 4 தசாப்தங்களில் இல்லாத வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் இந்த நாடாளுமன்றத்தில் இல்லை, பதிலாக 15 கட்சிகளின் பிரதிநிதிகள் இடம்பிடித்துள்ளனர். ஆனாலும் அறுதிப் பெரும்பான்மையை ஆட்சியாளர்கள் தரப்பே கொண்டிருக்கின்றது என்று சபையின் ஆச்சரியங்கள் பல.

புதிய நாடாளுமன்ற அமர்வின் சம்பிரதாய தொடக்க நிகழ்வாக அதிபர் பிற்பகல் 3 மணிக்கு உரையாற்றினார். பொதுத் தேர்தலில் தமது தரப்புக்குக் கிடைத்த வெற்றியை வரலாற்றில் முதல் தடவையாகக் கிடைத் வெற்றி என்று தொடக்கத்திலேயே பெருமை பாராட்ட அவர் தவறவில்லை. ஆளும் தரப்புக்கு அத்தகைய ஆணையை, ஆதரவைத் தந்தவர்கள் தேசப்பற்றாளர்கள் என்றார் அதிபர் கோத்தாபய ராஜபக்ச தனது உரையில்.

அவரது இந்தத் தொடக்க உரை பெரிதும் அதிபர் தேர்தல் அறிக்கையை ஒட்டியதாகவே இருந்தது. தான் அதிபராக வெற்றி பெற்றதன் பின்னர் பொதுத் தேர்தல் வரையான காலத்தில் செய்தவைகளையும் இனிமேல் செய்யப் போகின்றவற்றையும் பட்டியலிட்டதாக இந்தக் கொள்கைவிளக்க உரை அமைந்தது.

ஆட்சி அதிகாரத்தைப் பிடித்ததிலிருந்து அவர் வலியுறுத்தி வரும் விடயங்களில் இருந்து இந்தக் கொள்கை விளக்க உரை பெரிதும் மாறுபட்டதாக இருக்கவில்லை. பதிலாக அவற்றை மேலும் அழுத்திச் சொல்வதாகவே அமைந்திருந்தது.

"மக்கள் பிரதிநிதிகளாக பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்கிறோம். மக்களின் இறைமையை பாதுகாப்பதற்கு அப்போதுதான் முடியுமாக இருக்கும்" என்று குறிப்பிட்டுத் தனது ஆட்சியின் போக்கு எதனை அடிநாதமாகக் கொண்டிருக்கும் என்பதை அவர் வெளிப்படுத்தினார். மக்களாட்சியின் (ஜனநாயகம்) அடிப்படையே பெரும்பான்மையின் வெளிப்பாடுதான் என்றபோதிலும் இலங்கை போன்ற நாடுகளில் பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புக்கள் என்பது மற்றைய இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் பெரிதும் கரிசனைக்குரியது. ஏனெனில் சிங்கள, பௌத்த இனவாதத்தை அடியொட்டியதாகவே ராஜபக்சக்களின் அரசியல் நகர்வுகள் இருந்தன என்பது அனைத்து விமர்சகர்களாலும், ஏன் கடந்த காலங்களில் அவர்களுடன் கூடவே இருந்தவரான தயான் ஜயதிலக போன்ற ராஜதந்திரிகளாலும்கூட ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் இறைமையைப் பாதுகாக்க பெரும்பான்மை மக்களின் விருப்புக்கு மதிப்பளிப்பது என்பது தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் பிரச்சினைக்குரியதுதான்.

அதிபரின் பேச்சின் பெரும் பகுதி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படப்போகும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பானதாகவே இருந்தது. பொருளாதார மேம்பாட்டில் இந்த ஆட்சி எவ்வளவு தூரம் அக்கறையோடு முன்னகரப் போகின்றது என்பதை அது முன்னறிவித்துள்ளது. புதிய அரசமைப்பின் உருவாக்கம்கூட அதன் பின்னரானதுதான். இன்னும் சொல்லப்போனால், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் வெற்றியைப் பொறுத்தே புதிய அரசமைப்பு உருவாக்கமும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அதாவது இலங்கையின் வழமைக்கு ஏற்ப இந்த ஆட்சியின் கடைசிக் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்க வரைபுகளை நாடாளுமன்றத்தில் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும். ஆனால், தேர்தல் முறை மாற்றத்தையும் உள்ளடக்கியதாக, 19ஆவது திருத்தத்தில் உள்ளடங்கும் ராஜபக்ச குடும்பத்தைக் குறிவைத்துக் கொண்டுவரப்பட்ட விடயங்களை நீக்கும் வகையிலானதாகவும் 20ஆவது திருத்தம் உடன் வரும்.

பொருளாதாரத்தின் ஊடாகவே அனைத்தையும் தீர்க்க முடியும் என்கிற அதிபரின் எண்ணத்தை மீண்டும் வலியுறுத்துவதாகவே அவரது கொள்கை விளக்க உரை அமைந்திருந்தது. அது வெற்றியளிக்கக்கூடிய நடைமுறையா என்பதை இப்போதே கணிப்பது கடினம். அதன் விளைவுகளுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கும். இந்தச் சவாலுக்கு நடுவில் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது இன நலன்களுக்கான அரசியல் போராட்டத்தை முன்னகர்த்தப் போகின்றன என்பதைப் பொறுத்தும் அதிபரின் கொள்கையின் வெற்றி வாய்ப்புத் தங்கியுள்ளது.



## வீதியை அகற்று....

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபையால் இந்த வீதி கொங்கிறீட் இடப்பட்டுவிட்டது. நாம் எவ்வளவோ முயற்சி செய்தும் மக்களின் தேவைக்கில்லாமல் பிரதேச சபையினர் இந்த வீதியை உயர்த்திக் கொங்கிறீட் இட்டுவிட்டனர். அதை அகற்றித் தருமாறு கோரி நாங்கள் ஏறி இறங்காத இடமில்லை. ஆனால் அது இன்னும் நடந்தபாடாக இல்லை" என்கின்றனர் மக்கள்.

"முந்தியிருந்தே இந்த றோட்ட வெள்ள வாய்க்கால் எண்டுதான் சொல்லுறது. இதாலை வெள்ளம் ஓடிப் பரவைக் குளமெண்டு உதிலை கிடக்கு அங்க போய்ச் சேரும். எந்த அடை மழை பெய்தாலும் இங்க ஒருத்தற்ற வளவுக்கையும் ஒரு சொட்டு வெள்ளம் நிக்காது. எல்லாம் குளத்துக்கு ஓடிப்போயிடும். தார் றோட்டு இருக்கேக்க அது சரியா நடந்துது. இப்ப கொங்கிறீட் றோட்டாக்கி 6 இஞ்சிக்கு உயர்த்தினாப் பிறகு எல்லாற்ற வீடும் பரவைக்குளமாகிப்போச்சுது. இஞ்சையுள்ள குடிகளெல்லாம் மழை வந்தால் வெள்ளத்துக்க மிதக்குதுகள். வசதியுள்ள ஒரு சிலர் மட்டும் தங்கட வளவுகள உயர்த்தி வைச்சிருக்கினம்" என்கிறார் ஜெயந்தி ரீச்சர். நீண்ட மூச்சொன்றை இழுத்து விட்ட பின்னர் மீண்டும் தொடர்ந்தார்.

"இந்த இடத்திலயே முதல் முதலில கட்டின கல் வீடு எங்களோடது. 40 வருசமாக இருக்கிறன் இதில. முந்தி ஒரு காலமும் மழை காலத்தில வீடு கசிஞ்சதேயில்லை. இந்த றோட்டுப் போட்டாப் பிறகு, வீடு முழுக்கக் கசியுது. மழை காலத்தில வீட்டில இருக்க முடியுதில்லை."

மக்களிடம் வாக்குப் பெற்று அதிகாரத்திற்கு வந்தவர்கள், மக்களைத் துன்பப்படுத்தும் விதத்திலான அபிவிருத்தியை மேற்கொண்டுவிட்டு அதற்குத் தீர்வும் காணாமல் இழுத்தடிக்கும் போக்கிரித்தனம் மிக மோசமானது. வெள்ள வாய்க்காலை கொங்கிறீட் போட்டு உயர்த்தும் வரை ஒரு பிரதேச சபையின் தொழில்நுட்ப அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், அந்தத் தொகுதிக்குரிய உறுப்பினர் எல்லோரும் என்ன செய்தார்கள்?

தாழையடியிலுள்ள மற்றொருவர் செல்வராஜா. கொங்கிறீட் வீதியிலிருந்து கிளை பிரிந்து தனித்துச் சில தூரம் செல்கின்ற சிறியதொரு தார் வீதியின் முடிவில் இருக்கிறது இவரது வீடு.

"உந்தக் கொங்கிறீட் போட்டாப் பிறகு என்ர றோட்டாலை ஓடிப்போற தண்ணி அங்காலை மேவி ஓடமுடியாமல் முடங்கி நிற்குது. மழை வந்தால் ஒரே வெள்ளம். வீட்டுக்குள்ள போகேலாமக் கிடக்கு. என்னத்த ஆராய்ஞ்சு இந்த றோட்டப் போட்டாங்களோ தெரியேல்ல" ஆதங்கப்படுகிறார் அவர்.

அவரது இடத்தையும் அந்தச் சூழலையும் பார்க்கும்போது அறிவிருக்கும் எவராவது இப்படிச் செய்வார்களா? அதிலும் படித்து, பட்டறிவு பெற்று அரச பணில் ஈடுபடும் அதிகாரிகளும் அலுவலர்களும் இவ்வளவு முட்டாள்களாகவா இருப்பார்கள்? இத்தகைய கேள்விகள்தான் செம்மண்ணுக்கு எழுந்தன.

சிவகுமார், தாழையடி வீதி தங்களுக்குப் பொருத்தமற்றது என்ற அந்தப் பகுதி மக்களின் ஒருமித்த குரலாக நிலமையை விளக்குகிறார்.

"உது 15அடி றோட்டு. அதிலையும் இப்ப ரெண்டு பக்கமும் ரெண்டு அடிக்கு மேல இடைவெளிவிட்டுக் கொங்கிறீற் போட்டுக் கிடக்கு. ரெண்டு வாகனம் விலத்த ஏலாது. பழைய தார் றோட்டு வெள்ளம் ஓடுறதுக்கு வசதியா நிலத்துக்குக் கீழதான் கிடந்தது. கொங்கிறீட் போடப்போகினம் எண்டபோதே நாங்களெல்லாம் இதை எதிர்த்து நிண்டனாங்கள். 6 இஞ்சிக்கு உயத்தியிருக்கினம். இதுக்குள்ள 37 குடும்பம் இருக்கு. கொங்கிறீட் றோட் வேண்டாம் எண்டு 27குடும்பங்களிட்டச் சைன் வாங்கிக் குடுத்தனாங்கள். மறிக்க மறிக்க இரவிரவா அவசர அவசரமாப் போட்டிட்டினம். இது வேண்டாம் இதாலை சரியான பாதிப்பு. எங்களுக்குத் தார் றோட்டாலை ஒரு பிரச்சினையும் இல்லை. எண்டு போடேக்கையே இடையில நிப்பாட்டச் சொல்லி நிண்டனாங்கள்" என்றார்.

தாழையடி வீதி வாழ் மக்களில் ஒரு சில குடும்பங்களைத் தவிர மற்றைய எல்லோருமே இந்த வீதியை எதிர்க்கிறார்கள். அதனை அப்புறப்படுத்தச் சொல்லி நிற்கிறார்கள். அப்படி இருக்கும்போது இந்த இடத்துக்குப் பொருந்தாத வகையில், நுண்ணறிவற்ற அணுகுமுறையில் இந்த வீதியை நல்லூர்ப் பிரதேச சபையினர் எதற்காக மாற்றியமைத்தனர்? நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவரிடம் செம்மண் கேள்வி எழுப்பியது.

"அரைவாசி றோட்டுப் போடும் வரைக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை. எங்கட நிர்வாகம் வர முந்தியே நடந்த விசயம் இது. ஒதுக்கீடு செய்து அரைவாசிக்குப் போனாப்பிறகு மாத்த ஏலாது. முழுக்கக் கொங்கிறீட் போடுறதுக்குச் சம்மதிச்சுக் கொண்டவை. அதிலை ஒராள் மட்டும்தான் குழப்பம். ரெண்டு மூண்டு தரம் நாங்கள் கதைச்சனாங்கள் அவை ஏற்றுக் கொள்ளயில்லை. அதை இடிச்சு முற்றாக அகற்ற வேணும் எண்டதுதான் அவையின்ர கோரிக்கை. கோடிக் கணக்கில செலவழிச்சுப்போட்டு அதை முற்றாக இடிச்சு அகற்ற உடனடியாக ஏலாது. ஒரு வேலை செய்தால் ஒரு ஐந்து, பத்து வருசத்துக்குப் பிறகுதான்... அதின்ர பெறுமானம் குறைஞ்ச பிறகுதான் ஏதாவதொண்டைச் செய்யலாம்" என்று சமாளிக்கின்றார் பிரதேச சபைத் தலைவர் த.தியாகமூர்த்தி.

பொருத்தமற்ற அபிவிருத்தியை மக்களின் ஆதரவோ தேவையோ இன்றிச் செய்துவிட்டு அதனை அகற்றுவதைமட்டும் உடனடியாகச் செய்யமுடியாது என்று கூறும் அவரது சிந்தனை அதிகார மைய துஸ்பிரயோகம் என்றே செம்மண்ணுக்குப் படுகிறது.

"றோட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறத நிப்பாட்டுறதுக்கு வக்கீல் நோட்டீஸ் எடுத்தது. வக்கீல் நோட்டீஸ் கையில வரக் கிட்டத்தட்ட 3 மணி ஆகிற்றுது. வக்கீல் நோட்டீஸில ஒரு பிரதியை பைகான்டாக் குடுத்தது. ஒன்டை றிஜிஸ்ரர் போஸ்ற்றில போட்டது. இது தெரிஞ்சே அன்றைக்கு இரவிரவா றோட்டப் போட்டு முடிச்சிச்சினம். போட்ட குறையில நிப்பாட்டச் சொல்லித்தான் கடிதம் வந்தது, அந்தக் கடிதம் தங்களுக்குக் கிடைக்காத மாதிரிக் காட்டுறதுக்காகவோ என்னவோ இரவிரவாப் போட்டிட்டினம். இந்தக் கொங்கிறீட் போட முதல் கூட்டம் ஒன்று போட்டு, ஆக்களைக் கூப்பிட்டு, இது குறிச்சு ஆராய்ஞ்சு, கதைச்சுப் பேசாமல் தங்கட பாட்டில போட்டிட்டினம்" பாலசுப்பிரமணியம் உண்மையை திகதி, நேரம் என்று துல்லியமாகத் தெரிவிக்கின்றார். பிரதேச சபைத் தலைவர் சொல்வதைப் போன்று எதிர்ப்பு இடையில்தான் வந்தது என்பதை மறுக்கிறார் அவர்.

தன்னுடைய தவறு பிரதேச சபைக்கும் தெரியாமல் இல்லை. ஆனால், அதனை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாமல் சமாளிப்பதற்கு முயற்சிக்கிறது அது. "இந்தக் கொங்கிறீட் றோட்டால வெள்ளம் எண்டு சனம் சொல்லுறதால, வெள்ளத்தை அகற்றக் கால்வாய் கட்ட வெளிக்கிடுகினம் இப்ப என்கிறார் பாலசுப்பிரமணியம்.

"றோட்ட உடைச்சுப் பழைய மாதிரி விடச்சொல்லிக் கேட்டால்... நீங்க போடேக்க மறிச்சிருக்க வேணும் என்டு ரீ.ஓ. சொல்லுறார். போடேக்க எதிர்ப்புத் தெரிவிச்சனாங்கள்தான் அது இருக்கட்டும்... நாங்க... மக்கள் சொல்லித்தான் இந்த வீதியமைப்பு பொருத்தமில்லாதது எண்டு உங்களுக்குத் தெரியோனுமெண்டால் உங்களுக்கு... நீங்கள் ரீ.ஓ. எண்டு என்ன படிச்சிட்டு... என்னத்தத் தெரிஞ்சு கொண்டு இப்பிடியான வேலையள முன்னெடுக்கிறியள்..?"

மக்களிடம் இருந்து இந்தக் கேள்வி கொந்தளிப்புடன் வருகிறது. சுரணையுள்ள அலுவலர்களாக இருந்தால் உண்மையில் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும். வெள்ளவாய்க்காலில் 6 இஞ்சி உயர்த்தி வீதியமைக்க அனுமதித்த அந்தத் தொழில்

நுட்ப அலுவலரின் தொழிற்திறன் நீதிமன்றங்களில் சட்ட ரீதியாகக் கேள்விக்குட்படுத்தப்படவேண்டும். அவரது வேலையைச் சரிவரச் செய்ய முடியாத ஒரு அலுவலர் அதில் இருப்பதற்குப் பொருத்தமற்றவர் என்பதை உணர்த்துவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க மக்கள் பாவம் பார்ப்பதே இதுபோன்ற திட்டமிட்ட அதிகார துஸ்பிரயோகங்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிடுகின்றது.

"இப்ப ரெண்டு மாதத்துக்கு முதல் உந்தக் கொங்கிறீட்



றோட்டு இடியுதெண்டுபோட்டு உதுக்கு மேலை தார் ஊத்த வெளிக்கிட்டவை. தார் பெரல் எல்லாம் வைச்சு எரிச்சாச்சுது. ஊத்த ஆயித்தம். நாங்க மாவட்டச் செயலரிட்ட ஓடிப்போய் முறையிட்டு. உடனடியா அவர் போன் பண்ணி, ஏஜி ஒவ்பீசுக்குக் கதைச்சுத்தான் நிப்பாட்டினது.

பிரதேச செயலகத்தில உள்ள காசை எடுக்கிறதுக்கும், கணக்குக் காட்டுறதுக்கும் றோட்டுப் போட்டால் சரியே... அது பொருத்தமான திட்டமா எண்டு சிந்திக்கிறதில்லையா? கொங்கிறீற்றுக்கு மேலை யாராவது தார் ஊத்துவாங்களோ...?"

மக்கள் கேட்கிறார்கள். பொறுப்புக்கூறல் கடமையுள்ள நல்லூர் பிரதேச சபை பதில் சொல்லும? நடவடிக்கை எடுக்குமா? மக்களுக்குப் பொருத்தமற்றதாயின் அந்த அபிவிருத்தி அகற்றப்பட்டுத்தான் ஆகவேண்டும். அதிலும் இங்கு நகரத் திட்டமிடல் இன்றி, வடிந்தோடும் வெள்ளத்தை மறித்து பிரதேசத்தையே நீரில் மூழ்கடிக்கும் மோசமான செயல்முறை நிச்சயம் மாற்றப்படவேண்டும்.

பிரதேச சபை நடவடிக்கை எடுக்காவிடின், இந்த வீதியின் பின்னால் நடந்திருக்கக்கூடிய மோசடிகள், அதிகாரத் துஸ்பிரயோகங்கள் குறித்த விசாரணைகள் உடனடியாகத் தொடங்கப்பட்டு, பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

# உடங்காவயல் அடங்காது!

● ஜெரா

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குக் கரையாக இருக்கிறது ஒதியமலை என்கிற முதிய தமிழ் கிராமம். தமிழர் மரபு வழித் தாயகப் பிரதேசத்தின் எல்லையாகக் காணப்படும் இக்கிராமத்திற்கு மிக அண்மையாகச் சிங்களக் குடியேற்றங்கள் வந்துவிட்டன. 1980 ஆண்டிலிருந்து பரவிவந்த சிங்களக் குடியேற்றங்களினால் ஒதியமலைக் கிராமத்திற்கு வளம் சேர்த்த சிலோன் தியேட்டர், தனிக்கல், ஆண்டான்குளம் போன்ற பெரும் பண்ணைகள் கைவிடப்பட்டன. ஆக்கிரமிக்கப்பட்டன. இந்தப் பண்ணைகளுக்கு அடுத்திருந்த ஒதிய மலை கிராமமும் 1984 ஆம் ஆண்டு கபளீகரம் செய்யப்பட்டது.

## ஒதியமலை படுகொலை

1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் ஒதியமலைக் கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர், அக்கிராமத்தில் இருந்த ஆண்கள் அனைவரையும் பொதுநோக்கு மண்டபத்திற்கு அழைத்தனர். தாம் விடுதலை இயக்கமெனவும், அரசியல் விழிப்புணர்வு கூட்டத்திற்காக வந்துள்ளனர் எனவும் தெரிவித்தே ஆண்களை மட்டும் அழைத்தனர். கிராமத்திலிருந்த 32 ஆண்கள் அந்தக் கூட்டத்திற்குச் சென்றனர். மண்டபத்திற்குள் சென்றதும் அவர்களின் மேலாடைகளைக் களைந்து, கைகளைப் பின்னால் வைத்துக் கட்டியதுடன், கண்களையும் கட்டினர். அதன் பின்னர் 27 ஆண்களை அவ்விடத்திலேயே சுட்டுக்கொன்றனர். ஐவரை தாம் வந்த ட்ராக்டர் வண்டிகளில் ஏற்றிச்சென்று, வீதியின் நடுவில் ரயர்களுடன் கட்டிவைத்து எரியூட்டி சென்றனர்.

## படுகொலைக்குப் பின்னர்

இந்த அதிர்ச்சிகரமான, குரூரமான படுகொலைக்குப் பின்னர் ஒதிய மலைக் கிராமத்தில் இருந்த அனேக குடும்பங்கள் ஆண் தலைமைத்துவத்தை இழந்தன. பெண்கள் மட்டுமே அங்கு வாழ்வது சாத்தியமற்றதாகியது. அள்ள அள்ளக்குறைபடாத விவசாய நிலங்களையும், ஆயிரக் கணக்கான ஏக்கர் வயல் கிராமங்களையும் விட்டு ஒதியமலை மக்கள் வெளியேறினர். கிராமம் மக்களற்ற பகுதியாகியது. வயல்களைக் காடு விழுங்கியது. 1984ஆம் ஆண்டுக்குப் பின்னர்



2002ஆம் ஆண்டு புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் சிலர் ஒதியமலைக் கிராமத்தில் மீள்குடியேறினர்.

அடிக்கடி தாக்குதல் நடக்கும் எல்லைப் பகுதியாக அக்கிராமம் இருந்தபடியால் அவர்களால் அங்கு அச்சமின்றி வாழமுடியவில்லை. 2005ஆம் ஆண்டுடன் மீளவும் இடம்பெயர்ந்துவிட்டனர். அதற்குப் பின்னர் 2010 மீளவும் குடியேறினர். படிப்படியாக தம் விவசாய நிலங்களைத் துப்புரவு செய்து, வாழத்தொடங்கினர்.



## காடாக மாறிய கிராமம்

கொரோனா காலத்தில், மக்கள் பாவனையற்றுக் கிடக்கும் காணிகளை இராணுவம் எடுக்கப்போகிறது என்ற செய்தி தீயாகப் பரவியது. அது ஒதியமலைக் கிராமத்தையும் தொற்றிக் கொள்ள, காணிக்குரிய ஆவணங்கள் இருக்கின்ற விவசாயக் காணிகள், வயல் காணிகளை அக்கிராம மக்கள் விரைவாகத் துப்புரவு செய்தனர். இறுதியாகத் தண்ணிமுறிப்புக் குளத்தின் அலைகரைப் பகுதியாக இருக்கின்ற உடங்காவயல், கறிவேப்பிலைமுறிப்பு உள்ளிட்ட ஆயிரக் கணக்கான ஏக்கருடைய வயல் கிராமங்களைத் துப்புரவு செய்யத் தொடங்கினர்.



1984ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கு விதைப்புகள் இடம்பெறாமையினால் அது பெரும் வனமாக மாறியிருந்தது. காட்டு மரங்கள் முளைத் திருந்தன. ஆனால் அதற்குள் கிணறுகள், பயன்தரு மரங்களும் இருக்கின் றன. 2002ஆம் ஆண்டில் கூட சிலர் வயல்களைத் துப்புரவு செய்து விதைப் பில் ஈடுபட்டமைக்கான சான்றுகள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் காணிகளுக்குரிய அனுமதிப் பத்திரங்களை அவர்களிடம் உண்டு.

## உடங்காவயல் பிரச்சினை

காணி அனுமதிப் பத்திரங்களுடன் சென்று உடங்காவயல் பகுதியைத் துப்புரவு செய்யும்போது அப்பகுதிக்கு வருகை தந்த இராணுவத்தினர் அதனைத் தடுத்துநிறுத்தினர். அந்தப் பகுதி மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குரியதெனவும், அவர்களின் அனுமதியில்லாமல் துப்பரவு செய்ய முடியாதெனவும் தெரிவித்தனர்.

'இல்ல. இது எங்கட வயலுகள். அதுக்காக 1974ஆம் ஆண்டு எடுத்த அனுமதிப் பத்திரங்களே எங்களிட்ட இருக்கு' என வாதிட்ட முதியவர் ஒருவரிடம் இராணுவம் சொன்னது, இதையெல்லாம் கிழிச்செறிஞ்சு போட்டு மகாவலியிட்ட ஆக்கள அனுப்பிவிடுவம். நீங்க விவசாய கந்தோருக்கு போகத் தேவையில்ல. வெலி ஓயாவில் இருக்கிற மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு போங்கோ' என அறிவுரை சொன்னது.

'இதைக் கேட்க நாங்கள் தயாரில்ல. எங்கட காணிகளை நாங்கள் துப்புரவாக்குவம். ஆக்களில்லாத பகுதிகள விட்டு மிச்சத்த எல்லையிடுவம். இதெல்லாம் எங்கட வயலுகள். எனக்கு விவரம் தெரிஞ்ச காலம் முதல் நாங்கள் தான் விதைச்சுவாறம். இதை நாங்கள் விட்டுக்குடுக்கமாட்டம். விவசாயம் தானே செய்யிறம். அது நாட்டுக்குத் தானே உதவுது. நாங்கள் எங்களுக்காக மட்டும் இங்க நிற்கயில்ல. நாட்டு மக்கள் எல்லாருக்கா வும்தான் விவசாயம் செய்யிறம்' எனக் கூறியபடி, உடங்காவயல் கிராமத்தை எல்லையிடும் பணியில் ஈடுபட்டி ருக்கிறார் சு.கந்தசாமி அண்ணன். உடங்காவயல் அடங்கிப் போகக் கூடாது என்ற பிரார்த்தனை நாம் அனைவரினதுமாகட்டும். ■

# தமிழ்த் தேசியம் என்பது வடிவமைக்கப்பட்ட ஒன்றல்ல...!

■ **வி.அருணாசலம்**



தமிழ்த் தேசியம் என்பது ஈழத் தமிழருக்கான ஒரு வாழ்க்கை முறையாக வடிவமைக்கப்படவில்லை என்பதற்குத் தமிழ்த் தேசியத்துக்குத் தலைமை தாங்குபவர்களாகக் கூறிக்கொள்பவர்களுக்கிடையில் மீளவும் மீளவும் நடந்தேறிக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற அரசியலுக்கான போட்டியும், ஒற்றுமையின்றி அவர்கள் காலத்துக்குக் காலம் பிளவுபட்டுச் செல்வதும் தக்க உதாரணங்களாகும். இந்தப் பிரிவின் அண்மைய உதாரணமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து வெளியேற்றப்பட்ட சட்டவாளர் மணிவண்ணனைக் குறிப்பிட முடியும். தமிழர் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவதற்குப் முதன்மைத் தடையாக இருப்பது அவர்கள் மத்தியில் இருக்கின்ற சாதிப் பாகுபாடுகள். அந்தச் சாதிப் பிரச்சினைக்குத் தமிழ்த் தேசியம் தீர்வு காணாமல் இருக்கும்வரை அது சிங்கள ஆட்சியாளர்களுக்குச் சாதகமான சூழலையே கொடுக்கும்.

### சாதி என்கிற முளை

சாதிப் பிரச்சினையை ஒரு பிரிவினரின் கட்டமைப்புக்குள் நாவலர் கொண்டு வருவதற்கு முன்னரே இந்தத் தமிழ்த் தேசியம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. நாவலரோ, சேர் பொன் இராமநாதனோ, தந்தை செவல்வாவோ, அமிர்தலிங்கமோ, சம்பந்தனோ இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்கவும் இல்லை. இந்த மக்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கருதிப் பெருந்தொகையான மக்களை ஆள நினைத்தார்கள். இது தமிழ்த் தேசியத்துக்கு முற்றிலுமான எதிர் முனைப்பாக அமைந்தது.

தேச வழமைச் சட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்து நிலத்தைத் தமக்குச் சாதகமாக ஒரு பகுதியினர் உருவாக்கிக் கொண்டார்கள். இதேபோல மட்டக்களப்பிலும் முக்குவச் சட்டம் அங்குள்ள ஒரு சாதியினருக்குச் சேவை செய்வதாக அமைந்தது. ஆனால், யாழ்ப்பாணத்து ஆதிக்க சாதியினரும் மட்டக்களப்பு ஆதிக்க சாதியினரும்; திருமண உறவு, கலாசார - பண்பாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் என எதையும் தமக்கிடையில் சட்டமாக்கவில்லை. இதனால் தமிழ்த் தேசியத்துக்கு இடையூறாகப் பிரதேச வாதமும் மேலோங்கியது.

### தமிழ் அரசுக் கட்சியின் தமிழ்த் தேசியம்

தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட கட்சிக்குத் 'தமிழ் அரசுக் கட்சி' எனப் பெயரிடப்பட்டதே தவிர அந்தக் கட்சி உருவாவதற்கு முன் தமிழ்த் தேசியம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றோ சாதி ரீதியாகவோ, பிரதேச ரீதியாகவோ, மக்களுக்கான ஒதுக்கீடுகள் பற்றியோ எதையும் வரையறுத்து யாப்புகள் எவையும் எழுதப்படவில்லை. ஆங்கிலம் கற்ற ஒரு பிரிவினர் தாம் கோலோச்சுவதற்காகக் கட்சி ஒன்று அமைக்கப்பட்டதாகவே அது அமைந்தது. அது இறுக்கமாகத் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவதாக இருக்கவில்லை.

### தமிழ்த் தேசிய உடைவு எது?

சிங்களவர்களுக்கு அநகாரிக தர்மபால இருப்பதுபோல யாழ்ப்பாணத்து வேளாளர்களுக்கு ஆறுமுக நாவலர் இருந்தார். அவரால் வடிவமைக்கப்பட்ட ஒரு சாராருக்கு மட்டுமேயான கல்வி என்ற விடயம் ஊக்கப்படுத்தப்பட்டதால் ஏனைய சமூக மக்கள் கல்வி பெறவும் அரச பதவிகளை வகிக்கவும் வாய்ப்புகள் குறைவாக்கப்பட்டன. இன்றைய சூழலில் அது பெருமளவுக்கு மாறிவிட்டது உண்மை என்றாலும் தொடக்கத்தில் இந்த நிலை இருந்ததை எவரும் மறுக்க முடியாது.

இங்கு தமிழ்த் தேசியம் ஒருபோதும் கட்டி வளர்க்கப்படாத நிலையில் கட்டி வளர்க்கப்பட்ட ஒரு சமூகத்தினருக்கான தேசியம் சுக்கு நூறாக உடைந்து செல்வதைத் தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சி என்று கூற முடியாது. முன்னர் கட்டி வளர்க்கப்படாத தேசியம் அழிகிறது என்று கூறுவதிலுள்ள சூக்குமம் இதுவே. இந்த ஆதிக்க சாதித் தேசியவாதிகள் பார்த்திருக்கப் பழமை வாய்ந்த இந்துக் கோவில்கள் பல அவர்களாலேயே உடைக்கப்பட்டுப் புதிதாகக் கட்டப்பட்டதால் தமிழரின் பாரம்பரியம் தமிழர்களாலேயே அழிக்கப்பட்டது. (தமிழர் பாரபம்பரியத்தை நிரூபிக்க வைரவர் கோவில்களும், நாகதம்பிரான் கோவில்கள் சிலவும் இன்றுமுள்ளன. இவை உயர் சாதியினர் அல்லாதவர்களால் பெருமளவில் பேணப்பட்டு வருகின்றன) **தமிழ்த் தேசியத்தைக் கட்டி வளர்த்தவர் பிரபாகரன் மாத்திரமே!**

தமிழ்த் தேசியத்தைக் கட்டி வளர்ப்பதற்கான சூழல் ஒன்று பிரபாகரன் தலைமையிலான புலிகளின் போராட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, கலை கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பது, சாதி ஒழிப்பு (நாவிதர், வண்ணார், பறையர் போன்ற சாதிகள் வீடுகளுக்குச் சென்று குடிமை வேலை செய்வது நிறுத்தப்பட்டு அவர்களின் தொழிலை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டு வந்தனர்) பாரம்பரியக் கலைகளை வளர்ப்பது, ஈழத் தமிருக்குகென்றிருந்த நாட்டுக் கூத்து, சிலம்பம் போன்ற கலை வடிவங்கள் மீள உருவாக்கப்பட்டன. அவை ஈழத்தமிழர் அடையாளமாக வெளிக் காட்டப்பட்டன. புலிகளின் நிழல் நிர்வாகத்தில் பல்வேறு துறை சார்ந்த நிழல் அமைச்சுகள் மூலம் இவை பேணப்பட்டன. ஆனால் புலிகளுக்குப் பின்பான அரசியல் தலைவர்களால் அவை பற்றித் துளியளவும் கவனமெடுக்கப்படவில்லை.

> “உரியவாறு தேசியம் கட்டி வளர்க்கப்பட்டிருந்தால் சாதி, பிரதேச ரீதியாகத் தமிழ் மக்கள் பிரிந்து நிற்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. புறக்கணிப்புக்குள்ளான மக்களுக்குத் தமிழ்த் தேசியம் இதுவரை எந்தவிதமான நேர்க்கணிய சேவைகளையும் செய்யவில்லை.

### தேசிய உருவாக்கத்துக்கு...

தமிழ்த் தேசியம் என்பதை உருவாக்குவதற்கு அதன் நிலப்பரப்பு அங்கு காணப்படும் கடல், நில வளங்கள், சமூக ஒற்றுமை பாரபட்சமற்ற சமமான பங்கீடு, கல்வி வளர்ச்சி, உழைப்பு போன்ற விடயங்கள் ஏற்கனவே வரையறை செய்யப்பட்டிருக்க வேண்டும். தமிழ்த் தேசியம் பேசியவர்கள் அல்லது பேசுபவர்கள் நாடாளுமன்ற அரசியலையே தமிழ்த் தேசியம் என்று அர்த்தப்படுத்திக் கொண்டார்கள். இதன் விளைவாக தமிழ்த் தேசியத்துக்கான கட்டமைப்புப் பேணப்படவில்லை. தொகையில் அதிகமான மக்கள் உயர் சாதியினர் அல்லாதவர்களைப் நாடாளுமன்றத்துக்கு அனுப்பாது தடுப்பது தமிழ்த் தேசியத்தின் அடையாளமாகிவிடாது.

1976ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனமும் 1977ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றி பெற்றதும் ஓர் உணர்ச்சி அரசியலே தவிர தமிழ்த் தேசியத்துக்கான தீர்மானமாக இருக்கவில்லை. மிக நீண்ட காலமாகத் தமிழரைப் பெரும்பான்மை மக்கள் பாதிப்புக்குட்படுத்தி வருவதால், அவர்கள் தென்னிலங்கை சார் சிங்களக் கட்சிகளை நோக்கி நகர வேண்டிய நிலைக்கு உந்தப்பட்டுள்ளனர். இந்தப் போக்குக்கு வித்திட்ட - தற்போது தமிழ்த் தேசியவாதிகள் என்று கூறிக் கொள்பவர்களிடம் இதைத் தடுத்து நிறுத்தக்கூடிய பொறி முறைகள் எவையும் இல்லை.

### காலம் கடந்த தேசிய அக்கறை

தாம் முன்னெடுத்த நாடாளுமன்ற அரசியல் பொறிமுறையில் பின்னடைவு ஏற்பட்ட பின் தமிழ்த் தேசியம், தமிழரின் ஒற்றுமை பற்றிப் பேசுவது என்பது காலம் கடந்த கரிசனையாகும். உரியவாறு தேசியம் கட்டி வளர்க்கப்பட்டிருந்தால் சாதி, பிரதேச ரீதியாகத் தமிழ் மக்கள் பிரிந்து நிற்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. புறக்கணிப்புக்குள்ளான மக்களுக்குத் தமிழ்த் தேசியம் இதுவரை எந்தவிதமான நேர்க்கணிய சேவைகளையும் செய்யவில்லை. தமிழ் மக்கள் தொகையில் பொரும்பாலானவர்களாகவுள்ள இந்த மக்கள் சிங்களத் தலைவர்களால் பாதிப்புக்கு உள்ளாகவில்லை. இவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டது போலியான தமிழ்த் தேசியத்தைக் கையில் வைத்திருக்கின்ற அனைத்துத் தமிழ்த் தலைவைர்களாலுமேயாகும்.

உரியவாறு வடிவமைக்கப்படாத தமிழ்த் தேசியம் அழிந்து வருகிது என்று நாடாளுமன்ற அரசியலை வைத்துத் தீர்மானிப்பது சரியான சமூகச் சுட்டியாக இருக்க முடியாது. உலகில் பல்வேறுபட்ட காலகட்டங்களில் தமது மக்களுக்காகத் தலைமை தாங்கி வெற்றி கண்டவர்கள் தமது தேசிய இனத் தன்மைகளின் ஊடாகவே அவற்றைச் சாதித்தனர். அதற்காக அவர்கள் இன்றும் நினைவுகூரப்படுகின்றனர். அத்தகைய இலக்கை நோக்கிப் பிரபாகரனால் மட்டுமே பயணிக்க முடிந்தது.

---

## என்ர அவர் கனடாவிலை...



*என்ர அவர் கனடாவில*
*உதடுகளில் அவள்*
*பெருமையைப் பூசியிருந்தாள்*
*இதயக் குமுறலை*
*மறைப்பதற்காக*
*விழிகளில் தீயை*
*எரிய விட்டிருந்தாள்*
*கசியும் கண்ணீர்*
*காய்ந்து போவதற்காக*

*இருமனம் ஒருமனமாகி*
*வண்ணக் கனவுகளுடன்*
*மணவறை கண்டு*
*வாழ்க்கை நதியில்*
*ஆடித் திளைத்திட*
*ஏங்கிய உள்ளங்கள்*
*இரண்டும் இரண்டு நாடுகளில்*
*வாலிபத்தின் வஞ்சனைகள்*
*பெற்றவரின் ஏக்கங்கள்*
*உற்றவரின் ஏளனங்கள்*
*அயலவரின் முணுமுணுப்புக்கள்*
*ஊரவரின் கண்வீச்சுக்கள்*
*நண்பர்களின் அனுதாபங்கள்*
*புதியவர்களின் விசாரிப்புக்கள்*
*அத்தனையும் அவள் சுமந்தாகனும்*

*சலனமற்ற சாயம் பூச*
*அவள் கற்றுக்கொண்டாள்*

*ஆனால்*
*மனசு மட்டும்*
*நீரில் மிதக்கின்ற வாத்தின்*
*கால்கள்போல*
*கனடாவை நோக்கி*
*ஓய்வின்றி...*

**- மோகன் சபாபதி**

# உப்பிட்டவரை உள்ளளவும் நினை!

தி.சுதர்மன்
(அரச சித்தமருத்துவர்)

நாம் ஏன் உப்பிட்டவரை ஆயுள் உள்ளவரை நினைக்க வேண்டும்? எமது ஆரோக்கியத்தில் பெரும் பங்கு வகிப்பது உப்பு. மனித குல முன்னேற்றத்துடன், அதாவது மனிதன் சமைத்துண்ண ஆரம்பித்ததிலிருந்து மனிதனின் சுவையில் முக்கிய பங்கை உப்பு வகித்து வருகின்றது. மனிதனுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களில் ஒன்றான சோடியம் உப்பிலே தாராளமாகக் காணப்படுவதுடன், உப்பை உணவுடன் நாம் உள்ளெடுப்பதன் மூலம் எமது உடலுக்கு அது கிடைக்கின்றது.

கடுமையான உடல் உழைப்பாளிகளுக்கு சாதாரனமானவர்களைவிட உப்புச்சத்து அதிகமாகத் தேவைப்படுகின்றது. சாதாரணமான ஒருவருக்கு ஒரு நாளைக்கு 5 கிராமிலும் குறை வான உப்புப் போதுமானதாக உள்ளது. ஒருவர் ஆகக் கூடுதலாக 5 கிராம் உப்பு உணவுடன் சேர்த் துக்கொள்ளலாம். (அண்ணளவாக ஒரு தேக்கரண்டி).

**ஏன் உப்பின் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும்?**


பொதுவாக உப்பு கூடுதலாக உணவுடன் உள்ளெடுக்கப்படும் போது, குருதி அழுத்தம் அதிகரிக்கின்றது. இந்த அதிகரிப்பானது வயதுடன் அதிகமாகத் தொடர்புபடுகின்றது. இதனாலேயே உயர் குருதி அழுத்தம் உள்ளவர்களுக்கு உப்பைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகின்றது. அத்துடன் உப்பு அதிகமாக உள்ளெடுக்கப்படும் போது, உடலில் இருந்து கல்சியம் ஆனது சிறுநீருடன் வெளியேற்றப்படுகின்றது. இதனால் உடலுக்குக் கல்சியத்தின் தேவை அதிகரிக்கின்றது. போதுமான அளவு கல்சியம் உள்ளெடுக்கப்படாத போது உடலில் உள்ள கல் சியம் வெளியேற்றப்படுகின்றது. இதனால் என்பு, என்பமூட்டுக்கள் ம் பந்தமான பிரச்சினைகள் உருவாகின்றன.

பொட்டாசியம் உயர்வாக உள்ள உணவு வகைகள் குருதி அழுத்தத்தை குறைக்கின்றன. பழவகைகள், மரக்கறிவகைகளில் பொட்டாசியம் உயர்வாகக் காணப்படுவதால், மேற்படி உணவுகளை அதிகமாக உட் கொள்ள அறிவுறுத்தப்படுகின்றது. இதனாலேயே முன்னோர்கள் உணவுக்குக் குறைந்தளவு உப்பைச் சேர்த்துள்ளனர். மேலதிகமாக உப்புச் சுவை தேவைப்படுவோர், உணவுடன் உண்கலத்தில் வேறாக வைக்கப்படும் உப்பில் இருந்து சேர்த்துக்கொள்ளலாம்.

இதைப் பரராசசேகரம் என்னும் வைத்தியநூல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

சுத்தியா லமுதந் தன்னைத் துலங்கவே படைத்த பின்பு
சுத்தியாஞ் சலமுப் போடு சுவைக்கறி சூழ வைத்துச்
சுத்தியால் நெய்வே தித் துச் சூழ்ந்துமுக் கால்நீர் விட்டுச்
சுத்தியா போசனங்கள் கொள்வது சுத்தியாகும்.

சுத்தப் படுத்திய உண் கலத்தில் சோற்றினைப் படைத்து நீர், உப்புச் சேர்த்துச் சமைத்த சுவையான கறி வகைகளைச் சூழவைத்து நெய் விட்டு, உண் கலத்தை நீரினால் மூன்று முறை சுற்றி நீர் தெளித்து உணவை உட்கொள்ள வேண்டும். என்பது இந் தச் செய்யுளின் விளக்கம்.



**அயோடின் கலந்த உப்பை எவ்வாறு பயன்படுத்துவது?**

தற்போது உப்பைக் குறைவாக உள்ளெடுக்கச் சொல்வதுடன், அயோடின் சேர்ந்த உப்பைப் பயன்படுத்துமாறும் சொல்லப்படுகின்றது. இதனால் தை ரொய்ட் தொடர்பான பிரச்சினைகள், குறைபாடுகள் தவிர்க்கப் படுகின்றன. அயோடின் குறைபாட்டால் மனநலக் குறைபாடுகள், உடல் வளர்ச்சி, விருத்திக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

கறுத்த, அல்லது கருமை சார்ந்த போத்தல்களில், உப்பை அடைத்து வெப்பம் தாக்காத இடங்களில் வைத்திருக்க வேண்டும். (அடுப்பில் இருந்து தள்ளி வைத்திருக்க வேண்டும்.) அயோடின் கலந்த உப்பை உணவுடன் சேர்க்கும்முன் நீரில் கழுவக்கூடாது. உணவு அவிந்த பின்னரோ, அல்லது சமைக்கப்பட்ட பின்னரோ தான் உப்பு சேர்க்கப்படவேண்டும்.



**உப்புப் பாவனையை எவ்வாறு குறைப்பது?**

1. உணவுடன் சேர்க்கப்படும் உப் பின் அளவைப் பகுத்தல், சரியான அளவுகளில் அளவிடுதல், வேறு சுவையூட்டிகளைச் சேர்த்துக் கொள்ளல்.
2. எந்தெந்த உணவுகளுக்கு உப்புச் சேர்க்கப்பட்டுள்ளது? என்பதை அறிந்து அதற்கேற்றவாறு உப்பைச் சேர்த்துக்கொள்ளல்.
3. தயாரிக்கப்பட்ட உணவுகளில் சேர்க்கப்பட்ட உப்பின் அளவுகளைச் சுட்டிகளில் பார்த்துத் தெரிந்தெடுத்தல்.
4. வியாபார ரீதியாகத் தயாரிக்கப்பட்ட உணவுகளைத் தவிர்த்தல். காரணம் உணவு தயாரிப் பின்போது அதிகளவிலான உப்பு சேர்க்கப்படுகின்றது.
5. குழந்தைகளுக்கு உப்புச் சுவையை, உப்பைத் தாமதமாக அறிமுகப்படுத்தல். இப்போது பல பெற்றோர்கள் உப்பைத் தாமதமாக அறிமுகப்படுத்துகிறோம் என்று கூறிக்கொண்டு உணவில் உப்பைச் சேர்க்காது விடுகின்றனர். அத்துடன் கடைகளில் தாராளமாக உப்புக்கள் சேர்க்கப்பட்ட தின்பண்டங்கைளை வழங்குகின்றனர், இது தவறு.

உப்புப் பாவனையில் தமிழ்ச் சமுதாயம் எவ்வாறு மேம்பட்டு இருந்தது என்பதற்கு பரராச சேகரத்தில் உள்ள பின்வரும் பாடல் உதாரணமாகின்றது.

மிக்கவா தர்க்காம் நித்தம் விரும்புகல் லுப்புத் தானும்
தக்கவெம் பித்தத் தோர்க் கா சமுத்திர லவணந் தானும்
ஒக்குமே சேர்ப னத்தோர்க் குரைத்தவிந் துப்புத் தானும்
முக்கணர் விந்தோ டாதி முப் பிணிக் கிந்துப் பீடாம்.

வாத உடம்பின ருக்குக் கல்லுப்பும், பித்த உடம் பினருக்குச் சமுத்திர உப்பும், கப உடம்பினருக்கு இந்துப்பும் உகந்தது எனவும், முக்கண் உடைய சிவனால் படைக்கப்பட்ட, விந்திலிருந்து உருவாகிய மனிதனுக்கு ஏற்படும் அனைத்துப் பிணிகளுக்கும் இந்துப்புச் சிறந்ததாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

> உப்பைக் குறைவாக உள்ளெடுக்கச் சொல்வதுடன், அயோடின் சேர்ந்த உப்பைப் பயன்படுத்துமாறும் சொல்லப்படுகின்றது. இதனால் தைரொய்ட் தொடர்பான பிரச்சினைகள், குறைபாடுகள் தவிர்க்கப்படுகின்றன. அயோடின் குறைபாட்டால் மன நலக் குறைபாடுகள், உடல் வளர்ச்சி, விருத்திக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

**மருந்துக் கடைகளில் உப்பு**


பொதுவாகத் தமிழ் மருந்துக்கடைகளில் கிடைக்கும் மேற்படி உப்புக்களைப் பற்றித் தற்போதும் பெரும்பாலனவர்களுக்கு தெரியாது.

அத்துடன் பெரும்பாலான சித்த மருத்துவர்கள் அலோபதியை கொள்ளையை அடிப்படையாகக் கொண்டு மருத்துவம் பார்க்கின்றமையால், வாத, பித்த, சிலேற்பன உடற் தன்மைகளும் அதற்கேற்றாற்போல மருத்துவம் பார்க்கும் நடைமுறையும் குறைந்து வருகின்றமை எமது அறியாமையையும், பாரம்பரியங்களைப் பேணுவதில் உள்ள அசிரத்தையையும் காட்டி நிற்கின்றது.

இவை ஆய்வுக்குரியன. சரியான முறைகளில் உப்பிட்டிருப்பின் உயிர் உள்ளளவும் நினைப்போம். பாரம்பரியங்களை பேணுவோம், வளமோடு வாழ்வோம். ■

**மூளைக்கு வேலை** (புதிர்)

1



கையெடுக்காமல் 4 கோடுகள் மூலம் அனைத்துப் புள்ளிகளையும் இணையுங்கள்

# அதிஷ்ட இலாபம் எனும் பெரும் சூது!



■ கமலநாதன்

'அதிஷ்டம் என்பது நினைத்தோ, எதிர்பார்த்தோ வருவதில்லை. நினையாப் பிரகாரமாக வருவதே' என்று அந்த நகருக்குள் அதிஷ்ட லாபச் சீட்டுகளை விற்பவர் ஒலி பெருக்கி மூலம் கூவிக்கொண்டிருந்தார். அவரது கூற்றுக்குச் சமமானதாகவே (நினையாப் பிரகாரம்) அதில் கஸ்ரமும் வரும் என்பதைச் சாதாரண மக்கள் புரிந்துகொள்வதில்லை. அந்தச் சீட்டுத் துண்டுகளை வாங்கினால், கோடி ரூபாய், லட்ச ரூபாய்கள் என ஒரு நொடியில் கையில் கிடைத்துவிடும், அவ்வாறு கிடைத்தால் தமக்குள்ள பொருளாதார நெருக்கடிகள் எல்லாவற்றையும் தீர்த்துவிட்டுக் காலாட்டிக் கொண்டு இருந்துவிடலாம் என்று எண்ணிவிடுகின்றனர். பெரும்பாலும் குறைந்த வருமானம் பெறுபவர்களின் மன நிலை இப்படியிருக்கிறது.

### பற்பல விதத்தில் கொள்வனவாளர்கள்

அதிஷ்ட லாபச் சீட்டுக்களை விற்பனை செய்யும் கடையில் அவதானித்த விடயமிது. கூலி வேலை செய்யும் ஒருவர், வேலையை முடித்துக் கொண்டு, வீட்டுக்குச் சாமான்களை வாங்கிக் கொண்டு, சைக்கிளில் அவற்றையெல்லாம் ஒன்றாக முடிந்துகட்டியவாறு, 20 ரூபாவுடன் வந்து ஒரு சீட்டை வாங்கி அந்தச் சீட்டைப் பத்திரப்படுத்தி வைத்தார். "அவர் உங்களிட்டைத் தொடர்ந்தும் ரிக்கெற் வாங்குறவரா?" என்று அந்த விற்பனையாளரிடம் கதைவிட்டபோது "ஓமோம்! அவர் கன காலமாக என்னட்டை ரிக்கெற் எடுக்கிறார். ஒரு சில நேரங்களிலை ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த தொகை அவருக்கு விழுந்திருக்குது. ரிக்கெற் வாங்க வாற ஆக்களிலை சில பேரின்ரை குடும்பச் சூழலைப் பார்க்கிறபோது ரிக்கெற்றை வாங்கிறதுக்காக ஆசையோடையும், தங்களுக்கு ஏதாவது விழாத என்ற ஆவலோடையும் காசை என்னிடம் நீட்டுவார்கள். மனதுக்குக் கஸ்ரமாக இருக்கும். என்ன செய்வது இது சட்டப்படி அனுமதிக்கப்பட்ட தொழில் என்பதால் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது" என்றார்.



### சிலர் கவலை கொள்வதில்லை

"நான் அவ்வப்போது சந்தர்ப்பம் கிடைக்கும்போது ரிக்கெற் வாங்கிறனான். 20ரூபாவுக்குக் குறைந்த தொகைதான் அதிகமா எனக்கு விழுந்திருக்குது. அப்பிடி விழுந்தாலும் அந்தக் காசை நான் வாங்குறதில்லை. அதுக்குப் பதிலாயும் ரிக்கெற்தான் வாங்குவன். ஒரு ஐந்து லட்சமாவது விழுந்தால் நல்லது என்று நினைப்பன். விழ்வில்லை என்பதற்காகக் கவலைப்படுவதில்லை" என்றார் ஒருவர். அவர் 5 வருடங்களாகத் இப்படியாகத் தொடர்ந்தும் சீட்டுகளை வாங்கி வருகின்றாராம்.

குருநாகல் மாவட்டப் பகுதியில் 10 லட்சம் ரூபா விழுந்த ஒருவரைச் சந்திக்கக் கிடைத்தது. அவர் கூறினார், "பல வருடங்களாகச் ரிக்கெற் வாங்கி வருகிறேன். நான் எடுத்த ரிக்கெற்றுகளை நூறு நூறாக அடுக்கிக் கட்டிப் பெட்டியில் போட்டு வைச்சிருக்கிறன். அவற்றின் காசுப் பெறுமதி 20 லட்சங்கள் வரை வரும் போல" அவருக்கு விழுந்திருந்ததோ வெறும் 10 லட்சம் ரூபா.

### லொத்தரால் பயனடைவதும் குறைவு

அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் பணம் விழுந்தால்கூட அவர்கள் பணக்காரர் ஆகவோ அதை வைத்து வேறு முதலீடுகளைச் செய்பவர்களாகவோ இருப்பது அரிது. அவர்கள் ஏற்கனவே பெருந் தொகையான பணத்துடன் புழங்கிப் பழக்கமில்லாதவர்களாக இருக்கின்ற பட்சத்தில் தமக்குத் திடீரெனக் கிடைக்கின்ற பணத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்று அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை.

திடீரெனக் கிடைக்கும் அதிக பணத்தை ஆடம்பரமான செலவுகளில் செலவிட்டு முடித்து விடுகின்றனர். மது அருந்தும் பழக்கமுள்ள நபர் ஒருவர் அதிஷ்டலாபச் சீட்டுகளை வாங்குவது வழமை. "எனக்கு பெரிய காசொண்டு விழுந்தால் நான் முதலில் செய்யிற வேலை உந்தக் குடியைக் கைவிடுறது தான். இல்லாவிட்டால் குடியில் அந்தப் பணம் அழிந்துவிடும்" என்றார். அவர் குடியை விடுகின்ற வாய்ப்பைச் சீட்டிழுப்பு இற்றை வரை அவருக்கு வழங்கவே இல்லை.

### திடீர்ப் பணக்காரர் ஆகும் ஆசை

சிலர் சாத்திரம், சாதகம் என்பனவற்றை நம்பித் தாம் திடீர்ப் பணக்காரராக மாறிவிட வாய்ப்புண்டு என்ற எதிர்பார்ப்பிலும் அதிக பணத்தை அதிஷ்டலாபச் சீட்டு வாங்குவதற்குச் செலவிட்டுப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பல இளைஞர்கள் தமது ஆடம்பர வாழ்க்கைக்கு உடனடிப் பணம் கிடைத்தால் நல்லாயிருக்கும் என நினைத்து நாளாந்தம் ரிக்கெற்றுகளை அதிகளவில் வாங்குகின்றனர். திடீர்ப் பணக்காரர் ஆகிவிடும் ஆவலில் தினமும் செலவிடும் பணம் என்பது அவர்களின் கையிலிருக்கும் பணமே. அதைப் பத்திரப்படுத்தினாலேயே மிக இலகுவாக ஒரு தொகைப் பணத்தைச் சேமிக்க முடியும்.

### லொத்தர் நிறுவனங்கள்

லொத்தர் சீட்டுகளை தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனங்கள் தமக்குக் கிடைக்கின்ற பணத்தில் மிகச் சிறிய தொகையை, ஒரு சிலர் வெல்லக்கூடிய வகையில் பேணி வருவது அவர்களின் உத்தி. பல கோடி ரூபா புழங்குகின்ற இந்த வியாபாரத்தில் ஏழை மக்களால் கொள்வனவு செய்யப்படும் சீட்டுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. பணக்காரர்களைப் பொறுத்த வரையில் ரிக்கெற் வாங்குவது பொழுது போக்காகவும், ஏழைகளுக்குச் சீவன் போகும் ஆடுகளமாகவும் இருக்கும். ஏழை மக்களின் மனநிலைத் தளம்பலும், தாம் தொடர்ந்தும் ஏழையாக இருக்கப் போவதில்லை என்ற நம்பிக்கையும் இந்த அதிஷ்டத்தின் பின்னால் அவர்களை பயணிக்க வைக்கிறது.

பலரது பணத்தை ஒன்றுதிரட்டி அதில் குறிப்பிட்டளவு தொகையை ஒரு சிலருக்கு வழங்கிவிடுகின்ற இந்த லொத்தர் நடவடிக்கைகளை, சட்டரீதியான அங்கீகாரத்துடன் நடக்கின்ற சூதுகள் என்று சொன்னால் அதில் தவறு ஒன்றும் இருக்க முடியாது. ■

---

# அப்பிளும் வெள்ளரியும்

சோ.ப

திருநெல்வேலிச் சந்தை
காலை ஏழு மணி
நடைபாதையில் இரண்டு குவியல்கள்
கள்ளிப் பெட்டியின் மேல்
அழகாக அடுக்கப்பட்டிருந்தன
அப்பிள்கள்
பக்கத்தே - நிலத்தில் - சாக்கின் மேல்
குவிக்கப்பட்டிருந்தது வெள்ளரி!

புதிய சூழலை
தன் ஸ்பொன்ஜ் கண்ணறை ஊடாக
வியப்போடு பார்த்த ஒரு அப்பிள்
எந்தச் சலனமுமற்றுக் கேட்டது
'நீ யார்?'

தன் ஊரில் வந்து
தளுக்கி மினுக்கிக் கொண்டு
தன்னையே யாரென்று கேட்கும்
அப்பிள் மேல் கோபம் வந்தாலும் -
இந்தக் கேள்விகளுக்குப் பழகிப்
போனதால்
பொறுமையொடு பதிலளித்தது
வெள்ளரி:
'நான் வெள்ளரி!'

'எங்கிருந்து
வருகிறாய்?'
'சங்குவேலி!'
'எப்படி வந்து
சேர்ந்தாய்?'
'மாட்டு வண்டிலில்'
'அது சரி நீ யார்?'
வெள்ளரி கேட்டது.

'நான் அப்பிள்'
'எவடம்'
'அவுஸ்திரேலியா'
'எப்படி வந்து
சேர்ந்தாய்?'
'கப்பலிலை'
பெருமையோடு சொன்னது அப்பிள்!
வெள்ளரியின் குடலையை
வியப்போடு பார்த்த அப்பிள் கேட்டது
'நீ போட்டிருக்கும் சட்டைக்கு என்ன
பேர்?'
'பனை ஓலை!'
அதை இளக்காரமாகப் பார்த்தது
ஸ்பொன்ஜ் இல் பொதிந்திருந்த அப்பிள்
'உன்னை எப்படிச் சாப்பிடுவதாம்?'




'பனங்கட்டியோடு!'
'அப்ப உனக்கு இயற்கையான இனிப்பு
இல்லை!'
'அப்படியல்ல, எனக்கும் பனங்கட்டிக்கும்
தோது?'
'அதென்ன, பனை ஓலை, பனங்கட்டி
என்று
பனையோடை ஓரே கொண்டாட்டம்?'
'பனை தான் எங்களுக்கு ஆதாரம்
பாதுகாப்பு!'

மூன்றாம் நாள்
வெய்யிலின் தாக்கம் அப்பிளில்
வியாபாரி தண்ணீர் தெளித்தும்
பயனில்லை
பனை ஓலைக் குடலையின் குளிர்மையில்
வெள்ளரி பத்திரமாக இருந்தது
ஒருத்தி அதை இருபது ரூபாவுக்கு வாங்கினாள்
அப்பிளை விலை குறைத்து
வியாபாரி கூவுகிறான்
வாங்க ஒருவரும் வரவில்லை
விடைபெற்றபடி வெள்ளரி சொன்னது
'இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியம்!'

6

பொலித்தீன் பைகள், லஞ்ச் பேப்பர்கள் அறிமுகம் ஆக முன்பு நாங்கள் வாழக் கொடுத்து வைத்தவர்கள். எதிர்காலச் சந்ததிக்கு அந்த வாய்ப்பு இல்லைப் போலும்.
பத்திரிகைகளில் பொதிசெய்த பொருட்களை வாங்கி வந்து வீட்டில் பிரித்து வைத்த பின்னர் பொதிசெய்த தாளை வாசித்தால் பல கதைகள் இடையில் சஸ்பென்ஸ் என்பது அவஸ்தையான சுகானுபவம்.



**எழுத்தாளர்**
**மு.சிவநேசன்**
**எழுதும் தொடர்**

# எங்கே போகிறோம்?

இன்று பலசரக்கு வியாபாரத்தில் பொதி செய்வதற்கு பழைய பத்திரிகைத் தாள்களைப் பாவிப்பது அருகி விட்டது. பழைய பத்திரிகைகளுக்கான மவுசும் குறைந்துவிட்டது. எடுத்ததுக்கெல்லாம் நெகிழிப் (பிளாஸ்ரிக்) பைகள் தயாராக இருக்கின்றன. பொதி செய்யும் கலை அருகிவிட்டது. இந்த பொலித்தீன் பைகள், லஞ்ச் பேப்பர்கள் அறிமுகம் ஆக முன்பு நாங்கள் வாழக் கொடுத்து வைத்தவர்கள். எதிர் காலச் சந்ததிக்கு அந்த வாய்ப்பு இல்லைப் போலும்.

பத்திரிகைகளில் பொதிசெய்த பொருள்களை வாங்கி வந்து வீட்டில் பிரித்து வைத்த பின்னர் பொதிசெய்த தாளை வாசித்தால் பல கதைகள், இடையில் சஸ்பென்ஸ் என்பது அவஸ்தையான சுகானுபவம். பழைய பத்திரிகை வாசிக்கிறோம் என்கின்ற உணர்வு இடையில் மறைந்து பல குழப்பங்களை தருவதும் உண்டு.

முன்பெல்லாம் சீமெந்துப் பை தாள்களுக்கு ஏகப்பட்ட மவுசு இருந்தது. அதனைக் கவனமாக எடுத்து உதறி அடுக்கி வைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். இன்று பையை மண்வெட்டியால் பிளந்துதான் சீமெந்தை கொட்டுகிறார்கள். பார்க்க வயிறு பற்றி எரிகிறது.

மின்சாரப் பாவனையை எடுத்துக்கொள்வோம். குளிர்சாதனப் பெட்டியோ மின்சாரமோ இல்லாமல் எமது இளமைக் காலம் இனிமையாக இருந்தது. மீண்டும் போர்க் காலம் பலருக்கு அத்தகைய அனுபவங்களைத் தந்தும் இருக்கிறது.





கொழும்புக்கு தொடர்வண்டி (ரயில்) பயணம் என்றாலே அதிகாலை நான்கு மணிக்கு வாழை இலை வாட்டி கட்டிய இடியப்பம், கிழங்கு கறி பார்சல் பத்து மணிக்கு அனுராதபுரத்தில் திறக்கும்போது அடிக்கும் கமகம வாசனை இன்னும் மறக்கவில்லை. இன்று எப்படி அவித்தாலும் ஏனோ இடியப்பத்திலும் அந்த வாசனை வருவதில்லை. கிழங்கிலும் அந்தச் சுவை கிடையாது. எல்லாம் இரசாயன உற்பத்தி மயமானதன் விளைவாக இருக்கலாம். அல்லது வயதாக வயதாக நாவு மரத்து விட்டதோ என்றால், இன்று குழந்தைகளும்தான் ஆர்வமுடன் பாரம்பரிய உணவுகளை விரும்பி உண்ண மறுக்கிறார்கள்.

மீண்டும் மின் பாவனை பற்றிய கவலைகள். அலகுகள் அதிகரிக்க அதிகரிக்க மேலதிக அலகுகளுக்கான கட்டணம் எகிறுகிறதே. இது பணம் இருந்தால் எவ்வளவு மின்சாரத்தையும் பாவிக்கலாம் என்று அர்த்தம் ஆகாது. ஒவ்வொருவரும் எவ்வளவு குறைவாகச் சிக்கனமாக மின்சாரத்தை பயன்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு உலகம் மாசடைதல், வெப்பமயமாதல் தவிர்க்கப் படுகிறது. எரிபொருள் பாவனையும் அவ்வாறே. அவசியமற்ற வாகன ஓட்டங்கள் சமூக, சூழலியல் துரோகங்களே. ஏதோ காபன் வரியை செலுத்தி விட்டால் காற்றினில் காபனை கலக்கும் உரிமை கிடைத்து விடுகிறது என்பது அறிவீனமே.

அவசரத்துக்கு வைத்தியசாலைக்குப் போக ஊருக்கு ஒன்றிரண்டு வாடகை கார், முச்சக்கர வண்டி அறிமுகம் ஆகாத காலம், மோட்டார் சைக்கிள் எங்காவது பல ஆயிரத்தில் ஒன்று. பாடசாலைக்கு, வீட்டு வேலை, தோட்ட வேலை முடித்து பல மைல்கள் நடை. தனியார் கல்வி கிடையாது, வெளிநாட்டில் உறவுகள் கிடையாது, மாட்டு வண்டியில் மண் கல் ஏற்றி வீடு கட்டுதல், என்று வாழ்ந்த காலம் எமது கண் முன்னேமாறி, இன்றைய இள வயது இறப்புகள் எங்கும் மலிந்து, வாகன விபத்துக்கள் பெருகி, உயிர் குடிக்கும் மோட்டார் சைக்கிள் ஓட்டங்கள், டிப்பர்கள் மீது பழிகள், பிறழும் சாரதிய பண்புகள் என்று மாற்றங்களை சகித்து ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் இன்றைய முதியவர்களுக்கு.

அநியாயமான உயிர்ச்சாவு, ஏதோ அதற்கென்றே பிறந்த மாதிரியான செயற்பாடுகள், வாகன ஓட்டமோ, சண்டை சச்சரவோ, காதலோ, பகிடிவதையோ, போதைப் பாவனையோ, எதிலும் அதி உச்ச தீவிரம், இப்படியான கோணத்தில் போகின்ற போக்கினை, சக்தியை ஆக்கமுள்ள, உருப்படியான பக்கமாக திசைமாற்ற முடியாதா? ஊரை உலகத்தை முன்னேற்ற முடியாதா? இழப்புக்களில் இருந்து பாடம் கற்க நாங்கள் தயாரில்லையா?


(தொடரும்)

# எலியளவு யானை!

ஆபிரிக்காவில் உள்ள நாடு ஜிபூட்டி. அரேபிய வளைகுடா நாடான ஏமனின் நில வளைவு ஆபிரிக்காவை நோக்கி நீண்டுள்ள முனையில் ஆபிரிக்க நிலப்பரப்பில் அமைந்துள்ள அதிகம் அறியப்படாத நாடே இந்த ஜிபூட்டி. அறியப்படாத அந்த ஜிபூட்டியில் அறியப்படாத புதுவகை உயிரினமொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அறிவியல் இதழான பீர்ஜேவில் இது குறித்து விரிவான ஆய்வொன்று அண்மையில் வெளிவந்திருக்கிறது. அதன் சுருங்கிய வடிவமே இந்தத் தகவல்.

ஜிபூட்டியில் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட பயணம் ஒன்றில் யானையுடன் தொடர்புடைய மாதிரியான எலியளவிலான சிறிய பாலூட்டி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். மூஞ்சூறு என்று குறிப்பிடப்படுகின்ற எலி இனத்தைப் போல சிறியது அது. அதற்குச் சிறியளவில் துதிக்கை ஒன்றும் யானையைப் போல அமைந்துள்ளது.







1970களில் ஆபிரிக்காவில் இவ்வகை விலங்கினம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிலையில், 50 வருடகால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



தோற்றத்தில் எலியளவில் சிறியதாக இருந்தாலும் இதை யானையின் இனம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். தோற்றத்தில் யானையும், மூஞ்சூறும் இருந்தாலும் இது யானையும் அல்ல. மூஞ்சூறும் அல்ல. எனினும், இவற்றுக்கும் ஆர்ட்வார்க் (**Aardvark**) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ஆப்பிரிக்க எறும்புத் தின்னிகள், யானைகள் மற்றும் மனாடீ (**Manatee**) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பாலூட்டி வகை விலங்குகள் ஆகியவற்றுக்கும் உறவு உள்ளது என்று சொல்லப்படுகின்றது.

தமது நீண்ட கூரிய முகத்தைப் பயன்படுத்தி இந்த யானை மூஞ்சூறுகள் பூச்சிகளைப் பிடித்து தின்கின்றன. ஜிபூட்டியில் வறண்ட, பாறைகள் நிறைந்த பகுதியிலேயே இந்த யானை மூஞ்சூறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. விவசாயமோ, மனித நடமாட்டமோ இல்லாத இடத்தில் இவை கண்டறியப்பட்டுள்ளதால் இந்த இனத்துக்கு பெரிதாகப் பாதிப்பு இல்லை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



# மரபணு

■ ஓஷோ சிறிரதி

ஓர் அழகிய விடியற்காலை. இரவு முழுதும் வேலை செய்து விண்மீன்கள் களைத்து வானப்போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு உறங்கச் சென்றுவிட்டன. ஆனால் ஜெயவர்மனுக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. அவன் இருந்த மனோநிலையில் தூக்கம் சிறையைப்போல் தென்பட்டது. அதனால் விழித்திருப்பதே தன் சுதந்திரத்தைத் தக்கவைப்பதற்கான ஒரே வழி என அவன் மனம் பதைபதைத்தது. இன்று அவன் வாழ்வில் ஒரு முக்கிய நாள். ஏன், அவன் வாழ்வின் கடைசிநாளாகக் கூட இது இருக்கலாம் என்பதால்.

சூரியனுக்காய்க் காத்திருக்க அவனுக்குப் பொறுமையோ நேரமோ இருக்கவில்லை. அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் தலைக்குக்குளித்து முடித்துத் தனக்குப் பிடித்த அந்த நீல மேற்சட்டையையும் கோட் சூட்டையும் போட்டுக்கொண்டு தன் மடிக்கணினியை எடுத்து அவசரம்

அவசரமாய்க் காரின் மறு இருக்கையில் எறிந்துவிட்டு காரை செலுத்த ஆரம்பித்தான். கணப்பொழுதில் அந்தக் கார் வீதி முனையைக் கடந்து திரும்பியது. அவன் வீட்டில் மின்குமிழ்களும், மின்விசிறிகளும் அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தன. ஆனால் அவன் மீண்டும் வருவானா?

ஜெயவர்மன், இளவயதினிலேயே மூலக்கூற்று உயிரியலில் சாதனைகள் பல செய்த விஞ்ஞானி. ஐன்ஸ்டைன் சொல்வார் 'மர்மத்தினைப் பற்றிய உணர்வே ஒரு மனிதன் அடையக்கூடிய ஆகச்சிறந்த அழகான ஆழமான அனுபவமாகும். அதுவே மதத்திலும். அதுபோல் கலை மற்றும் விஞ்ஞானத்தின் எல்லாத் தீவிர முயற்சிகளிலும் உள்ளிருக்கும் தத்துவமும் ஆகும்.'

ஜெயவர்மன் விஞ்ஞானத்தின் எல்லைக்குச் சென்ற வீரன். அதனால் மெய்ஞானத்தில் அவன் காலடி வைத்தே ஆகவேண்டும். அவன் மிகுந்த அன்பு கொண்டவன். இச்சமூகத்தின் துயரங்களைக் களையறுக்கத் தன் உயிரையும் கொடுப்பான். ஆனால் துன்பப்படவேண்டும் என்ற முடிவை மக்களே எடுக்கின்றார்கள் என்பதைத்தான் அவனால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. அவன் வாழ்ந்தது இந்த அகண்ட பிரபஞ்சத்தின் இன்னொரு முனை. பூமாதேவியின் உடலில் ஓர் அங்கம். ஆனால் அப்பூமாதேவியை அங்கம் அங்கமாய்த் துண்டு துண்டாய் வெட்டி நாடு என்று அழைப்பர். அதை அவன் பொருட்படுத்துவதில்லை. அவனுக்கு முக்கியம் மனிதர்கள். அன்பு. அந்த அன்பை விரயமாக மண்மேல் கொட்டுவதை அவனால் பொறுக்கமுடிவதில்லை. எல்லைகள் இருக்கும் வரை எல்லைகளுக்காய் போர்கள் நடக்கும். என் நண்பனை நான் நம்புகிறேன் ஆனால் ஒரு பாதுகாப்பிற்காய்த் துப்பாக்கியும் என்னிடம் இருக்கட்டும் என்றால் அதன் அர்த்தம் என் நண்பனை நான் நம்பவில்லை என்பதே. போர்கள் வேண்டாம் என்றால் எல்லைகள் அழிக்கப்படவேண்டும். ஆனால் அதற்கு யாரும் உடன்படமாட்டார்கள். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று வாழும் இம்மக்களுக்கு எவ்வாறு வழிகாட்ட முடியும் என்று அவன் மனம் விரக்தி அடைந்திருந்தது.

அவன் வாழும் நாட்டில் இரண்டு இனங்களுக்கு இடையே நீண்டகாலமாய் ஒரு போர். வரலாற்றில் நையப்புடைத்த கதை. அந்தப் போரை வைத்தே அரசியல்வாதிகள் அரசியல் செய்துவந்தனர். நரிகளாய்ப் பிறந்தபோது செய்த தந்திரம் மனிதராய்ப் பிறந்த பின்பும் எடுபடத்தான் செய்கிறது. ஆனால் ஜெயவர்மன் இப்பொழுது கண்டுபிடித்திருக்கும் கண்டுபிடிப்பு அந்த அரசியலுக்கு ஆபத்தாய் அமையக்கூடியது. அதனால் அவன் உயிருக்கு எந்த நேரமும் ஆபத்து. வயது வெறும் இருபத்தியிரண்டு. ஆனால் அவன் இறப்பதைப்பற்றி அஞ்சவில்லை. ஏன் பிறந்தோம் என்றுகூட அறியாமல் இறப்பதற்குத்தான் அஞ்சினான். காலை ஒன்பது மணிக்கு நகர மண்டபத்தில் அவன் கண்டுபிடிப்பை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் அறிவிக்கப்போகிறான். இப்பொழுது மணி ஆறு. இன்னும் மூன்று மணி நேரம், நூற்றெண்பது நிமிடங்கள், பத்தாயிரத்து எண்ணூறு விநாடிகள். அவன் தாய் தந்தை கிராமத்தில். அவன் காதலி இன்னும் உறங்கிக் கொண்டுதான் இருப்பாள். அவர்களிடம் பேசினால் நிச்சயம் அழுதுவிடுவான். தன் கண்டுபிடிப்பை அறிவுக்கும் முடிவையும் நிறுத்திவிடலாம். அதனால் அவர்களிடம் பேசவோ, சந்திக்கவோ அவன் விரும்பவில்லை.

அவர்களையும் இந்த இயற்கையையும் நினைத்து நினைத்து அவன் இரவு முழுவதும் அழுதுவிட்டான். வீதியோரம் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறுவனை அழைத்துத் தன் திறன்பேசியைக் கொடுத்தான். தன் பேர்சில் இருந்த பணத்தை வீதியோரம் ஒரு பெண்பிள்ளையோடு பிச்சை எடுத்துக் கொண்டிருந்த தாயிடம் கொடுத்துவிட்டு அவர்கள் காலைத்தொட்டு ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டான். பின் காரை விரைவாக ஓஷோவின் ஆச்சிரமதுக்கு விட்டான்.

ஓஷோ, ஜெயவர்மனின் ஆன்மீக



குரு. ஓஷோவின் ஆச்சிரமம். பெயரில் மட்டும்தான் சிரமம் இருந்தது. மற்றப்படி கிருஷ்ணணைப் போல் வாழ்வைக் கொண்டாடும் இடம். வறுமையும் பிச்சைக்காரர்களும் நிறைந்த அந்த நகர வீதிகளைத் தாண்டி ஆச்சிரமத்தின் வாயுட்கதவுகளை அடைந்தான். இருட்டான அறைக்குள் திரைச்சீலைகளைத் திறந்ததும் சூரியன் சிறகடித்து வருவதுபோல் கதவின் உட்பக்கம் முதல் பார்த்த அனைத்துக்கும் முரணான செழிப்பும் கொண்டாட்டமும் காணப்பட்டது. அனைவரும் ஒருவரோடு ஒருவர் சிரித்துப் பேசி மகிழ்ந்துகொண்டிருந்தனர். காற்றில் ஆடிய மரங்களின் ஓசையோடு அவர்கள் சிரிப்பொலி கலந்தது. ஒவ்வொரு மரமும் மற்ற மரங்களோடு அரட்டை அடிப்பதுபோல் இருந்தது. அம்மரங்களுக்கு இடையில் மாறி மாறிப் பறந்த குருவிகளைப் போல் மனிதர்கள் முத்தங்களைப் பரிமாறிக் கொண்டனர். வேர்களைவிட இறுக்கமான தழுவல்கள் உயிருக்கு நீர் பாய்ச்சின. ஆயிரம் கோபியர் மட்டும் அல்ல ஆயிரம் கிருஷ்ணன்களும் வாழும் நவீன பிருந்தாவனம் அது.

தன் கண்டுபிடிப்பை நாட்டுக்கு உரைத்த பின் உயிரோடு இருந்தால் தன் காதலியோடு இங்கு வந்து வசிக்க ஜெயவர்மன் நினைத்திருந்தான்.

அவனை ஓஷோவின் அறைக்கு அழைத்துச் சென்றனர். திரைச்சீலைகள் மிகவும் சுத்தமாகத் துவைக்கப்பட்டு மாட்டப்பட்டிருந்தன. அனைத்தும் மிகவும் ஒழுங்காக அந்தந்த இடத்தில் அடுக்கப்பட்டிருந்தது. அந்த அறையை கற்கள் கொண்டு கட்டினரா இல்லை புத்தகங்கள் கொண்டு கட்டினரா என சந்தேகம் வரும் அளவுக்கு சுவர் முழுதும் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன.

ஓஷோவை விமர்சிப்பவர்கள் அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள குறைந்தது ஒரு நல்ல பழக்கமாவது உண்டு. அவரது வாசிப்புப்பழக்கம். 'குளிர்மலை தன் வாசன்' என்று சிவனைப் பாடுவார்கள். அந்த இமயமலையைவிட்டு இங்கு வந்ததாலோ என்னவோ அறை முழுதும் குளிரூட்டி பனி போல் பொழிந்து கொண்டிருந்தது. முதுகில் ஒரு வலி இருப்பதால் ஓஷோவிற்கு என்று பிரத்தியேகமான சாய்ந்த கதிரையை அவர் சீடர்களும் ஒரு அன்பான மரமும் செய்துகொடுத்திருந்தனர். அச்சிம்மாசனத்தில் கால்களின் மேல் கால்களைப் போட்டுக்கொண்டு, உள்ளங்கைகளை மடியில் ஒன்றின் மேல் ஒன்று வைத்துக்கொண்டு கண்களை மூடி தியானத்தில் இருந்தார் ஓஷோ. சர்வ் எக்ஸ்செல் விளம்பரத்தில் வருவது போல் அவர் வேட்டியும் முழுநீள ஜிப்பாவும் மாசற்ற வெள்ளை ஜோதியாகக் காட்சியளித்தன. கார்மேகங்களும் பொறாமைப்படும் கருகரு என்ற நிறத்தில் நீண்ட தாடியும் அடர்த்தியான மீசையும் இருந்தது. சகஸ்ராரம் இருக்கும் இடத்தை சுற்றி ஒரு முடிகூட இல்லாமல் மொட்டை போஸ்போல் இருந்தார். ஆனால் செவிகளுக்கு மேலும் பின்கீழ் தலையில் இருந்தும் கங்கை போல் சடாமுடி படர்ந்தது. ஒரு செருப்பு வெறுமையாகவும் மறு செருப்பு இன்னும் பாதத்திற்குக் கீழேயும் இருந்தது.


அவர் கால்களில் விழுந்து முத்தமிட்டான். முத்தத்தின் ஈரம் கண்களையும் சலனம் செய்ததுபோல் ஓஷோ கண்களைத் திறந்தார். 'மன்னிச்சிருங்கோ மாஸ்டர், உங்கட தியானத்த குழப்பிட்டன்போல கிடக்கு' அகண்ட ஒரு அண்டக் கொட்டாவியை விட்டுவிட்டு ஓஷோ பதிலளித்தார். 'நான் நித்திரைதான் கொண்டுட்டிருந்தன்...' ஜெயவர்மன் உயிர் பயத்தை மறந்து ஆத்மார்த்தமாக ஓஷோவுடன் சேர்ந்து சிரித்தான்.

'...ஆனால் எனக்கு நித்திரை, இறப்பு, தியானம் எல்லாம் ஒன்றுதான்' சிரிப்பைத் தொடர்ந்து மௌனம் சிறிது நேரம் தன் பங்குக்குக்கு அறையை நிரப்பியது. கேட்டுவிடலாம் என முடிவுசெய்தான். ஆனால் இவன் கேள்வி கேட்கும் முன்னே அவர்விடையொன்றைக்

ஓஷோவை விமர்சிப்பவர்கள் அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள குறைந்தது ஒரு நல்ல பழக்கமாவது உண்டு. அவரது வாசிப்புப்பழக்கம். 'குளிர்மலை தன் வாசன்' என்று சிவனைப் பாடுவார்கள். அந்த இமயமலையை விட்டு இங்கு வந்ததாலோ என்னவோ அறை முழுதும் குளிரூட்டி பனி போல் பொழிந்து கொண்டிருந்தது.

மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்





2

ABCD ஆகிய உருக்களில் எது பொருந்தும்

கொடுத்தார்.

'ஜப்பானில் வாழ்ந்த எகிடோ என்ற சற்குரு மிகவும் கண்டிப்பான ஓர் ஆசிரியர். அதனால் மாணவர்கள் அவரைப் பார்த்துப் பயந்தனர். நாளின் மணியைக் கூறும் கோயில் மணியை அடிக்கும் பணியிலிருந்த மாணவன் ஒரு தடவை மணியை அடிக்க மறந்துவிட்டான். காரணம் - வாயிற் கதவைக் கடந்துசென்ற ஓர் அழகான பெண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த மாணவனுக்குத் தெரியாமல் அவன் பின் எகிடோ நின்றுகொண்டிருந்தார். தன் கைத்தடியால் எகிடோ மாணவனை அடித்தார். அந்த அதிர்ச்சி மாணவனின் இதயத்தை நிறுத்திவிட்டது. அவன் இறந்துவிட்டான்.



தன் சற்குருவுக்கு உயிரை எழுதிக்கொடுக்கும் பழைய வழமை வெறும் சம்பிரதாயமாகத் தாழ்ந்துவிட்டதால், பொதுமக்கள் எகிடோவை இழிவுபடுத்தினர். ஆனால் இச்சம்பவத்திற்குப் பின்எகிடோ பத்துத் தன்னை யறிந்த வழித்தோன்றல்களை உருவாக்கினர். இது அசாதரணமான உயர்ந்த எண்ணிக்கை.

இத்தகைய நிகழ்வுகள் சென்னுக்கும் சென் சற்குருக்களுக்கும் தனித்துவமானவை. ஒரு சென்குரு மட்டுமே தன் சீடர்களை அடிப்பார். சில வேளைகளில் அச்சீடன் அடியினால் இறப்பதும் நடக்கும்.

சாதரணமாக இது மிகவும் கொடூரமானதாகவும், வன்முறையாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் தெரியும். மதம் சார்ந்தவர்களால் எப்படி ஒரு சற்குரு தன் சீடனைக் கொல்லும் அளவுக்கு மிகவும் கொடூரமாக இருக்க முடியும் என்று புரிந்துகொள்ள முடியாது. ஆனால் அறிந்தவர்கள் வேறுவகையில் உணர்கின்றனர்.

அறிந்த ஒரு மனிதனுக்கு நன்றாகத் தெரியும் யாரும் எப்பொழுதும் கொல்லப்படுவதில்லை என்று. உள்ளிருப்பது நிரந்தரமானது, அது தொடர்ந்து தொடர்ந்து சென்றுகொண்டேயிருக்கும். அது உடல்களை மாற்றலாம், ஆனால் அது வெறும் வீடுகளின் மாற்றமே, வெறும் ஆடைகளின் மாற்றமே, வெறும் வாகனங்களின் மாற்றமே. பயணி தொடர்ந்து தொடர்ந்து சென்று கொண்டேயிருப்பான், எதுவும் இறப்பதில்லை. இறப்பின் கணம் தன்னையறி தலின் கணமாகவும் அமையலாம், இரண்டும் மிகவும் ஒரேமாதிரியானவை.

நாப்பத்தெட்டு நிமிடங்கள் ஓஷோவுடன் இணைந்து தியானத்தில் இருந்தான். இந்த நாப்பத்தெட்டு நிமிடங்களை அடைய 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச் செல்லா நின்ற இத் தாவர சங்கமம்' எங்கும் அலைந்துவிட்டான்.

ஓஷோவிடம் விடைபெற்றுக் கொண்டு நகர மண்டபத்துக்குப் புறப்பட்டான். ஒலிபெருக்கி ஒரு முறை ஓங்கி ஒலித்து அணைந்தது. அவன் பேசுவதற்குமுன் மண்டபத்தில் இருந்த அனைவரையும் கண்களால் ஒரு முறை நோட்டம் விட்டான். ஆழமான ஒரு மூச்சை

சுவாசித்துவிட்டு அவன் முதல் வார்த்தையை, முதல் குண்டை குறிபார்த்தான். பேசத் தொடங்கினான். சிவப்பு மின்னல் மின்னியது. இடியாவது இரக்கம் பார்த்து சில கணங்கள்

மௌனஅஞ்சலி செலுத்தும். துப்பாக்கி இரக்கமற்றது. விஞ்ஞானம் கண்டுபிடித்த துப்பாக்கியாலேயே விஞ்ஞானம் மீண்டும் ஒரு முறை அரசியலுக்குப் பலியாக்கப்பட்டது.

ஜெயவர்மனின் உடலும் மனமும் தரையில் விழுந்தது. ஆனால் விழும்முன் தான் பதிவு செய்துவைத்திருந்த ஒலிநாடவை ஒலிக்கச்செய் தான்.

'வணக்கம்! நீண்ட நாள்களாக எம் நாட்டில் இரண்டு இனங்களுக்கு இடையில் போர் நிகழ்கிறது. என் மரபணு ஆராய்ச்சியில் நான் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளேன். இந்த இரண்டு இனங்களும் வேறு வேறு இனங்கள் அல்ல. அழிந்து போன ஒரு பழைய இனத்தின் இரண்டு பிள்ளை இனங்கள்தான் இவையிரண்டும்.

அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால்கூட நாம் ஒன்றை மறக்கக்கூடாது. என்றும் நாம் ஓர் இனம் மட்டும்தான் -மனித இனம்.'










NISSAN SUNNY, 2000, reg 2003, B15 ,1290CC, Japan, White, AC, auto shutters, central lock, security alarm, AMW Maintenance, no accident history, 168000km. for sale Point Pedro

T.P: 0774694262

கலியுக பித்தன்

> ஹா... எல்லாத்தையும் நானே சொன்னா, உங்களுக்கு யூனிபார்மும் சம்பளமும் எதுக்கு தாறாங்க
> நீங்க சொல்றத நான் எப்டி நம்பிறது' சந்தேகத்தோடு சிறு கோபம் தொற்றிக் கொள்ள கேட்டான்.

நெடுங்கதை அத்தியாயம் 05

# ஆறாவது குண்டு

சந்துரு கொடுத்த கடிதத்தில் கீழே எழுதிக் கையெழுத் திட்டிருந்த ரஸ்விகா என்கிற பெயரைப் பார்த்ததுமே கவிந்தின் மூளையில் பொறி பறந்தது. அவன் உடனடியாக அந்தப் பெயரை அடையாளம் கண்டுகொண்டான். அது தாங்கள் விசாரிக்கும் வழக்கோடு தொடர்பு பட்ட பெயர். அதைக் கண்டுபிடித்ததுமே அவன் அவசரமாக அந்தத் தகவலைச் சந்துருவிடம் தெரிவித்தும் விட்டான். ஆனால், அவனுக்குள் மேலும் குழப்பங்கள்..

'பெயர் கரெக்ட்தான் சேர்! ஆனால், ஆள்..?' சின்னக் குழப்பத்தோடு கேட்க, கவிந்த் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒன்றையும் அவன் கைகளில் திணிக்க பெயரும், ஆளும் ஒன்றுதான் என்பதை உறுதிப்படுத்தி கொண்டான் சந்துரு.

'சேர்! இந்தப் பிள்ளை கொலை செய்யப்பட்ட விசயம் அந்த பெடியனுக்குத் தெரிஞ்சிருக்குமா?' "என் அனுமானம் சரியா இருந்தா அவனுக்குத் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை"

'எப்டி சொல்றீங்க?'

'ஒரு காதலி கொலை செய்யப்பட்ட விஷயம் தெரிஞ்ச ஒருவனால அப்டி இருக்க முடியாது.'

'கரெக்ட்தான் சேர். பட் அவன் எதுக்காக இங்க வந்திருக்கான்'

'சிம்பிள், லெட்டர் எழுதி வைச்சிட்டு ஏதோ இலட்சியத்தோட புறப்பட்ட தன் காதலிய பார்க்க வந்திருப்பான்.'

நாடியைத் தடவியபடியே கவிந்த் சொன்னது சரி என்பதைப் போலவே தலையை மேலும் கீழும் அசைத்தான்.

'இந்தப் பிள்ளை மேடர் செய்யப்பட்ட விசயத்தை ராகுலுக்கு சொல்லலாமா?'

'என்ன மிஸ்டர் சந்துரு, எல்லாத்துக்கும் இப்டி அவசரிப்பட்டா எப்டி? கொஞ்சம் பொறுமையா கேஸையும் ராகுலையும் ஸ்ரடி பண்ணிட்டு முடிவு எடுப்பம்'

தான் அவசரப்பட்டு விட்டதை உணர்ந்து நாக்கை கடித்து கொண்டான் சந்துரு.

● ● ●

களைத்து ஏமாற்றத்தோடு மூலையில் முடங்கிபோய் கிடந்த ராகுலுக்கு, வீட்டு வாசலில் கிடந்த பொட்டலத்தின் எண்ணம் வரவே வாசலை நோக்கி விரைந்தான். பொட்டலம் இருந்த இடம் வெறுமையாய் இருந்ததை பார்த்தவன் பிரம்மை பிடித்தவனைப் போல் கதவோடு சரிந்து கொண்டான். அவன் பார்வையில் சிறு கடதாசி துண்டு தென்பட, சற்று ஓடிச் சென்று அதை எடுத்துப் பிரித்துப் படித்தான்.

'வந்த வேலையை மறந்துவிட்டு ஊருக்குத் திரும்பவும். வந்த வேலையை தொடர்ந்தால் உயிர் உனக்குச் சொந்தமில்லை. நான் யார் என்பது பற்றி ஆராய வேண்டாம்.' என்று எழுதிவிட்டு, அதன் அருகில் 'வோர்னிங்' என்று சிவப்பு மையால் அழுத்தி எழுதி அதனை சுற்றி ஐந்து கைத் துப்பாக்கி குண்டுகளின் படம் வரையப்பட்டு அடிக் கோடிடப்பட்டிருந்தது.

வாசித்தவன் மருண்டு போய் நின்றான். 'பிள்ளையாரே! அடியும் நுனியும் தெரியாத ஒரு பிரச்சினையில் என்னைச் சிக்க வைத்து விட்டாயே. இந்தப் பிரச்சினையில் இருந்து நான் மீண்டு விட்டால் உனக்கு நூற்றியெட்டுத் தேங்காய் உடைக்கிறேன். எப்படியாவது என்னைக் காப்பாற்று' அச்சத்தின் உச்சத்தில் மனம் தானே உச்சாடனம் பண்ணியது.

அடுத்து என்ன செய்வதென்று புரியாமல் அறைக்குள் சென்று கதவை அடைத்துவிட்டுக் கட்டிலில் மல்லாக்கப் படுத்தான். முன்னைய பொழுதுகளில் உடலுக்கு இதத்தைக் கொடுத்த மெத்தை இன்று முட்களாக மாறி ராகுலைத் தைத்தது. நெற்றியோடு சேர்த்து முன் தலைமுடியையும் வருடியபடி நீண்டநேரம் யோசித்தபடியே கிடந்தவன் தன்னையும் மறந்து கண்ணயர்ந்து போனான்.

'போன் ல பேசினது யாரு?, அந்த பொட்டலத்தை வைத்து, அவ்வளவு வேகமாக எடுத்தது யாரு? என்னை பின்தொடர்வது ஒருத்தனா இல்லை கும்பலா? எதுக்காக என்னைப் பின் தொடரவேண்டும்?' விழிகள் தூங்கினாலும் அன்றைய நாளில் அவனுக்கு ஏற்பட்ட கெட்ட அனுபவங்கள் அவன் மனதை உறங்கவிடாது, வினாக்களை எழுப்பி விடைக்காய் தவித்துக் கொண்டிருந்தது. இந்த இம்சையே அவனது தூக்கத்தைக் கலைத்தது. எழுந்து கொண்டான். 'உயிர் உனக்கு சொந்தமில்லை' என்ற வசனம் மீண்டும் மீண்டும் அவன் மனதுக்குள் ரிப்பீட் மோட் இல் ஓடிக்கொண்டிருந்தது.

● ● ●

'சேர்! இப்ப நாங்க என்ன செய்யிறது?'

'ராகுலோட ரூமுக்குத் திரும்பப் போவம்'

'திரும்பப் போறதால அவன் எங்கள சந்தேகப்படமாட்டானா?'

'நாம தான் மத்தவங்களச் சந்தேகபட வேணும் சந்துரு, அவங்க இல்ல!'

சந்துரு தலையைத் தொங்கப் போட்டபடியே ஆழந்த யோசனையில் நின்றிருக்க, கவிந்த் தொடர்ந்து சொன்னான்.

'இந்த கேஸ்ல நாங்க மூவ் பண்றதுக்கு எந்தப் பொயின்ட் ம் இல்லை. சோ.. நாங்க தயங்காமச் சில ஸ்ரெப்ஸ் எடுத்து வைக்கவேணும்'

'யெஸ் சேர்... இப்பவே ராகுல் தங்கியிருக்கிற ப்ளேஸ க்குப் போகலாம்' சந்துரு ஆமோதித்தான். இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே லான்ட் லைன்ல ஓர் அழைப்பு வந்தது. அதை ஏற்று பேசினான் கவிந்த்.

'மிஸ்டர் கவிந்த்?'

'யெஸ், கவிந்த்தான்'

'நீங்க இப்போ எடுத்திருக்கிற கேஸ் பற்றிய சில முக்கியமான விஷயங்கள உங்களிட்டச் சொல்லவேணும்'

'நீங்க யாருன்னு...' கவிந்த் சொல்லி முடிப்பதற்குள் அந்தக் குரல் குறுக்கிட்டது. 'அது இப்போ அவசியமில்லை... நான் சொல்லவாற விஷயத்தைக் கவனமாகக் கேளுங்க' 'என்ன விஷயம்?'

'மேடர் செய்யப்பட்ட பொண்ணு நீங்க நினைக்கிற மாதிரி ரஸ்விகா இல்லை'

'என்ன சொல்றீங்க?' விவரம் சேகரிக்கும் ஆர்வம் தொற்றிக்கொண்டது கவிந்திடம். கண்களாலேயே சந்துருவுக்கும் சைகை செய்தான்.

'ஓம்! அது ரஸ்விகா இல்லை'

'அப்ப யார்?'

'ஹா... எல்லாத்தையும் நானே சொன்னா, உங்களுக்கு யூனிபார்மும் சம்பளமும் எதுக்குத் தாறாங்க'

'நீங்க சொல்றத நான் எப்டி நம்பிறது' சந்தேகத்தோடு சிறு கோபம் தொற்றிக்கொள்ளக் கேட்டான்.

'சொயிஸ் இஸ் யுவர்ஸ்' மெல்லிய சிரிப்போடு குரல் பதிலளித்தது.

'ஏய் மிஸ்டர்... ஹலோ... ஹலோ...' கத்தினான் கவிந்த்.

எதிர் முனையில் அழைப்பு துண்டிக்கப்பட்டது.

ரிசீவரை வைத்துவிட்டு அர்த்தத்தோடு சந்துருவைப் பார்த்தான்.

'எனிதிங்க் சீரியஸ்?' சந்துரு கேட்டான்.

'மேடர் செய்யப்பட்டது ரஸ்விகா இல்லையாம்... யாரோ ஒருத்தன் போனில சொல்லுறான்.'

சந்துரு மௌனமாக நின்றான். கவிந்த் தொடர்ந்தான்.

'இந்தச் செய்தி உண்மையா இருந்தா நாம இன்னும் பின்னாடி போக வேண்டி இருக்கும்' குரலில் ஏமாற்றம் படிந்திருந்தது.

'இது நம்மைத் திசை திருப்பிறதுக்காகச் செய்யப்பட்ட சதியாக்கூட இருக்கலாமே'

'இல்லை சந்துரு, அதை அப்படியே விட்டிட முடியாது. நெருப்பில்லாமப் புகையாது எண்டதையும் கவனத்தில எடுக்கவேணும்'

'என்ன சேர்! தத்துவம் பேசிட்டு இருக்கீங்க..'

'ஹா... ஹா... சில நேரங்களில தத்துவங்கள்தான் நாம நடந்து போக தடமா மாறும் மிஸ்டர் சந்துரு' சொல்லிட்டு மீண்டும் ஆழ்ந்த யோசனைக்குள் வீழ்ந்தான் கவிந்த்.

அவனது சிரிப்பில் நம்பிக்கை எதிரொலித்ததாகப்பட்டது சந்துருவுக்கு.

(தொடரும்)



## டொலர் இனி வேண்டாம்!

அமெரிக்காவின் நாணய அலகு டொலர். உலகளாவில் பெருமளவு புழக்கத்திலுள்ள நாணயம் அது. அமெரிக்காவின் டொலருக்கடுத்து ஐரோப்பிய நாடுகளின் யூரோவே உலக வர்த்தகத்தில் மிகவும் பிரபலம். உலகளவில் 185 நாணயங்கள் இருப்பினும் அவற்றுள் பெரும்பாலானவை, தத்தமது நாட்டுக்குள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. உலகெங்கிலும் நாணயம் பிரபலமடைவது என்பது, அந்த நாட்டின் பொருளாதாரம் மற்றும் வலுவைப் பொறுத்தது. இந்த வகையில் அமெரிக்காவின் டொலர் உலகெங்கிலும் பரவித் தனது ஆதிக்கத்துக்குள் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருக்கிறது. இத்தகு டொலரின் வலிமை, அதற்குக் கிடைக்கின்ற அங்கீகாரம் என்பன அமெரிக்கப் பொருளாதாரத்தின் வலிமையைப் பிரதிபலிக்கிறது. இந்த டொலர் வழியே ஏற்பட்டுள்ள அமெரிக்காவின் வல்லாதிக்கத்தை உடைப்பதற்கான நடவடிக்கைகளில் அதன் எதிரி நாடுகள் என்று வர்ணிக்கப்படுகின்ற சீனாவும், ரஷ்யாவும் இறங்கியுள்ளன என்று பரவலாகச் செய்திகள் உலா



வரத் தொடங்கியுள்ளன. டொலரைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை ரஷ்யாவும் சீனாவும் ஒன்றிணைந்து செய்து வருகின்றன என்றும் இது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான புதியதொரு 'நிதிக் கூட்டணிக்கு' வழிவகுக்கும் என்றும் சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகத்தில் இதுவரை இருந்து வந்த டொலரின் பங்கு 2020 நிதியாண்டின் முதல் காலாண்டில் 50 சதவீதத்திற்கும் கீழே சென்றுள்ளதாம். கடந்த சில ஆண்டுகளாகவே, ரஷ்யாவும் சீனாவும் தமது இருதரப்பு வர்த்தகத்தில் டொலரின் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்துள்ளன. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப் போருக்குப் பின்னர், ரஷ்யா - சீனா இடையிலான வர்த்தகத்தில் டொலரைக் குறைக்கும் சிந்தனைக் கொள்கையின் கீழ் இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகிறது என்றும் செய்திகள் கூறுகின்றன.

**கே** **கோபி,** *வல்வெட்டித்துறை*

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் மூன்று மொழிகளிலும் உரையாற்றித் தனது மும்மொழிப் புலமையை வெளிப்படுத்தியிருக்கிறார். அத்தோடு தமிழர்களுக்குச் சுயநிர்யண உரிமை உண்டு என்பதையும் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார். அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**ப** நீதியரசரின் அறிவு, ஆற்றல் என்பன உலகறிந்த விடயம். அவரது மும்மொழிப் புலமையை அவர் இதற்கு முன்னரும் பல தடவைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் ஏக்கிய ராஜ்ஜிய என்கிற சொல்லுக்கு ஒருமித்த நாடுதான் சரியான தமிழ்ப் பதம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சொல்லிக்கொண்டிருந்தபோது, ஒருமித்த நாட்டுக்கு எக்சத் ராஜ்ய என்ற சிங்களச் சொல்லைப் பரிந்துரைத்தவர் அவர். அப்படி சிங்களவர்களுக்கே சிங்களம் சொல்லிக்கொடுக்கும் அளவிற்கு அவருக்கு சிங்களப் புலமை உண்டு என்பதெல்லாம் ஊரறிந்த இரகசியம். இங்கே கேள்வி எல்லாம் அவரது திறமைகளை, அறிவை வைத்து அவர் தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுத்தரப் போகிறார் என்பதுதான். வடக்கு மாகாண சபை முதலமைச்சராக அவர் வந்தபோதும் அவர் மீது மிகப் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அவர் ஒரு கட்சியைத் தொடங்கி அதன் தலைவராகி, அதன் வழி இன்று நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொண்டார் என்பதற்கு அப்பால் முதலமைச்சராக அவரால் தமிழ் மக்களுக்குக் கிடைத்தது என்று சொல்லிக்கொள்வதற்கு எதுவும் இல்லை. இலங்கையின் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தலைவர்கள் ஆற்றுகின்ற கனதியான, காத்திரமான உரைகளால் சிங்களவர்கள் திருந்திவிடுவார்கள் என்றோ தீர்வைத் தந்துவிடுவார்கள் என்றோ நம்புகின்ற அளவிற்கு முட்டாள் அல்லன் நான். பார்க்கலாம், இந்த உரைகள் மூலம் முதலமைச்சர் எதைப் பெற்றுத் தந்துவிடப்போகிறார் என்று!

**கே** **பிரதாபன்,** *சங்கானை*

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பதவிகளில் இருந்து மணிவண்ணனை விலக்குவதற்கான காரணம்தான் என்ன? தலைமை கூறும் காரணங்கள் சிறுபிள்ளைத் தனமாக இல்லையா?

**ப** சிறுபிள்ளைகள்கூட இப்படி மக்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டு காரணம் சொல்லும் என்று நான் நம்பவில்லை. தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகின்றார், கட்சியின் மையக் குழு கூடி ஆராய்ந்து ஒரு முடிவை எடுத்த பின்னர் அதனை எதிர்த்து கட்சிக்குள் ஒருவர் (மணிவண்ணன்) அணி திரட்டுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று. அதாவது கடந்த வருடம் நடந்து முடிந்த அதிபர் தேர்தலைப் புறக்கணிப்பது என்று கட்சி எடுத்த முடிவை எதிர்த்து மணிவண்ணன் செயற்பட்டாராம். அப்படி அவர் செயற்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் மணிவண்ணனுக்கு ஏன் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்தார்கள்? அதுவும் மணிவண்ணன் தான் போட்டியிடப்போவதில்லை என்று மறுத்த பின்னரும் வலிந்துசென்று அழைத்து வந்து போட்டியிட வைத்தார்கள்? எல்லா அரசியல்வாதிகளுமே மக்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டுதான் நடத்துகிறார்கள்.

**கே** **நிதர்சன்,** *மட்டக்களப்பு*

நாடாளுமன்றில் தூங்குபவர்களுக்கு தண்டனை வழங்க முடியாதா..?

**ப** தூங்குவதற்காவது நாடாளுமன்றம் போகிறார்களே உங்கள் பிரதிநிதிகள் என்று சந்தோசப்படுங்கள். ஏனெனில் பெரும்பாலான நேரங்களில் சபையில் உரையாற்றுபவர் தவிர ஓரிருவர் மட்டுமே இருப்பார்கள். மிக முக்கியமான விவாதங்களின்போது கூட சபையில் கோரம் இல்லாம் அதற்கான மணியை ஒலிக்கவிட்டு ஆங்காங்கே நாடாளுமன்ற வளாகத்தில் உலாவிக்கொண்டு உல்லாசம் அனுபவிக்கும் உறுப்பினர்களை அழைக்கவேண்டிய கட்டாயம் சபாநாயகருக்கு அடிக்கடி வருவதுண்டு.



## அகராதி பிடிச்சவன் பதில்கள்

அதனால் தூங்குவதற்காகவது அவர்கள் சபையில் இருந்தால் நல்லதுதான். கடந்த நாடாளுமன்றத்தில் 90 சதவீதத்திற்கு மேல் வருகைப் பதிவு செய்த உறுப்பினர்கள் 14 பேரில் ஒருவர்கூட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை. ஆனால், 40 சதவீதத்திற்குக் குறைந்த வருகையைப் பதிவு செய்த 22 பேரில் சிவமோகன், சிவசக்திஆனந்தன், ஆறுமுகன் தொண்டமான் என்று மூன்று தமிழர்கள் உள்ளார்கள் என்றால் பாருங்களேன்.

**கே** **தேவிபாரதி,** *கிளிநொச்சி*

உங்களுக்குப் பிடித்த சினிமா?

**ப** நல்ல தமிழ் திரைப்படங்கள் வெளியானால் அவற்றைக் குறைந்தபட்சம் இணையத்திலாவது (காசு கொடுத்துத்தான்) பார்த்துவிடும் பழக்கமுள்ளவன்தான் நான். ஆனாலும், இங்கே உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புவது ஒரு 'நோ மான் லாண்ட்' என்கிற திரைப்படம். 2001ஆம் ஆண்டு வெளிநாட்டுத் திரைப்படங்கள் பிரிவில் ஆஸ்கார் விருதை வென்ற இந்தத் திரைப்படம் ஈழத் தமிழர்கள் ஒவ்வொருவராலும் கட்டாயம் பார்க்கப்படவேண்டியதொரு படம். பொஸ்னியர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையிலான போரை பின்னணியாகக் கொண்ட இந்தப் படம், ஆயுதங்கள், அதிகாரங்கள், ஐ.நா., (சர்வதேசம் எனப்படும்) மேற்குநாடுகளின் நலன்கள், போரில் சிக்கிக்கொள்ளும் சாமான்ய மக்கள், அவர்களின் கைகளில் ஆயுதம் வந்தால் ஏற்படும் மாற்றம் என்று பலவற்றையும் மிக நுட்பமாகப் பேசும் ஒருபடம். தமிழர்களின் ஆயுதப் போராட்டம், அதன் எழுச்சி வீழ்ச்சி, மேற்கு நாடுகள் மற்றும் பிராந்திய சக்திகளின் தலையீடு, ஐ.நாவை நம்பியிருத்தல் என்கிற பின்னணியில் மிக நெருக்கமாகச் சுயவிமர்சனம் செய்துகொள்வதற்கு மிகச் சிறந்த படம் இது. ஒரு தடவையேனும் பாருங்கள்.

*உங்கள் கேள்விகளை*
**551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
என்கிற தபால் முகவரிக்கு
அல்லது
**shemman.redsoil@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.




# கிணறு தோண்ட வெளிக்கிடுகிற பூதம்!

■ கதிரேசன் காத்தவராயன்

அதிலை சுப்பண்ணை வீட்டடி வரைக்கும் போட்டு வருவமெண்டு போனன். அங்க வீட்டிலை உள்ளுக்கு ஏதோ அமளியாக் கிடந்துது. சரியாப்போச்சு... திரும்புவமெண்டுறதுக்குள்ள சுப்பண்ணையின்ர மனுசி கண்டிட்டுது.

"என்ன கதிரேசு மாமா வந்து போட்டுத் திரும்புறியள்? உள்ளுக்க வாருங்கோவன்" எண்டு கூப்பிட்டுது.

"இல்லையில்லை ... ஓமோம்" எண்டு சமாளிச்சுக் கொண்டு போனன். சுப்பண்ணை கொதி... எண்ணைச் சட்டிக்குள்ள தண்ணி ஊத்தின மாதிரிக் கொதிச்சுக் கொண்டிருந்தார். கொதியன் சுப்பு எண்டாத்தான் கனபேருக்கு ஆளைத்தெரியிற அளவுக்குக் கொதிநிலை கூடின சீவன் தான் எண்டாலும் நானண்டைக்குத்தான் நேரடியாக் கண்டன். பேரைக் காப்பாத்துற மனிசன்தான்.

"அது சரி சுப்பண்ணை கனநாளாக் காணேல்லை எண்டு எட்டிப் பாத்தன்...." எண்டு நான் முடிக்க முதல், "சுப்பன் கொதிக்கிறான் உள்ளட்டால் வில்லங்கமெண்டு ஓடப்பாக்கிறியோ?" எண்டு சிரிச்சார். வழமையான சிரிப்பில்லை. அங்காலில் அறைக்குள்ள கசமுசவெண்டு பேச்சுக் குரலோடை மூக்கை இழுத்து உறுஞ்சிற சத்தமும் மெல்லிசா காதிலை பட்டுது. "அட...இல்லைச் சுப்பண்ணை குடும்பமெண்டால் பலதும் பத்தும் வழமைதானே? ஊள்ளடுறது சரியோ?" எண்டன் அதுக்கும் ஒருசிரிப்புச் சிரிச்சார்.

"இஞ்சார் கதிரேசு இது குடும்பப் பிரச்சினையில்லை... படிப்புப் பிரச்சினை. உந்தப் போன் படிப்புப் பிரச்சினை" எண்டு நிப்பாட்டினார். அந்த மனிசன் ஒரு கதையையும் ஒரே நடையிலை சொல்லாது. விட்டு விட்டுத்தான் சொல்லும். அதுவும் நோண்டி நோண்டிக் கேட்டால்த்தான் முழுக்கதையையும் அறியலாம்.

"இப்ப எல்லாம் சுப்பண்ணை பிள்ளையள் போனிலைதானே படிக்குதுகள்... அதுக்கென்ன படிக்கிறது தானே முக்கியம்... அதுக்கிப்பென்னண்ணை சத்தம்?"

"அப்பிடி வா கதிரேசு கதைக்கு. உந்தப் போன் படிப்பிலை வாத்திமார் தாங்களும் படிப்பிக்கினம். அதைப்பார் இதைப்பார் எண்டு ஏதேதோ லிங்காம்! அதையும் அனுப்புகினம். அதுகளிலை அப்பிடியிப்பிடி விசயங்களும் தவிர்க்கேலாமை வந்திடுகுதாம். தாங்கள் படிப்பிக்கிறது சரி. அந்த லிங்குகளை ஏன் அனுப்புவான்?" நிப்பாட்டினார். இனி நான் தொடக்கவேணும்.

உந்தப் போன்
படிப்பிலை வாத்திமார்
தாங்களும்
படிப்பிக்கினம்.
அதைப்பார் இதைப்பார்
எண்டு ஏதேதோ
லிங்காம்! அதையும் அனுப்
புகினம். அதுகளிலை
அப்பிடியிப்பிடி
விசயங்களும் தவிர்க்கே
லாமை வந்திடுகுதாம்.

"ஓமண்ணை.. தேவையில்லாததுகளை ஏன் பிள்ளையளுக்கு? தேவையானதுகளை தாங்கள் எடுத்து அனுப்பலாந்தானே? "எண்டன்.

"அதைச் சொல்லிப்போட்டனெண்டு தான் இவ்வளவு நேரமும் எல்லாருமா என்னிலை பாஞ்சதுகள்" எண்டு நிப்பாட்டினார்;.

"இந்த மனிசனுக்கு இருக்கேலாத வியாதி கதிரே சுமாமா.... உந்தக் கதையை ஆருக்குச் சொன்னதெண்டு தெரியுமே? அதிலை பள்ளிக்கூடத்தடியிலை நிண்ட வாத்திப்பெடியளுக்கல்லே... அவங்கள் கஸ்ரப்பட்டுச் செய்ய இவர் போய் வாயைக் குடுத்திருக்கிறார்.. அவங்களும் கதைச்சிருக்கிறாங்கள்.. வாங்கிக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறார். வரேக்குள்ள நீங்கள் இளம் பிள்ளையளுக்குக் காணாதது காட்டுறியள் எண்டு பேசிப்போட்டல்லே வந்திருக்கிறார். பாத்துக்கொண்டு நிண்டாக்கள் சொல்லியல்லே நாங்கள் அறிஞ்சது. போன்காட் வாங்கப் போனவர் அதைவிட்டுட்டு கதை வளத்துப்போட்டு வந்திட்டார். ஒன்லைன் வகுப்புக்குப் பாத்துக் கொண்டிருந்த பேத்தி காட் வாங்காமல் ஏன் வந்தனீங்கள் எண்டதுதான் இப்ப பிரச்சினையாப்போச்சுது"


போன் வாங்கிறதிலை இருந்து காட் போடுகிறது சரியாயும் கவனமாயும் பாவிக்கிறது வரைக்கும் படிக்கிற பிள்ளையள் இருக்கிற வீடுகளிலை கொரோனாவாலை பலவிதமான பிரச்சினையள்தான். எங்கயோ முடிவைத் தவறாய் ஆரோ ஒரு பிள்ளை எடுத்ததாயும் கதையொண்டிருக்கல்லே? இப்ப உந்தப் போன் பிரச்சினையில்லாமலுக்கிருந்த நான் சுப்பண்ணை வீட்டிலை மாட்டுப்பட்டுப்போனன்.

இது ஒண்டும் அவற்றை வீட்டிலை மட்டுந்தான் எண்டில்லை. கண்ணிலை காதிலை படுகிறதில்லை எண்டதுதான் பாருங்கோ உண்மை. சுப்பண்ணை சொன்னவரெண்டு அவற்றை மனுசிக்காறி சொன்ன விசயங்களை மாதிரித்தான் கனபேர் கதைக்கினம். படிப்பு முக்கியமெண்டு எடுக்கிற முயற்சியளாலை வேறை வேறை சோலியளும் நடக்கத்தான் செய்யுது... பாடக் குறிப்புகளுக்கிடையில தங்கடை குறிப்புகள், படங்கள் எல்லாம் போய்வந்து பிடிபட்டும் இருக்குது... பிடிபடாமலும் இருக்குது.. எண்டு கவனமாயிருங்கோ எண்டு அதிபர்மார் பெற்றார் கூட்டத்திலை சொன்னதுகளும் உண்டுதானே?

சுப்பண்ணை வீட்டுப் போன் பிரச்சினையிலை இருந்து என்ர மனுசியிட்ட இருந்து வந்த போன், "உடன வாங்கோ" எண்டு அழைச்சு என்னைக் காப்பாத்திச்சுது. சமூகத்துக்கு ஒரு போன் அழைப்பை எப்பிடி எடுக்கிறது? ■

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை



# மாலி எதிர் பெலரூஸ்

ஆசிய நாடான ரஷ்யாவுடன் தனது எல்லையில் ஒரு பகுதியைப் பகிர்கின்ற கிழக்கு ஐரோப்பிய நாடு பெலரூஸ். மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்று மாலி. இவ்விரு நாடுகளிலும் இருவேறு பிரச்சினைகள் போய்க் கொண்டிருக்கின்றன. பெலரூஸ் நாட்டில் நீண்ட காலமாக அதிபர் பதவியில் இருந்து வருபவர் அலெக்ஸாண்டர் லூகஷென்கோ. அவரைப் பதவி விலகுமாறு வலியுறுத்திக் கடந்த வார இறுதியில் பல்லாயிரக்கணக்கான பெலரூஸ்காரர்கள் போராட்டத்தில் குதித்தனர். நிலமை இவ்வாறிருக்க, மாலியில் இரண்டாவது தடவையாக அதிபராகத் தெரிவாகி ஆட்சியிலிருந்து வந்த அதிபர் மற்றும் தலைமை அமைச்சரை அந்த நாட்டு படைத் தளபதி சிறைப்பிடித்து ஆட்சியைக் கவிழ்த்துள்ளார்.

**பெலரூஸின் நிலவரம்**

1994ஆம் ஆண்டிலிருந்து பெலருஸின் அதிபராக ஆட்சியில் இருந்து வருகிறார் அலெக்ஸாண்டர் லூகாஷென்கோ. ஆட்சி மாற்றம் என்கிற பெரும் எதிர்பார்ப்புடன் அண்மையில் அங்கு அதிபர் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் அலெக்ஸாண்டர் லூகாஷென்கோ 80.1 சதவீத வாக்குகளையும், அந்த நாட்டின் எதிர்க்கட்சி வேட்பாளர் ஸ்வெட்லானா டிகானோவ்ஸ்காயா 10.12 சதவீத வாக்குகளையும் பெற்றனர் என்று பெலரூஸின் தேசிய தேர்தல் ஆணையகம் அறிவித்தது. அதையடுத்து மக்கள்



கொந்தளிக்கத் தொடங்கினர். வீதிகளில் பெருமளவில் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர். பெரும் எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் முடங்கிப் போனது பெலரூஸ். இது பெரும் மோசடி என்றும் ஜனநாயகக் கொலை என்றும் மக்கள் கோஷமெழுப்பினர். பெலாரூஸின் தலைநகரில் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். 31 ஆயிரம் பேர் இந்த எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்றனர் என்று பெலரூஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த இந்தப் போராட்டங்கள் உலக நாடுகளைப் பெலரூஸ் பக்கம் திரும்ப வைத்தன.

**மாலியின் நிலவரம்**

கடந்த செவ்வாய்க் கிழமை மாலியில் திடீரென இராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றி, அந்த நாட்டு அதிபர் இப்ராஹிம் பவுபக்கர் கெய்ட்டா, பிரதமர் மெய்கா பவ்பு சிசே ஆகியோரைச் சிறைப் பிடித்தனர். அவர்களுக்கிடையில் நடந்த நீண்டநேரப் பேச்சுக்குப் பின்னர் தான் பதவி விலகுகிறார் என்றும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாகவும் தொலைக்காட்சியில் மக்களுக்கு அறிவித்தார் அதிபர் இர்ராஹிம் பவுபக்கர் கெய்ட்டா. 2ஆவது முறையாக அதிபராகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அவரின் பதவிக்காலம் முடிய 3 ஆண்டுகள் இருக்கும் நிலையில், அவரை பதவியிலிருந்து விலகக் கோரிப் பல மாதங்களாக மாலி மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையிலேயே அங்கு இராணுவப் புரட்சி ஏற்பட்டு, ஆட்சியை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இராணுவத்தின் பிடியில் இருந்துவரும் அதிபர் இப்ராஹிம் பபுபக்கர் கெய்ட்டா தொலைக்காட்சியில் முகக் கவசம் அணிந்தவாறு பேசுகையில் "நான் உடனடியாக எனது பதவியை ராஜினாமா செய்கிறேன், ராஜினாமா நடைமுறைக்கு வருகிறது. நாடாளுமன்றமும் கலைக்கப்படுகிறது" எனத் தெரிவித்தார்.

**பெலரூஸ் தேர்தலில் முறைகேடு**

அண்மையில் பெலரூஸில் நடந்து முடிந்த தேர்தலையொட்டி 6 ஆயிரத்து 700 பேர் கைது செய்யப்பட்டனர். தற்போது அதில் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, பாதுகாப்புப் படையினரால் கடுமையான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி வேட்பாளர் ஸ்வெட்லானா டிகோனோவ்ஸ்காயா, லிதுவேனியாவுக்குச் சென்றுள்ளார்.

வாக்குகள் முறையாக எண்ணப்பட்டிருந்தால், 60 - 70 சதவீதம் வரையான வாக்குகள் தனக்குக் கிடைத்திருக்கும் என்று கூறும் அவர், புதிய தேர்தலுக்கும், நாட்டின் தேசிய தலைவராக மாறுவதற்கும் தான் தயாராக இருக்கிறார் எனவும் கூறுகிறார். இன்னொரு தேர்தல் நடத்தப்படுமானால் அது, பெலரூஸ் இறந்து போவதற்குச் சமம் என்கிறார் அலெக்ஸாண்டர் லூகஷென்கோ.

**போராட்டங்களும் பதவி விலகல்களும்**

மக்களின் போராட்ட அதிகரிப்புக் காரணமாகப் பொதுவெளியிலும் தொலைக்காட்சி ஊடகங்களிலும் நேரலையாகத் தோன்றிய பெலரூஸ் அதிபர் லூகஷென்கோ தனது பக்க நியாயங்கள் குறித்துப் பேசி வருகிறார். ஆனாலும் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் அங்கு தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. பெலரூஸின் மத்திய மின்ஸ்க் பகுதியில் உள்ள இரண்டாம் உலகப்போர் நினைவிடம் அருகே கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் பேர் திரண்டு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். மற்றொரு எதிர்கட்சி வேட்பாளர் டிகோனோவ்ஸ்காயாவின் ஆதரவாளர்கள் மற்ற நகரங்களில் பெருமளவில் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அத்தோடு பெலாரூஸின் தற்போதைய நிலவரப்படி ஏராளமான அதிகாரிகள், பதவிகளில் இருந்து விலகியிருக்கின்றனர் என்று தகவல்கள் வருகின்றன.

**மாலி இராணுவத்தினர் அதிரடி**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மாலியில் நடந்த தேர்தலில் மக்களால் ஜனநாயக முறைப்படிதான் இப்ராஹிம் பபுபக்கர் தெரிவு செய்யப்பட்டார். தற்போது இராணுவத்தின் பிடியில் இருப்பதால், வேறு வழியின்றி அவர் பதவி விலகுகிறார் என்று அறிவித்துள்ளார். பமாகோ நகரின் வீதிகளில் மாலி இராணுவத்தினர் துப்பாக்கி ஏந்தி, சுதந்திரமாக வலம் வந்தனர். அப்போதே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் நகரம் வந்துவிட்டது என அறியப்பட்டது. பின்னர் சடுதியாக அதிபர் இப்ராஹிம் பபுபக்கர், பிரதமர் மெய்கா பவ்பு சிசே ஆகியோரின் இல்லங்களை இராணுவத்தினர் சுற்றிவளைத்து, துப்பாக்கியால் மேல்வெடி வைத்துத் அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அவர்களிருவரையும் கைதுசெய்துள்ளதாக ஊடகங்களுக்கு அறிவித்தனர்.

**வீதிகளில் பெருமளவில் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர். பெரும் எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் முடங்கிப் போனது பெலருஸ். இது பெரும் மோசடி என்றும் ஜனநாயகக் கொலை என்றும் மக்கள் கோஷமெழுப்பினர். பெலாருஸின் தலைநகரில் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள்.**

**மாலியும் பெலரூஸும்**

மாலியில் 2013ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 77 சதவீத வாக்குகள் பெற்று அதிபரான இப்ராஹிம் பபுபக்கர் 2018ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலும் மீண்டும் அதிபரானார். ஆனால், அவரது ஆட்சியை மக்கள் வெறுக்கின்றனர். காரணம், அதிபர் இப்ராஹிம், மாலியை இதற்கு முன் ஆட்சி செய்த பிரான்ஸ் நாட்டுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் என்றும் மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாக இருக்கிறார் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அவரைப் பதவி விலகக்கோரி பல மாதங்களாக ஒரு தரப்பினர் பல போராட்டங்களை நடத்தியதால், அமைதியற்ற சூழல் நிலவி வந்தது. இந்தச் சூழலில்தான் ஆட்சியை இராணுவம் கைப்பற்றிக் கலைத்துள்ளது.

ஆபிரிக்க நாட்டில் மக்களின் எதிர்ப்புக் குரலுக்கு அரசு அசமந்தம் காட்ட, இராணுவம் செவிசாய்த்திருக்கிறது.



ஐரோப்பாவில், பெலாரஸில் தொடர்ந்து ஆட்சியிலிருக்கின்ற அதிபரின் பக்கமாக - ஜனநாயக வழியில் நிற்கிறது இராணுவம். ஜனநாயகத்தின் எதிர்த் தரப்பாக அங்கு மக்கள்.

# குடித்துவிட்டு ஏறினால் கார் ஓடாது...!

- ஜோதா





குளிர்சாதனப் பெட்டிக்குள் இருக்கின்ற சுவையுணவுகளை நள்ளிரவில் திருடி உண்ண முனையும்போது குளிர்சாதனப் பெட்டி எங்களைக் கண்டிப்பதைக் கற்பனை செய்து பாருங்கள்? நாம் கவலையாக இருக்கும் நேரத்திலும் போதையில் இருக் கும்போதும் எங்கள் கார் ஓட மறுத்தால் எப்படியிருக்கும்? சலவை இயந்திரங்களும், கைக்கடிகாரங்களும் கோபத்தால் கூக்குரலிட்டால்...?

இவைகள் வெறும் கற்பனைகளல்ல. எதிர்காலத்தில் இது போன்ற உணர்திறன் உள்ள இயந்திரங்களை மனிதர்கள் பயன் படுத்துவது மிக அவசியமானதாகின்றது. கேர்ள் டிகோடட் என்ற நூல் இவ்வாறாக இயந்திரங்களுக்கு உணரும் திறன் இருக்கவேண்டிய தேவை குறித்து விளக்கி நிற்கிறது. இதை எழுதியவர் ராணா எல் கலியோபி என்ற எகிப்தியப் பெண். புதிய தொழில்நுட்பத்தை மனிதநேயமாக்கு வதற்கான அவரது தேடலாக அந்தப் புத்தகம் இருக் கிறது.

எகிப்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்த எல் கலியோபி இன்றைக்கு 'அஃபெக்டிவா' என்கிற அமெரிக்க நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி! தொழில் மென் பொருள், செயற்கை நுண்ணறிவு நிறுவனம் இது. தானியங்கியாகச் செயற்படவல்ல நுண்ணறிவுத் தொழில்நுட்ப இயந்திரங்களைத் தயாரிப்பது இதன் பணி. தொழில்நுட்பத்தை மனிதநேயமாக்கும் நோக்கில் இது உள்ளது. முன்னணிக் கார் உற்பத்தி நிறுவனங்கள், கடற்படை மேலாளர்கள், ரைட்ஷேரிங் நிறுவனம் போன்ற பலதரப்பட்ட பிரிவினருக்காகவும் தனிப்பட்ட ரீதியில் மனித உணர்திறன்களை அறிந்து செயற்படும் கருவிகளை உருவாக்க அஃபெக்டிவா உதவுகிறது. மனித உணர்வுகளைப் புரிந்துசெயற்படுகின்ற இயந்திரங்களின் காலத்துக்கு மனிதர்களை அழைத்துச் செல்ல ஆசைப்படுகிறார் ராணா அல் கலியுபி.

எகிப்தைச் சேர்ந்த அவர் தனது கணிப்பொறி அறிவியல் ஆராய்ச்சிப் படிப்புக்காக லண்டனின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்குச் சென்று அங்கு செயற்கை உணர்வு அறிவுத் திறன் - மனித உணர்வைப் படிக்கும் வகையில் கணிப்பொறிகளைத் தயாரிப்பது தொடர்பில் கற்றார். அமெரிக்கா சென்று தனது ஆய்வின் சாத்தியங்களை ஆராய்ந்து வெற்றி கண்டுள்ளார்.





"நாம் ஒரு நபருடன் தொடர்புகொள்ளும் போது, வார்த்தைகள் வழியாக வெறுமனே 10 சதவீதம்தான் பேசுகிறோம். முகபாவம், குரல் தொனி, உடல்மொழி மற்றும் இதர குறிப்புகளின் வாயிலாகவே அதிகமும் தொடர்பாடு கின்றோம். அப்படியான வார்த்தைகளற்ற தொடர்புறுத்தல் நமது கணிப்பொறிகளுக்குத் தெரியாதது. இனியும் இந்த நிலை அப்படியே நீடிக்காது. உங்களது டிஜிட்டல் கருவியுடன் நீங்கள் கோபப்பட்டால், அது உங்களது சங்கடத்தைப் புரிந்து கொள்ளும் நிலை எதிர்காலத்தில் வரப்போகிறது என்றே கருது கிறேன்.

எனது ஆராய்ச்சிப் படிப்பின் இலக்காக முகபாவங்களை வாசிப்பதற்குக் கணிப்பொறிகளுக்குப் பயிற்சி அளிப்பது இருந்தது. ஒரு நபரின் மனநிலை, உணர்வு நிலைகளை அனுமானிக்கும் வேலை அது.

உணர்வுகளின் அறிவியல் தொடர்பானது எனது கல்வி. விடு முறைக்குக் கெய்ரோவுக்கு (எகிப்தின் தலைநகர்) வரும்போது எனது பாட்டியின், குடும்ப உறுப்பினர்களின் உரையாடலைக் கவனிப்பேன். கைகளை அசைப்பது, சத்தமாகச் சிரிப்பது, இன்னொருவர் பேச்சில் குறுக்கிடுவது என அந்த உயிர்ப்பான உரையாடலைக் கவனிப்பேன். சிரிப்பு என்பது வாயுடன் முற்றிலும் தொடர்புடையது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால், கண்களைச் சுற்றிச் சுருக்கங்கள் தோன்றாமல் வெளியிடப்படும் சிரிப்புச் சிரிப்பே அல்ல. எனது பெரியம்மா தலையிலிருந்து கால் வரை நிகாப் அணிபவர். கண்களில் மட்டும்தான் ஒரு சிறிய பிளவு தெரியும். ஆனால், எனக்கு அவரது கண்களைப் பார்த்தால் போதும்; அவர் அன்றைக்கு மகிழ்ச்சியாக இருக்கிறாரா இல்லையா என்பது தெரிந்துவிடும். உணர்வுசார் செயற்கை அறிவுத் திறன் மூலமும் அதைக் கண்டுபிடிக்க முடியும்.

இந்தத் திறனை இயந்திரங்களுக்கு முக்கியமாக கணினிகளுக்கு மடைமாற்றம் செய்துவிட்டோமானால் அது மனிதர்களின் உணர்வுகளுக்கு ஏற்ப நடந்துகொள்ளும் வீட்டுப் பயன்பாட்டுச் சாதனங்கள் முதல் பல்வேறு இயந்திரங்கள் வரைக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்கிறார் ராணா.



## மயிர்க்கொட்டிக்கு றெக்கை முளைக்கிறது...

உதடுநனையப் பால்குடிக்கும் என் மகளுக்கு
றப்பர் நிப்பிள்களே முலையாகிப்போகின
யானை தடவிய குருடன்போல ஒவ்வொருநாளும்
அம்மாவின் அறிமுகம் அவளுக்குப் புதிதாய் இருக்கிறது
அம்மா என்பவள் அவளுக்குக் கடவுள்போல
உருவமும் தெரியாது உணரவும் முடியாது
சாமப்பொழுதுகளில் நெஞ்சுமயிரளைந்து
கதைகேட்கும் போதெல்லாம்
தவறியேனும் அம்மாக்கதைகளை நான்
சொன்னதுமில்லை அவள் கேட்டதுமில்லை
சத்தங்களின் தேசத்தில் அவள் அம்மா
காணாமல் போய்
கல்லானாளோ? கடவுளானாளோ?
யாருக்குத்தெரியும்
அவளுக்குப் புதிய அம்மா செய்வதற்கு
நாள் பார்க்கிறார்கள்.
ஒரு சுடுசாமப்பொழுதில்
என் தலைகோதி தைலம்தடவியபோது
என்மகள் எனக்கு அம்மாவாகிப்போனது
எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை
அவளுக்குப் புதிய அம்மா செய்வதற்கு
நாள் பார்க்கிறார்கள்.
நல்லநாள் வருவதற்குள் முலைகளைப் பற்றிய புரிதல்
அவளுக்கும் வந்துவிடும்
அப்போது
அவளாகவே தனக்குரிய அம்மாவைச்
செய்யத்தொடங்கியிருப்பாள்.

- சி.ப.வேந்தன்

# அமெரிக்காவின் கலி!

இலங்கையைப் போலன்றிப் பூமிக் கோளத்தின் பெரும்பகுதியில் படர்ந்துள்ள நாடு அமெரிக்கா. மத்திய கோட்டுக்கு அண்மையாக அமையாது கனடாவுடன் ஒட்டிய குளிரான ஆர்ட்டிக் முனையுடன் அமெரிக்கா தொடர்பு பட்டிருந்தாலும் அதன் பெரும்பாலான பகுதிகள் வெப்பம் மிகுந்தவையே. கடும் வெப்பம் நிலவுகின்ற பாலைவனம் என்று வர்ணிக்கப்படுகின்ற மொகாவிப் பாலைவனம் அமெரிக்காவில்தான் உள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் அமைந்துள்ள அந்தப் பாலைவனத்தில் அண்மையில் அதிகளவு வெப்பநிலை பதிவாகியிருக்கிறது. இதுவரை பூமியில் பதிவான வெப்பப் பதிவுகளில் உச்சம் அது.

என்னதான் வல்லரசாகவும், தொழில்நுட்ப - அறிவியலில் வளர்ச்சி கண்டுள்ளதாகவும் இருந்தாலும் அமெரிக்காவால் இயற்கையை ஒருபோதும் வெல்லவே முடியவில்லை. அதிலும் அமெரிக்காவின் மேற்குப் பகுதியிலுள்ள கலிபோர்னியா மாநிலம் சந்திக்கின்ற இடர்கள் அதிகம்.

அடிக்கடி அங்கு ஏற்படுகின்ற காட்டுத் தீயால் உயிரிழப்புகளுக்கும், சொத்திழப்புகளுக்கும், பெரும் சேதங்களுக்கும் முகம் கொடுத்து வருகிறது அமெரிக்கா. கலிபோர்னியாவை அமெரிக்காவின் துயரம் என்று சொன்னாலும் தகும்.

இந்த நிலையில்தான், கலிபோர்ணியாவிலுள்ள மொகாவிப் பாலைவனத்திலுள்ள சாவுப் பள்ளத்தாக்கு என்கிற பகுதியில் பூமியின் அதிகபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவான இந்த உச்ச வெப்பத்தை **130** பரன் கீட் அல்லது **54.4** டிகிரி செல்சியஸ் என்று அளவிட்டுள்ளனர்.

அந்தப் பள்ளத்தாக்கின் ஃபர்னேஸ் க்ரீக் எனும் இடத்தில் இந்த வெப்பநிலை பதிவாகியுள்ளது. அமெரிக்காவின் மேற்குக் கடலோரப் பகுதிகளில் கடுமையான வெப்ப அலை வீசி வருகின்றது என்று செய்திகள் எழுந்துள்ள சூழலில் இந்த அதிகபட்ச வெப்பமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்தடுத்துக் காட்டுத் தீக்கு



இரையாகின்ற கலிபோர்னியாவில் இந்தச் சமிக்ஞை இனித் தொடர் இடர்களுக்குக் கட்டியம் கூறுகின்றதோ என்று அஞ்சுகிறது அமெரிக்கா.

நாம் வாழும் இந்தப் பூமியில் எந்தவொரு கால கட்டத்திலும் அளவிடப்பட்ட வெப்பநிலையில் முதல் மூன்று இடங்களில் ஒன்று. அதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதில் முதன்மையானதாக இது இருக்கலாம் என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

ஞாயிற்றுக்கிழமை பசுபிக் நேரப்படி பிற்பகல் **3.41** நேரத்திற்கு இந்த அதியுயர் வெப்பநிலை பதிவாகியிருக்கின்றது என்று தேசிய காலநிலை அவதானிப்பு நிலையம் அறிவித்திருக்கிறது. ஒரு வருடத்திற்கு முன்னர் பதிவான வெப்பநிலையிலும் பார்க்க இது மூன்று டிகிரி செல்சியஸ் அதிகம் என்றும் அது அறிவித்திருக்கின்றது.

அமெரிக்காவின் இந்த அளவீட்டை உலக வானிலை ஆய்வு அமைப்பு அங்கீகரித்த பின்னரே அது உலகின் அதிகூடிய வெப்பநிலைப் பதிவு என்கிற நிலையை அடையும். இதுவரையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்தப் பதிவு நம்பத்தகுந்ததாகத்தான் இருக்கின்றது என்று அந்த அமைப்பின் தலைவர் ரண்டி செர்வேனி தெரிவித்தார். இருந்தாலும் தமது அமைப்பின் சார்பில் மேலதிக ஆய்வுகள் நடத்தப்பட்டதன் பின்னரே அது உறுதிப்படுத்தப்படும் என்றார் அவர்.

**1993**ஆம் ஆடி (ஜூலை) மாதம் **10**ஆம் நாளும் இதே சாவுப் பள்ளத்தாக்கில் **134** பரன்கீட் வெப்பநிலை பதிவாகியிருக்கின்றது. ஆனால் அறிவியல் உலகம் அப்போதைய அந்த அளவீட்டு முறை குறித்துப் பல கேள்விகளை எழுப்பி நிற்பதால் இதுவரை அந்த வெப்பநிலை உலகின் அதி உயர் பதிவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**2016**ஆம் ஆண்டு கிறிஸ்டோபர் புருட் என்கிற அறிவியலாளர் இந்த அளவீடு தொடர்பில் நடத்திய விரிவான ஆய்வில், வானியல் எதிர்வுகூறல்களின் அடிப்படைகளில் பார்க்கும் போது அந்தளவு வெப்பத்திற்கான சாத்தியமே இல்லை என்று கூறியிருந்தார்.






**2013** ஆனி (ஜூன்) **30**ஆம் திகதி சாவுப் பள்ளத்தாக்கிலும் **2016** மற்றும் **2017**இல் முறையே குவைத் மற்றும் பாகிஸ்தானிலும் பதிவாகிய **129** பரன்கீட் என்கிற வெப்பநிலைப் பதிவே இதுவரையில் நம்பத்தகுந்த அளவீடு என்று காலநிலை ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**130** பரன் கீட் என்கிற இந்த வெப்பநிலை சந்தேகத்திற்கிடமில்லாமல் காலநிலை ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், **1931**ஆம் ஆண்டின் பின்னர் பதிவான ஆகக் கூடிய வெப்பநிலையாக இது பதிவாகும். **1873**ஆம் ஆண்டின் பின்னர் பதிவான **3**ஆவது மிக உயர் வெப்பநிலையாகவும் இது இருக்கும்.

இதற்கு முன்னர் **1913**ஆம் ஆண்டு சாவுப் பள்ளத்தாக்கில் பதிவான **134** பரன் கீட் என்கிற வெப்பநிலையளவும் துனிசியாவின் கெபிலியில் **1931**ஆம் ஆண்டு ஆடி (ஜூலி) **7**ஆம் நாள் பதிவான **131** பரன்கீட் என்கிற அதியுயர் வெப்பநிலையும் சரியானவையா என்கிற கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் உள்ளன.

# என்நாளும் நலம் வாழ



மருத்துவர்: **கந்தையா சோதிதாசன்**

## முருங்கை எனும் மகிமை

கண் ஒளி சேரும், தேகக் கடும்வலி போக்கும்
நல்லதாய் இரத்தம் செய்யும்
கர்ப்ப ஆற்றல் பேணிடும்
தாய் மடி சுரக்கும் தன்மையால் தகுதியாகும்
ஆண்மையின் குறைகள் நீக்கி அளவிலா
இன்பம் சேர்க்கும் ஆதலால் அன்பைக்கூட்டும்
பெண்ணே கேள்! இதன் இலை, காய்,பூ,
பட்டை, பிசினதும் மருந்தேயாகும்.
கண்மணி மண்ணில் நல்ல முருங்கைபோல்
மகிமை சேர் மரமது கண்டதுண்டோ ..

**விளக்கவுரை:-**

முருங்கை கண்ணின் பார்வைத் திறனை அதிகரிக்கிறது. முருங்கை இலையுடன் மிளகு சீரகம் சேர்த்து ரசம் தயாரித்துக் குடிக்க உடல் வலி, அசதி நீங்கும். பதினெட்டு வகையான அமினோ அமிலங்கள் மற்றும் இரும்புச் சத்து ஆகியன முருங்கையில் அதிகம் இருப்பதால் குருதியில் ஈமோகுளோபினை அதிகரிக்கச் செய்கிறது. குருதி அழுத்தத்தையும் சீர் செய்கிறது.

பெண்களின் கர்ப்பப் பையை வலுப்படுத்துகிறது அத்தோடு தாய்ப்பாலையும் அதிகரிக்கச் செய்கிறது. இது ஆண்மைக் குறைபாட்டை நிவர்த்தி செய்கிறது முருங்கைப்பூ சிறிதளவு எடுத்து நெய்யில் வதக்கி காலையில் உணவின் முன் அருந்தி வர ஆண்மை அதிகரிக்கும். இதனால் இல்லறத்தில் அன்பு அதிகரிக்கிறது. பெண்ணே கேட்பாயாக! இதன் காய், பூ, பட்டை, பிசின் என அனைத்துப் பாகங்களும் மருந்தாகின்றன. இந்தப் பூமியில் முருங்கைபோல் மகத்துவம் பொருந்திய மரத்தை நீ கண்டிருக்கிறாயா!.

சிறுகதை

# கணிப்பு

- மலரன்னை -

கந்தவனம் வீட்டு மாடிக் கொட்டிலில் வகுப்பு நடந்துகொண்டிருந்தது. கந்தவனத்தாருக்குப் பாரிசவாத நோய் வந்து படுக்கையில் விழுந்ததால் பராமரிக்க ஆளின்றிப் பசுமாடுகள் விலைபோய்விட்டன. வெறுமையாகிவிட்ட மாட்டுக் கொட்டில் இப்போது திருவருட் செல்வன்... அதாவது கந்தவனத்தாரின் ஏக புத்திரனது தனி வகுப்பறை.

திருவின் தனி வகுப்புகளுக்குச் சமூகமளிப்பவர்கள் எல்லாமாக ஏழு பேர்தான். அவர்களுள் மூவர் பெண்பிள்ளைகள். எல்லோரும் வசதிபடைத்தவர்கள் மட்டுமல்ல திருவின் மீதும் அவனது கற்பித்தல் செயற்பாட்டின் மீதும் அதீத நம்பிக்கை கொண்டவர்கள். இவ்வளவுக்கும் திரு கல்வியில் ஒன்றும் பெரிய பட்டதாரி இல்லை. போன வருடம் நடந்த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி. மூன்று பாடங்களிலும் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதுடன் மாவட்ட ரீதியில் மூன்றாமிடத்தையும் பெற்றவன்.

அவனாகவே விரும்பி வகுப்புத் தொடங்கவில்லை. சில மாணவர்களின் வற்புறுத்தலால் கற்பிக்கத் தொடங்கியிருந்தான். எல்லாம் இந்த ஆவணிவரைதான். தான் கிரகித்து வைத்திருக்கும் விடயங்களை மற்றவர்களுக்கு எளிதில் புரியும்படியாக விளக்கும் ஆற்றல் அவனிடம் நிறைந்திருந்தது. அதனால்தான் மாணவர்களுக்கு அவன் மீது ஓர் ஈர்ப்பு இருந்தது.

அன்று கடந்த கால வினாத்தாள்களில் இருந்து வினாக்களைத் தெரிவு செய்து விளக்கமளித்துக் கொண்டிருந்தான் திரு. மாணவர்களில் ஓரிருவர் தமக்கு விளங்காதவற்றை மீண்டும் சொல்லித் தருமாறு கேட்டனர். திருவும் சளைக்காது பதிலிறுத்துக் கொண்டிருந்தான். நேரம் போவது தெரியாமல் படிப்பில் மூழ்கிப் போய்விட்டனர்.

காலை நேரமாதலால் திருவின் தாய் சிந்தாமணி. முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். தெருவால் போய்க் கொண்டிருந்த மரக்கறி வியாபாரிகள் இருவரின் குரல் அவளது செவிகளில் வந்து மோதியது.

"என்னடாப்பா கந்தவனத்தார் வீட்டுக்கு முன்னாலை அஞ்சாறு சைக்



கிளுகள் வந்து நிக்குது. ஆளுக்கு ஏதும் வில்லங்கமோ?"

"இல்லை மச்சான். அது வந்து. கந்தவனத்தாற்ற பெடியன் ரியூசன் குடுக்கிறானாம். அதுதான் பெடியள் வந்திருக்குதுகள்போல"

"என்னடா பகிடி விடுறாய். முந்த நாள் முளைச்ச பெடி! அதுக்கிடையில ரியூசன் குடுக்குதோ?"

"இல்ல மச்சான் அவன் போன வருசம் நடந்த சோதினையில பாஸ் பண்ணி இப்ப கம்பஸ்ஸுக்கு எடுபட்டிருக்கிறானாம்"

"அதை விடு! உவனால உந்தப் பட்டதாரி வாத்திமாரைவிட நல்லாய்ப் படிப்பிக்க ஏலுமோ? எல்லாம் காசுக்கு ஆசைப்பட்டுச் செய்யிற ஏமாத்து வேலை"

அவர்கள் உரையாடியவாறே தெரு முனையால் போய் மறைந்து விட்டார்கள்.

சிந்தாமணிக்குப் பக்கென்றது. அன்று மதியமே மகனிடம் தெருவால் போனவர்களின் சம்பாஷனை பற்றி எடுத்துச் சொன்னாள்.

ஒரு நமட்டுச் சிரிப்புடன் திரு வாய் திறந்தான்.

"அம்மா நான் இஞ்சை ரியூட்டறியே நடத்திறன்? ஏதோ தெரியாததைச் சொல்லித் தாங்கோ எண்டு கேட்டு வாறவைக்கு என்னாலை ஏலுமானதைச் சொல்லிக் குடுக்கிறன். அவ்



வளவுதான்"

சிந்தாமணியின் மனதுக்குள் ஒரு சிறு உறுத்தல் இருக்கத்தான் செய்தது. மகனிடம் அதை வெளிப்படுத்தினாள்.

"உவள் எங்கட கவிதாவும் இந்த முறை சோதினை எடுக்கப் போறாள் தானே அவளும் வந்து உன்னட்டைக் கேட்டுப் படிக்கலாம்தானே?"

"அது அவையின்ர விருப்பம்"

ஒரு வாய்ப் பேச்சுக்குச் சொல்லிவிட்டானே தவிர உள்ளூர அவனுக்கு மாமாவின் பெண்ணான கவிதா மீது ஒரு நாட்டம் இருப்பது உண்மை.

சிந்தாமணி அத்துடன் விட்டுவிடவில்லை. அன்று மாலையே தனது அண்ணன் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள். தங்கையை வரவேற்றுக் குசலம் விசாரித்த சுந்தரலிங்கம். திருவைப் பற்றியும் வினவினார்.

"என்ன சிந்தாமணி உன்ர மகன் ஊருக்குள்ள ரியூசன் குடுக்கிறானாம். மெய் தானோ?"

சிந்தாமணியின் மனம் பெருமையால் குதூகலித்தது.

"ஓமண்ணை! அங்கினை நாலைஞ்சு பிள்ளையள் வந்து. படிக்கிறவை. அதுதான் நான் கவிதாவையும் வந்து கேட்டுப் படிக்கச் சொல்லலாமெண்டு நினைச்சுத்தான் வந்தன்"

சிந்தாமணியின் அப்பாவித்தனமான வார்த்தைகளைக் கேட்டு எகத்தாளமாகச் சிரித்தார் சுந்தரலிங்கம். அதன் அர்த்தம் புரியாமல் சிந்தாமணி திகைத்து நின்றபோது. அவர் நிதானமாகச் சொல்லத் தொடங்கினார்.

"இஞ்சை பார் சிந்தாமணி, நான் என்ர பிள்ளைய ரவுணில இருக்கிற பிரபலமான ரியூட்டயிலதான் சேர்த்திருக்கிறன். அங்க இப்ப பேப்பர் கிளாஸ் நடந்துகொண்டிருக்குது. அதை விட்டிட்டு உன்ர மகனிட்ட வந்து. பாடங் கேக்க அவன் என்ன அந்தளவு பெரிய படிப்பாளியோ? போன வருசம் சோதினை எடுத்தவன். ஏதோ நல்ல றிசல்ட் வந்திட்டுது எண்டாப்போல அவனிட்டப்படிக்க அனுப்புறதுக்கு நான் என்ன முட்டாளே"



வாய் ஓயாமல் பொரிந்து தள்ளியதைக் கேட்ட சிந்தாமணிக்குச் சப்பென்று போய்விட்டது. சுதாகரித்துக் கொண்டவளாய் வீடு திரும்பினாள். மனம் குறுகுறுத்த போதிலும் திருவிடம் இது குறித்து எதுவும் சொல்லவில்லை.

காலம் நகர்ந்து கொண்டிருந்தது.

திருவும் தனது கல்வியைத் தொடரப் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குப் போய்விட்டான். மகனைப் பிரிந்து வாழ்வது சிந்தாமணிக்குத் துயரத்தைத் தந்தபோதிலும் மகனுடைய மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு காலத்தைக் கழித்தாள். கணவனைப் பராமரிப்பதிலே அவளது பொழுது கரைந்தது. நேரம் கிடைக்கும்போதெல்லாம் திரு அம்மாவுடன் அலைபேசியில் கதைப்பான்.

இப்போதெல்லாம் சிந்தாமணி அண்ணர் வீட்டுக்குப் போவதில்லை. மகன் கம்பஸுக்குப் போனதிலிருந்து அவளுக்குப் பெருமை தலைக்கேறி விட்டுது என்று அவர் ஊருக்குள் சொல்லித் திரிவதாக அறிந்து கொண்டாள்.

அன்று வெள்ளிக்கிழமை. மாலை ஐந்தைத் தாண்டியிருந்தது மணி. சிந்தாமணி கணவனைச் சக்கர நாற்காலியில் இருத்தி முற்றத்து மாவின் கீழ் நகர்த்தி வந்தாள். கந்தவனமும் அதில் இருந்தவாறே வாசலில் போவோர் வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். வீட்டுக்குள் படுக்கையே தஞ்சம் என்று கிடந்தவருக்கு இது ஒரு நிவர்த்தியாகத் தோன்றியது. பாதசாரிகளில் சிலர் நின்று அவரிடம் குசலம் விசாரிப்பது அவருக்கு மன நிறைவைக் கொடுத்தது.

திடீரென இரண்டு சைக்கிள்கள் வாசலில் வந்து நின்றன. அதில் வந்திறங்கியவர்களை ஆராய்ந்தாள் சிந்தாமணி. அவர்கள் வேறு யாருமல்லர், திருவிடம் பாடம் கேட்டுப் படித்த தமிழரசியும், கலைமகளும்தான்.

"வாங்கோ பிள்ளையள்! என்ன இந்தப் பக்கம்?"

"அது ஒண்டுமில்லை! அம்மா எங்களுடைய எக்ஸாம் றிசல்ஸ் வந்திட்டுது. அதுதான் திரு அண்ணாவுக்கு எடுத்துச் சொல்லுவமெண்டு..." இழுத்தாள் தமிழரசி.

"மெய்யே பிள்ளையள்! நீங்க பாஸ் பண்ணீட்டியளோ?"

"ஓம் அம்மா! நாங்கள் எல்லாரும் பாஸ் அதைத்தான் திரு அண்ணாவுக்கு எடுத்துச் சொல்லுவமெண்டால்... அவரின்ரை நம்பர் எங்களிட்ட இல்லை. உங்களிட்டக் கேப்பம் எண்டு வந்தனாங்கள்."

"அப்பிடியே சங்கதி! எனக்கு அவனின்ர நம்பர் தெரியாது. போனைத் தாறன் நீங்களே பாருங்கோ..."

அலைபேசியை எடுத்து வந்து அவர்களிடம் கொடுத்தாள் சிந்தாமணி.

அவர்கள் விடைபெறும்போது ஒரு பொதியைக்கொடுத்துவிட்டுப்போனார்கள்.

"நீங்கள் ஸ்வீற்ஸ் சாப்பிடு வீங்களோ தெரியாது. அதுதான் பழங்கள் வாங்கிக் கொண்டு வந்தனாங்கள்"

அவர்கள் போனதும் பொதியைப் பிரித்துப் பார்த்தாள். அப்பிளும், ஒரேஞ்சும் இருந்தன.

இப்போது சிந்தாமணியின் மனதில் ஒரு துடிப்பு. அண்ணரின் மகள் கவிதாவுக்கு என்ன மறுமழி வந்திருக்கும். அதை அறிந்துவிடவேண்டும். மனம் கிடந்து அடித்துக்கொண்டது. மனதை அடக்கிக் கொண்டவாறு வேலைகளில் மூழ்கிப்போனாள்.

வழமையாக இரவு ஏழு மணிபோல் திரு அழைப்பை ஏற்படுத்தி அம்மாவிடம் சுகம் விசாரிப்பான். இன்று மணி ஏழரையாகியும் அவனது அழைப்பைக் காணவில்லை. பதைத்த மனதுடன் இரவு உணவைத் தயாரிக்க முற்பட்டபோதுான் அலைபேசிமணி கிணுகிணுத்தது. அலைபேசியை எடுத்துக் கதைக்கத் தொடங்கினாள்.

"தம்பி தமிழரசியும், கலைமகளும் வந்து உன்ர நம்பர் வாங்கினவை. கதைச்சவையே."

"ஓம் அம்மா! அதுக்கு முதல்லயே நான் எல்லாற்ற றிசல்ஸ்ஸையும் நெற்றில பாத்திட்டன். எல்லாரும் பாஸ்."

"அது சரி தம்பி. உவள்; கவிதாவுக்கு என்ன றிசல்ஸ் பாத்தனியே"

"பாத்தனான் அம்மா! அவா பெயில். ஒருபாடம்தான்பாஸ்பண்ணியிருக்கிறா"

"ஏனாக்கும் உந்தப் பிள்ளை பெயிலானது? மாமா சொன்னாரே பிள்ளையப் பெரிய ரியூட்டறியிலை விட்டுப் படிப்பிக்கிறனெண்டு"

"அம்மா ஒன்றை நாங்கள் வடிவாய்த் தெரிஞ்சு கொள்ளவேணும். காசைக் குடுத்துப் படிப்பை விலைக்கு வாங்க முடியாது. படிக்கிறவை அதிலை ஆர்வமாய் இருக்கவேணும். படிப்பிக்கிறதைக் கவனமாய்க் கேட்டு அதை உள்வாங்கிப் படிக்கவேணும். அங்கைதான் மாமாவின் கணிப்புப் பிழைச்சது"

திருவின் விளக்கம் சிந்தாமணிக்குப் புரியவில்லை. ஆனால். சுந்தரலிங்கத்துக்குப் புரிந்திருக்கும். *

● குமரன்

கோத்தாபய ராஜபக்ச அதிபராகிய பின்னர் ஆரம்பிக்கப்பட்ட சௌபாக்யத்தின் நோக்கு என்கின்ற கொள்கைக்கு அமைவாக வேலையற்ற பட்டதாரிகள் ஐம்பதாயிரம் பேருக்கு வேலை பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்குக் கடந்த மார்ச் மாதம் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களில் பலர் தமது ஆவணங்களை அவர்களின் பிரதேச செயலகங்களில் வழங்கி அறிக்கையிட்டும் இருந்தனர். அந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டமையினால் தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பட்டதாரிகளின் நியமனங்களும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய நிறுத்தி வைக்கப்பட்டன.

தேர்தல் முடிந்த பிற்பாடு எப்படியாவது தமக்கான நியமனங்கள் கிடைத்துவிடும் என எதிர்பார்த்திருந்தவர்களில் பலருக்கு இப்போது தலையில் இடிவிழுந்திருக்கிறது. இலங்கை



# மீண்டுமொரு நிராகரிப்பு..!!

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமது பட்டப் படிப்புகளை நிறைவு செய்தவர்கள், 45வயதுக்கு மேற்பட்டவர்கள், வேறுதொழிலில் இருந்துகொண்டு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி **(EPF/ETF)** பெறுபவர்கள் எனக் குறித்த எண்ணிக்கையான சிலர் தேர்தலுக்குப் பின்னர் வெளிவிடப்பட்ட பட்டதாரிகள் நியமனப் பட்டியலில் உள்வாங்கப்படவில்லை. இதனால் நியமனம் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் அதிருப்தி அடைந்துள்ளதுடன் கொழும்பு கோட்டைக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலைவாய்ப்புக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தபோது தனியாக இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பு மேற்கொண்டவர்களுக்கு மட்டும் தான் வேலை என்று கூறப்பட்டிருக்கவில்லை. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பினை மேற்கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றே கூறப்பட்டிருந்தது.

“நான் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் 9 பாடங்களிலும் நல்ல ரிசல்ஸ் ஓட பாஸ் பண்ணினான். அதே மாதிரி உயர்தரத்திலும் வர்த்தகத் துறையில் மூன்று பாடங்களிலும் பாஸ் பண்ணினான். அதுக்கு பிறகு கம்பஸ்க்கு ரிசல்ஸ் காணாததால இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எண்டு சொல்லி ஒரு நிறுவனத்தில பிரைவேற்ஆ வர்த்தகத்துறை யில டிகிரி முடிச்சன். அப்பிடி டிகிரி முடிச்ச பிறகு அரசால நடத்தப்படுற நிர்வாகசேவை பரீட்சைக்குக் கூட இந்த டிகிரிய வச்சுக் கொண்டு அப்பிளை பண்ணிப் பரீட்சையும் எழுதினான். அதுக்கு பிறகு இந்த பட்டதாரி நியமனத்துக்கு அப்பிளை பண்ணினான். போன மார்ச் மாதம் எனக்கு வீட்ட லெட்டர் வந்து நான் எங்கடை பிரதேச செயலகத்துக்கு போய் டொக்கி மெண்ட்ஸ் எல்லாம் கொடுத்து 2 நாள் அறிக்கையிட வேணும் எண்டதுக்கிணங்கப் போனம். அதுக்குப் பிறகு தேர்தல் திணைக்களம் நியமனங்களை நிறுத்தவேணும் எண்டு சொல்லி வேலைய நிப்பாட்டினாங்கள். நானும் சரி எலெக்சன் முடிஞ்சாப் பிறகு வேலை வரும் எண்டு ஆறு மாதமாப் பார்த்துக்கொண்டிருந்தன். கடைசில நான் வெளிநாட்டுக் கம்பஸில டிகிரி முடிச்சனான் எண்டு எனக்கு வேலை இல்லை எண்டு சொல்றாங்கள். என்ன தான் செய்யிறது எண்டு தெரியேல்ல..” என்றார் நிராகரிக்கப்பட்ட பட்டதாரியான மயிலிட்டியைச் சேர்ந்த கஜன்.

சில பிரதேசங்களில் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பெற்றவை என்று போலியான சான்றிதழ்களைப் பாவித்து குறித்த வேலைவாய்ப்புக்கான விண்ணப்பத்தினை அனுப்பியுள்ளனர் சிலர். இதன் காரணமாகவும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகச் சான்றிதழ்களுக்கான முக்கியத்துவம் இல்லாமல் போய் இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் நியாயமான முறையில் விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் பலரதும் கேள்வியாக இருப்பது - தேர்தலுக்கு முன்னர் நியமனக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும், தற்போது குறித்த அமைச்சு பொறுப் பேற்றதன் பின்னர் நிராகரிக்கப்பட்டமைக்கு காரணம் என்ன..? அரசியல் எமது நியமனத்தினுள் ஆதிக்கம் செலுத்துகின்றதா..?

தேர்தலுக்கு முன்னர் நியமனக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும், தற்போது குறித்த அமைச்சு பொறுப்பேற்றதன் பின்னர் நிராகரிக்கப்பட்டமைக்கு காரணம் என்ன..? அரசியல் எமது நியமனத்தினுள் ஆதிக்கம் செலுத்துகின்றதா..?

எவ்வாறாயினும் உரிய தீர்வினை அமைச்சு எமக்குத் தரவேண்டும். அத்துடன் எமது வேலை வாய்ப்பு விரைவில் உறுதிசெய்யப்பட வேண்டும் எனவும் பொதுவாகத் தெரிவிக்கப்படுக்கின்றது.

இந்த நிலையில் கொழும்பு கோட்டையில் ஒன்றுகூடி கண்டனத்தை வெளியிட்டவர்களில் 45வயதுக்கு மேலான பட்டதாரிகள், **EPF/ETF** பெறுபவர்கள், அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலை கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் தீர்வு பெற்றுத்தரப்படும் என்று ஜனாதிபதி செயலகத்தினால் தெரிவிக்கப் பட்டுள்ளது. எனினும் அமைச்சினால் எந்தவித உறுதிகளும் வழங்கப்படவில்லை என்கிறார்கள் பாதிக்கப்பட்டவர்கள். ■




## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்

5




விண்கலம் பூமி

விண்கலம் சந்திரனுக்குச் சென்று பூமிக்குத் திரும்பும் வழியைக் காட்டுக.

# தன்னிகரில்லா தலைவன்

■ சி.விமலன்

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான மகேந்திர சிங் டோனி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 1990களின் பிற்பகுதியில் குறிப்பாகச் சொன்னால் இந்திய அணியின் விக்கெட் காப்பாளரான நயன் மொங்கியா அணியில் இருந்து நீக்கப்பட்டதற்குப் பிறகு இந்திய அணிக்குக் கிடைத்த எந்தவொரு விக்கெட் காப்பாளராலும் கணிசமான காலம் அந்த அணியில் நீடிக்க முடியவில்லை. நயன் மொங்கியாவில் இருந்து டோனியின் வருகைக்கு இடையிலான காலப்பகுதியில் எம்.எஸ்.கே.பிரசாத், சபா கரீம், விஜய் டாகியா, சாமீர் டிக்கே, தீப்தாஸ் குப்தா, அஜய் ரத்ரா, பார்த்திவ் பட்டேல், தினேஸ் கார்த்திக் ஆகியோர் அறிமுகப்படுத்தப் பட்டதோடு அவ்வப்போது டிராவிட்டும் ஒருநாள் போட்டிகளில் விக்கெட் காப்பாளராகப் பங்களித் திருந்தார்.


இவர்கள் பங்குபற்றிய போட்டிகளில் இந்திய சில வெற்றிகளைப் பெற்றிருந்தாலும் துடுப்பாட்டத்தில் டிராவிட்டைத் தவிர ஏனையவர்கள் சொல்லிக்கொள்ளும் படியான எந்த ஒரு இனிங்ஸையும் ஆடியதில்லை. ஆனாலும் அன்றைய காலத்தில் இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் அது தாக்கத்தைச் செலுத்தவில்லை. காரணம் அந்தக் காலகட்டத் துடுப்பாட்டத்தில் சச்சின், கங்குலி, டிராவிட், லக்ஸ்மன், அசாருதீன், அஜய் ஜடேஜா, ரொபின் சிங், யுவராஜ் சிங், ஷேவாக் எனப் பலமான வரிசை இருந்து வந்தது.

விளையாட்டின் பொழுது விக்கெட் கீப்பிங்கில் பிடியையும் ஸ்ரம்பிங்கையும் தவறவிடுவது ஆட்டத்தின் ஒரு பகுதிதான் என்றாலும் இவர்களுடைய காலத்தில் சில முக்கியமான போட்டிகளில் அவற்றைச் செய்து போட்டி தோல்வியில் முடியும் பொழுது அவர்கள் விக்கெட் கீப்பிங்கை மட்டும் ஒழுங்காகச் செய்தாலே போதும் என்ற நிலையே காணப்பட்டது. அதேசமயம் கில்கிறிஸ்ட் போன்று துடுப்பாட்டத்திலும் விக்கெட் கீப்பிங்கிலும் ஜொலிக்கும் வீரர் ஒருவர் இந்தியாவுக்குக் கிடைத்தால் எப்படி இருக்கும் என்ற நப்பாசையும் ஒவ்வொரு இந்திய ரசிகரிடமும் இருந்தே வந்தது.

2003 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி உட்பட கணிசமான முத்தரப்புத் தொடர்களின் இறுதிப் போட்டிகளில் கங்குலி தலைமையிலான இந்திய அணி தோல்வி அடைந்தாலும் அந்த அணி குறிப்பிட்டுச் சொல்லும்படியான வெற்றிகளை ஒருநாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளை அந்நிய மண்ணிலும் வென்று சாதனை படைத்து வந்ததனால் புதியதொரு தலைமைத்துவத்தின் அவசியம் அப்போது தேவைப்படவே இல்லை. இந்த நிலையில்தான் 2004 மார்கழி 23ஆம் திகதி பங்களாதேஸ் அணிக்கெதிராக அறிமுகமான டோனி தனது 5ஆவது ஒருநாள் போட்டியிலேயே பாகிஸ்தானுக்கு எதிராக அடித்த 148 ஓட்டங்கள் இந்திய அணிக்கும் ஒரு கில்கிறிஸ்ட் கிடைத்துவிட்டார் என்ற நம்பிக்கையை ரசிகர்களிடம் ஏற்படுத்தி இருந்தது.

2007 உலகக் கிண்ணத் தொடரின் தோல்விக்குப் பிறகு இந்திய அணியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும் டோனி தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பொழுது அதிர்ச்சி ஏற்படவே செய்தது. காரணம் டோனிக்கு முன்னதாக 2000ஆம் ஆண்டில் இருந்தே விளையாடி வரும் யுவராஜ் சிங்குக்கு தலைமை கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பே அன்று இருந்தது. ஆனாலும் சச்சின் போன்ற மூத்த வீரர்கள் தலைமைத்துவத்திற்குரிய குணாம்சங்கள் டோனியிடம் அதிகம் இருந்ததைக் கருத்தில் கொண்டே அவரை சிபாரிசும் செய்திருந்தார்கள்.

அதைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இருபதுக்கிருபது உலகக் கிண்ணத்தில் ஆரம்பித்த அவரது வெற்றிப் பயணம் இன்று ஒருநாள் போட்டிகளில் றிக்கி பொண்டிங்குப் பிறகு அதிக போட்டிகளை வென்று கொடுத்த தலைவராகவும் இந்திய அணியை டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்திற்குக் கொண்டு வந்த (2009) முதல் தலைவராகவும் ஐ.சி.சி. நடத்தும் மூன்று விதத் தொடர்களான இருபதுக்கிருபது உலகக் கிண்ணம், 50 ஓவர்கள் உலகக் கிண்ணம், சம்பியன்ஸ் கிண்ணம் தொடர்களை கைப்பற்றிய ஒரேயொரு அணித்தலைவராகவும் பெருமையோடு அவரை என்றென்றும் நினைவுகூரும் வகையில் அமைந்துள்ளது.



டோனி பிரியாவிடை நடத்தி ஓய்வு பெற்றுச் செல்ல மாட்டார் என்றதொரு எதிர்பார்ப்பு அவர் 2014ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு முடிவைச் சடுதியாக அறிவித்த பொழுதே உணரக்கூடியதாக இருந்தாலும் சர்வதேச போட்டிகளில் இருந்தும் அவருடைய ஓய்வு அவ்வாறே அமையும் என்றே எதிர்பார்க்கப் பட்டது. அதேவேளை சென்ற வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடருடன் அவர் ஓய்வு முடிவை அறிவிக்கலாம் என்ற ஊகங்களும் எழுப்பப்பட்டன. ஆனாலும் அவரது சில விளம்பர ஒப்பந்தங்கள் 2021 வரை உள்ளதனால் அவற்றின் சாதக, பாதக நிலைகளைக் கருத்திற் கொண்டு ஓய்வு முடிவை அறிவிக்க முடியாததொரு சூழ்நிலைக்கு டோனி தள்ளப்பட்டதான ஒரு கருத்தும் நிலவியது.

அது உண்மையாயின் இன்னொரு வீரரின் வாய்ப்பைப் பாதிக்காத வகையில் கடந்த ஒரு வருடகாலமாக சுயவிருப்பின் பேரில் டோனி போட்டித் தொடர்களில் இருந்து விலகியதைப் பாராட்டத் தோன்றுகிறது. அதேவேளை காலம் கடத்துவதற்காகவே ஓய்வு விடயத்தைச் சுயநலத்தோடு சிந்தித்திருந்தால் டோனியின் முடிவு கண்டிக்கத்தக்கதாகவே அமையும்.

டோனி பல போட்டிகளில் வெற்றிகரமானதொரு பினிசராக போட்டியை முடித்துக்கொடுத்திருந்தாலும் ஓர் அணித் தலைவராகவே பலரும் அவரை அதிகம் நேசித்திருக்கிறார்கள். காரணம் சில போட்டிகளில் அவரது துடுப்பாட்டம் சிறப்பாக அமையாத சந்தர்ப்பத்திலும் தலைமைத்துவ அனுபவத்தின் வாயிலாகச் சிறந்த களத்தடுப்பு வியூகங்களின் மூலம் வெற்றியை அவர் பெற்றுக் கொடுத்துள்ளார். குறிப்பாக 2016 இந்தியாவில் நடைபெற்ற இருபதுக்கிருபது உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஸ் அணிக்கெதிரான போட்டியில் இந்தியா ஒரு ஓட்டத்தால் பெற்ற வெற்றியை நினைவுகூரலாம்.

துடுப்பாட்டத்தில் இறுதிவரை போராடும் அவர் குணம் அவரைப் பிடிக்காத ரசிகர்களுக்கும் அவரைப் பிடிக்க வைக்கும். குறிப்பாக ஓவர்களைக் கணக்கிட்டு எந்தப் பந்துவீச்சாளரின் பந்து வீச்சுக்கு அடிக்க வேண்டும் எந்தப் பந்து வீச்சாளருக்கு அதிக சிரத்தையோடு முகங்கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு விளையாடுவதுகூட அவரின் மீதான ஈர்ப்பை அதிகரித்ததுண்டு. அவரது மின்னல் வேக ஸ்ரம்பிங்கும் அவர் டி.ஆர்.ஆஸ். முறையீட்டை நடுவரிடம் கேட்டால் அது நிச்சயம் ஆட்டமிழப்பாகவே இருக்கும் என்பது ரசிகர்களின் நம்பிக்கையாகவே இருந்தது. அணி வெற்றி பெறும் பொழுது கூட்டத்தில் ஒருவனாகவும் அணி தோல்வி அடையும் பொழுது தானே முன்வந்து நின்று தலைமைத்துவத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாய் அவர் விளங்கினார்.

டோனி ஒவ்வொரு வீரரினதும் திறமையை - பலம் மற்றும் பலவீனத்தை நன்கறிந்து அதற்குத் தகுந்த முறையில் அவர்களைப் பயன்படுத்தி அணியின் வெற்றிக்கு அவர்களையும் பங்குதாரர் ஆக்கினார். 2013 சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ரோகித் சர்மாவை ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக்கியதன் அறுவடையை இந்திய அணி இன்று அனுபவித்து வருகின்றமை நல்லதொரு உதாரணம். அதுபோல முக்கியமான போட்டிகளில்கூட சூழ்நிலைக்கேற்ப பரிசோதனை முயற்சிகளை எடுக்கத் தயங்காதவர். 2007 உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் ஜோகிந்தர் சர்மாவிற்கு இறுதி ஓவர் வாய்ப்பைக் கொடுத்ததையும் 2011 உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் யுவராஜ் சிங்கிற்கு முன்னதாக டோனி களமிறங்கியதையும் சுட்டிக் காட்டலாம்.

டோனியை அளவுக்கதிமாகப் பிடித்திருந்தாலும் அவர் மீதான விமர்சனங்களும் உண்டு. இருபதுக்கிருபது உலகக் கிண்ணத்தை மூத்த வீரர்கள் இன்றியே டோனி தலைமையிலான

(20 பக்கம் பார்க்க)



பேர் அறிஞன்

# வினாக்களில் தொங்கும் எமது கல்விப் போக்கு....



05

தலைவலி, பார்வைக்கோளாறு, ஞாபகமறதி, கழுத்து-முதுகு-தோள் மூட்டுவலி போன்றவற்றை இளவயதினரிடையேயும் சாதாரணமாகக் காணமுடிகிறதல்லவா? இந்த நிலையில் பிள்ளைகளைத் தொலைபேசிகளின் குறுகிய திரைக்குள் முழுக் கவனத்துடன் உட்புகுத்துவது ஆபத்தானதில்லையா? “பிள்ளைகள் சாதாரணமாக வீடுகளில் வலைத்தளங்களுள் உலவவில்லையா? படங்கள் பார்க்கவில்லையா?” என்கிற வாதத்தை முன்வைப்போரும் உள்ளனர் என்பதுதான் கவலைக்குரியது.

அவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் அவற்றுள் புகுவதை அவர்களது அறியாமையாகக் கருதி அவர்களைச் சரியான பாதையில் இட்டுச்செல்லவேண்டிய பொறுப்புடையவர்களே இன்று பிள்ளைகளை முழுமைமயாக அதற்குள் உட்படுத்த முற்படுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? பிள்ளைகள் தாமாகப் பார்வையிடும்போது தமது முழுக் கவனத்தையும் உட்செலுத்துவது குறைவானது.

கிரகித்தல் - உள்வாங்குதல் போன்ற விடயங்களில் கட்டாயமோ நெருக்கீடுகளோ இல்லை. மேலும் அவர்களது பார்வைத் தெரிவுகள் பெரும்பாலும் நெருக்கீடற்ற இலகுபட்டதான பார்வைப் புலங்களாகவே உள்ளன. அவற்றோடு தேர்வுமையப் பாடத்திட்டத்தை ஒப்பிடுவது அறியாமையின் உச்சமன்றி வேறில்லை.

பாடத்திட்டப்படியான தேர்வு கட்டாயமாக்கப்பட்ட நிலையில் ஆர்வமுள்ள பிள்ளைகள் தங்கள் புலன் முழுவதையும் அதற்குள் குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு நிர்ப்பந்தமாக இதனை ஏன் எடுத்துக்கொள்ளமுடியாது?

இருக்கின்ற கல்விப்போட்டி (பெறுபேறு - உயர்புள்ளி- பல்கலைக்கழக அனுமதி) நிலையில் உயர் பொருளாதாரமுள்ள பிள்ளைகளுக்கு வழங்கப்படப்போகிற முன்னுரிமையா? அன்றாட வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளையே முறையாகப் பெற்றுக்கொள்ள முடியாத குடும்பத்துப் பிள்ளைகள் என்ன செய்வார்கள்? கல்வி தமக்கு எட்ட முடியாதது எனும் விரக்தி மற்றும் மனச்சோர்வுக்கு உட்படலாம் என்பதையும் கவனத்தில் எடுத்தல் வேண்டும். இதற்கும் மறுத்தான் போடக் கூடிய உயர்சிந்தனையாளர் கூட்டம் “யாரிடம் இக்காலத்தில் நவீன தொலைபேசிகள் இல்லை? யாருக்கு அவற்றைக் கையாளத் தெரியாது?” என்று கூறிக்கொண்டிருக்கிறது.

ஒரு தொலைபேசி, நான்கு பிள்ளைகள், நாட்கூலியான தந்தை எனக் கொண்ட குடும்பமொன்றை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கான கல்விச் செயற்பாடு கொண் டிருக்கும் அழுத்தங்கள் நெருக்கீடுகள் கவனத்திற் கொள்ளப் படல் வேண்டும்.

இவ்வாறான தொலைபேசி வழிச் செயல் முறையானது ஆய்வு ரீதியான விவாத முறைக் கல்விக்கு மிகவும் பயனுடையது. ஆனால் எமது கல்விமுறையில்தான் இவையெதுவும் இல்லையே? பாட நூலை அப்படியே பாடத் திட்டப்படி வித்தைக்கு விலங்குகளைப் பயிற்றுவிப்பது போலவே தேர்வுக்குப் பயிற்றுவிப்பது தேர்வு முடிவுகள் வெளியாகிய பின்னர் அம்முடிவுகளை வைத்து வீழ்ச்சியடைந்து விட்டோம் என்று புலம்பி காரணம் கற்பிப்பது என்ற ஒழுங்கில் மாற்றமில்லாது தொலைபேசிக் கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் ஏன்? கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் மறைகாணி (சிசிடிவி) பொருத்துதல் செயற்றிட்டம். இவ்வாண்டில் தொலைபேசிச் செயற்றிட்டம் அவ்வளவுதான்.

> தம்மை கல்வியாளர், உளசெயற்பாட்டாளர், பொருளியலாளர், சமூக அக்கறையுடையோர், சிந்தனையாளர் என்றெல்லாம் அடையாளமிடுவோரும் சரி, உயர் கல்வி நிறுவனங்களும் சரி பேசிக்கழித்த பொழுதைப் பயனுடையதாக ஏதும் செய்திருக்கலாம். இதுவரை இல்லை. இனியாவது செய்வார்களா?


பெறுபேற்று வீழ்ச்சி என்பது தொடர்பில் தனியானதும் விரிவானதுமான நடைமுறைசார் ஆய்வுகள் அவசியம். ஆனால் நேரம் குறித்தொதுக்கிய சம்பிரதாயபூர்வமான உரையாடல்கள், பத்திரிகையறிக்கைகள், முகநூல் விளாசல்கள் - வியாக்கியானங்கள் போன்றன தவிர்ந்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளேதும் நடந்தனவா? நடக்கின்றனவா?

தம்மைக் கல்வியாளர், உளசெயற்பாட்டாளர், பொருளியலாளர், சமூக அக்கறையுடையோர், சிந்தனையாளர் என்றெல்லாம் அடையாளமிடுவோரும் சரி, உயர் கல்வி நிறுவனங்களும் சரி பேசிக் கழித்த பொழுதைப் பயனுடையதாக ஏதும் செய்திருக்கலாம். இதுவரை இல்லை. இனியாவது செய்வார்களா?

குறிப்பு: ஆக்கபூர்வமான பதில் பதிவுகளை எதிர்பார்க்கிறேன். மேலெழுப்பப்பட்ட வினாக்களுக்கான பதில்களாகவோ திருத்தங்களாகவோ ஐயங்களாகவோ அல்லது எதுவாகவோ அவை இருப்பது ஓர் ஆரோக்கியமான உரையாடலின் தொடக்கமாக அமையலாம் என எதிர்பார்க்கிறேள். முன்முடிவுகளை வைத்து உரையாடுவது உரையாடலின் செல்திசையில் தாக்கம் செலத்துமென்பதை கவனத்தில் கொள்வது பயனுடையதாயிருக்கும்.

## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்




4

அடுத்து வர வேண்டிய என் யாது?

# பாசாங்கு செய்யும் குழந்தைகளே பற்பசை என்பது உணவல்ல!

“பல்லுத் தீட்டுறபோது பொடியன் பற்பொடியத் தின்னுறானடி...!” திரவியமக்கா சொல்லி நிற்க, ‘அப்படியா சங்கதி! ஆளுக்கு நல்ல அடிபோடு. பற்பொடியத் தின்டால் காமாளை வைக்குமடி” பரபரப்புடன் பதிலிறுத்தாள் பக்கத்துவீட்டு மனோகரம்.

இது அந்தக் காலம்.

பற்பொடியால் பல் துலக்கிய காலம் இப்போது மலையேறிவிட்டது.

பற்பொடி என்றால் என்னவென்றே தெரியாத தலைமுறை தற்காலத்தினது. அதற்கேற்றாற்போல் வகை வகையான பற்பசைகளும் வந்து குவிந்துவிட்டன. வர்ணங்கள், வாசனைகள், சுவைகள், சேர்மானங்கள், ஆயுர்வேதம், அதைவிஞ்சிய மருத்துவம் எனப் பற்பசைகளின் வளர்ச்சி அளப்பரியது. இப்படி வடிவங்களிலும் வாசனைகளிலும் மாற்றமடைந்து கடைகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன பற்பசைகள். பற்பொடி இல்லாமல்போய் பற்பசைகள் வந்துவிட்டாலும் பல்துலக்கும்போது அதை உண்கின்ற குழந்தை வர்க்கம் அதிலிருந்து மீளவில்லை. அந்தக் காலத்தில் பற்பொடியை உண்டதுபோல தற்போதெல்லாம் பற்பசையைச் சுவைக்கின்றனர் குழந்தைகள். ஆனால், அது தவிர்க்கப்பட வேண்டும்.

பற்பசையை உண்பதை உடனடியாக நிறுத்த வேண்டும். காரணம் அதனால் பல்வேறு பிரச்சினை



கள் எழுகின்றன. குழந்தைகள் பெரியவர்களாகும்போது ‘டென்டல் ப்ளுரோசிஸ்’ என்னும் பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது என்று அது தொடர்புடைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. குழந்தைப் பருவத்தின் முதல் எட்டு ஆண்டுகளில், அதிகரித்த புளோரைட் பாவனை காரணமாகப் பற்கள் பாதிக்கப்படும் நிலையே இது. குழந்தைப் பருவத்தில், பற்கள் உருவாகும் நிலையில், அதிகரித்த புளோரைட் பயன்பாடு, டென்டல் ப்ளுரோசிஸ் அல்லது பற்களில் கோடுகள் உண்டாவது அல்லது பற்களில் திட்டுக்கள் தோன்றுவது போன்றவற்றிற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. பல்துலக்குவதற்குப் பட்டாணிக் கடலையின் அளவுக்குப் பற்பசை யைப் பயன்படுத்த வேண்டும் என்று நிபுணர்கள் பரிந்துரைத்தாலும், 3-6 வயதுக் குழந்தைகள் பெரும்பாலும் பற்தூரிகை முழுவதுமாக அல்லது பற்தூரிகையின் பாதியளவுக்குப் பற்பசையை எடுத்து அதில் அதிகளவை உண்டுவிட்டுப் பல் துலக்குவது போல பாசாங்கு செய்கின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

3 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஒரு அரிசி மணி அளவிற்குப் பற்பசையைப் பயன்படுத்துவது போதுமானது என்றும், 3-6 வயது வரை உள்ள குழந்தைகள் ஒரு பட்டாணிக் கடலை அளவுக்குப் பயன்படுத்துவது போதுமானது என்றும் கூறுகின்றனர். அத்தோடு குழந்தைகளுக்காகப் பிரத்தியோகமாகத் தயாரிக்கப்படும் பற்பசைகளில் சுவை அதிகம் இருப்பதாலும் குழந்தைகள் தங்கள் விருப்பம் போல் அதைப் பயன்படுத்துகின்றனர் என்றும் கூறும் ஆராய்ச்சியாளர்கள் பற்பசை என்பது ஒரு உணவு அல்ல, அதன் பயன்பாட்டைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை என்றும் கூறுகின்றனர்.

## வாழை இலை மணத்துடன் முடக்கத்தான் இலை இட்லி!


மழை காலங்களில் பரவலாக முளைத்து நிற்கின்ற சிறு தாவரங்களில் ஒன்று முடக்கத்தான். முடக்கத்தான் மூலிகைகளில் சிறந்த ஒரு கீரை வகை என்கின்றனர் சித்த மருத்துவத் தரப்பினர். என்புகள் பொருந்தியுள்ள இடங்களில் (மூட்டுகளில்) ஏற்படுகின்ற நோவுகள் மற்றும் தசைப் பிடிப்புகளுக்குச் சிறந்த நிவாரணமளிக்கின்றது என்று முடக்கத்தான் கீரை குறித்துப் பரவலாகக் கூறப்படுகிறது. சாதுவான கசப்புச் சுவையைத் தருகின்ற முடக்கத்தானை அதற்குரிய வகையில் சமைத்துண்ணும்போது அதிலிருக்கின்ற பயன்களை உள்வாங்கிக் கொள்ள முடியும். முடக் கத்தான் கீரையைத் தோசையுடன், இட்லியுடன், கஞ்சியுடன் எனப் பலவாறாக உணவுகளுடன் சேர்த்து உண்கிறார்கள். இந்த வகையில் முடக்கத்தானை இட்லியுடன் சேர்த்துச் சமைப்பது பற்றி இதில் பார்ப்போம். வாழை இலையில் வைத்து அதை அவித்தெடுத்து ருசித்தும் பார்ப்போம்.

### தேவையான பொருள்கள்

இட்லிக்குரிய அரிசி - 3 கப், முழு உளுந்து - அரைக் கப், வெந்தயம் - ஒரு கைப்பிடியளவு, கைப்பிடியளவு முடக்கத்தான் கீரை, நல்லெண்ணெய், உப்பு என்பன தேவையான அளவு. அத்தோடு வாழை இலையும்.

### எப்படிச் செய்வது?

அரிசி, உளுந்து, வெந்தயம் மூன்றையும் தனித்தனியே ஆறு மணி நேரம் தண்ணீரில் ஊற வையுங்கள். ஊறியதும் முதலில் வெந்தயத்தை நன்றாக அரைத்தெடுத்துக் கொள்ளுங்கள். பிறகு முறையே முடக்கத்தான் கீரை, உளுந்து, அரிசி ஆகியவற்றைச் சேர்த்து அரைத்துக்கொள்ளுங்கள். அரைக் கப்பட்ட இந்தக் கலவையுடன் உப்புச் சேர்த்துக் கரைத்து வைத்து ஆறு மணி நேரம் மூடி வையுங்கள். ஆறு மணி நேரத்தில் கலவை பொங்கி இருக்கும். இப்போது, இட்லித் தட்டில் வாழை இலையை வைத்து, சிறிது நல்லெண்ணெய் தடவிக் கலவையை இட்லிபோல ஊற்றி மூடி ஆவியில் வேக விடுங்கள். வெந்ததும் இறக்கிக் கொள்ளுங்கள். வாழை இலை யின் வாசனையுடன் சுடச் சுடச் சுவை யான, சத்தான முடக்கத் தான் வாழை இலை இட்லி தயார்.







| Sizes (in Inches) | M | L | XL |
| --- | --- | --- | --- |
| Chest | 20 | 21 | 22 |
| Height | 27 | 28 | 29 |

https://www.facebook.com/UniqueteesSriLanka

Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)

விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)


## முதல் மழை!

அந்த குளக்கரைக்கு
வரும் ஆக்காட்டிக் குருவியிடம்
நான் நிறையப் பேசி இருக்கிறேன்

இருளில் விழுந்த தனிமை பற்றி
தூக்கமிழந்த நள்ளிரவுகள் பற்றி
என் பிறப்பின் ஆருடம் பற்றி

எனது ஒவ்வொரு கேள்விக்கும்
அது ஆனந்தமாய்ப் பதில் சொல்லும்

எனது கமராவில் அதன் தனிமையை
படம்பிடித்திருக்கின்றேன்
அதன் தனிமை அவ்வளவு அழகாய் இருக்கும்

அதன் வானம்
அதன் குளம்
அதன் திசை
அதன் பறத்தல்
எல்லாவற்றையும் அதன் குரல்களினால்
எனக்காய் கேட்கவேண்டும் போல் இருக்கும்

மனிதருக்கு எதிரான உன்
குணத்தினை
இந்த வழிப்போக்கனுக்காக
மாற்றிக்கொண்டாய்

மழைவரும் வானத்தில் இருந்து
ஆக்காட்டிக் குருவியின் கத்தலில்
சிறுவயதில் பயந்து அம்மாவிடம் போய்
ஒளிந்திருக்கிறேன்

இன்று அதன் குரல்கள்
என் குரலாக இருக்க ஆசைகொள்கிறேன்
மழையின் வருகைமுன்
வானத்தின் நிஷப்தபொழுதில்
ஆக்காட்டி'யே உன் குரல்
பூமியை நனைக்கும் முதல் மழை



நேதா, நெடுந்தீவு.

## தன்னிகரில்லா...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அணி வென்ற காரணத்தி னால் தொடக்கத்தில் இருந்தே இளைய தலைமுறை வீரர்களுக்கு முன்னு ரிமை கொடுத்து அணியைக் கட்டி யெழுப்ப அவர் அதிகம் விரும்பி னார். அதனால் சில மூத்த வீரர்கள் விடயத்தில் அவர் நடந்து கொண்ட முறை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. குறிப்பாக லக்ஸ்மன், ஷேவாக் போன்ற வீரர்களின் ஓய்வு விடயம். அதுவும் டோனி இந்திய ரசிகர்களாலேயே வெறுக்கப்படக் காரணமாகவும் அமைந்தது.

அது மாத்திரமல்லாமல் டோனி பெரும்பாலும் ஆடும் 11 பேரில் மாற் றத்தை விரும்புபவர் அல்லர். வெற்றி பெறும் பொழுது அதனை ஏற்றுக் கொண்டாலும் தொடர்ச்சியாக தோல்வி அடையும் சந்தர்ப்பத்திலும் அதில் மாற்றத்தை ஏற்படுத்தாது களமிறங் கும் பொழுது வினைப்பட்ட சந்தர்ப்பங் களும் உண்டு. 2019 ஐ.பி.எல். போட்டி களில் நடுவரின் நோபோல் தீர்ப்பை எதிர்த்து மைதானத்திற்குள் டோனி களமிறங்கியமை அவரது கிரிக் கெட் வாழ்வில் ஒரு களங்கமாகவே கருதப்படுகின்றது.


கிரிக்கெட் வாசனை அதிகம் இல் லாத இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநில ஒரு மத்தியதரக் குடும்பத்தில் இருந்து முதல் வீரராக இந்திய அணிக் குத் தெரிவாகி இன்று உலகமே திரும் பிப் பார்க்கும் சாதனை வீரராக டோனி விளங்குவதோடு ஏனையவர்களுக் கும் ஆதர்சமாக விளங்குவது உண்மை யில் ஆச்சரியமானதே. சர்வதேச போட்டிகளில் இருந்து டோனி ஓய்வு பெற்றாலும் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஐ.பி.எல். போட்டி களில் அவர் விளையாடுவார் என சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர் வாகம் அறிவித்திருப்பது ஒன்றே தற்போது டோனி ரசிகர்களுக்கு உள்ள ஒரே ஆறுதல் எனலாம்.


டிராவிட் ஒரு முறை “போட்டியில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் வந் தாலே உடனடியாக அதனை அறி வித்து விடவேண்டும். போட்டியில் விளையாடுவதற்கான தகைமை இல் லாதபொழுதே அத்தகைய எண் ணம் தோன்றுவதனால் பிரியா விடைப் போட்டி நடத்தி மோசமான திறனுடன் விளையாடுவதைக் காட்டி லும் இன்னொரு வீரருக்கு அந்த வாய்ப்பை வழங்குவது எவ்வளவோ மேல்” - என்ற சாரப்படக் கூறிய வகையில் டோனியின் ஓய்வு வர வேற்கத்தக்கதே.

# கலக்குகிறது ஹரிபோட்டர்!

கொரோனா முடக்கத்துக்கு நடுவில் சினிமாத்துறை முடங்கிக் கிடப்பதால் புதிய வெளியீடுகள் இல்லாது போய்விட்டன. இதனால், பழைய படங்களையே மீள் பார்வைக்கு உட்படுத்துகின்ற பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மீள் பார்வையில், அதிக வரவேற்புப் பெற்ற படங்கள் வரிசைப்படுத்தப்பட்டுத் திரையிடப்படுகின்றன. அவ்வாறு திரும்பத் திரையிடப்பட்ட திரைப்படங்களில் ஒன்று மறு திரையிடலில் சாதனை படைத்துள்ளது. அதுவும் கொரோனாவின் பிறப்பிடம் என்று கருதப்படுகின்ற சீனாவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. ஹரிபாட்டர் திரை வரிசையின் முதல் பாகமான 'ஹாரிபாட்டர் அண்ட் தி ஸார்ஸரர்ஸ் ஸ்டோன்'' அங்கு அதிக வசூலைப் பெற்று வருகிறது. 2001ஆம் ஆண்டு வெளியான இந்தப்படம் முப்பரி மாணம் மற்றும் ஐமேக்ஸ் பதிப்புகளாகக் கிட்டத் தட்ட 16 ஆயிரம் திரைகளில் சீனாவில் மீண்டும் வெளியானது.


வெளியான முதல் வார இறுதியிலேயே 13.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை அது வசூலித்துக் கலக்கியது. இதன் மூலம் அந்தத் திரைப்படத்தின் மொத்த வசூலும் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியது. ஹாரிபாட்டர் திரை வரிசையில் இதற்கு முன், கடைசியாக வெளியான 'ஹாரிபாட்டர் அண்ட் தி டெத்லி ஹாலோஸ் - பாகம் 2' மட்டுமே ஒரு பில்லியன் டொலர் வசூலைக் கடந்திருந்தது. தற்போது முதல் பாகமும் 1 பில்லியன் டொலர் வசூல் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. ஆகமொத்தம் கொரானாவுக்குள் கலக்குகிறது ஹரிபோட்டர்.





## மூளைக்கு வேலை விடைகள்

1)





2) C

3)



4) 418

5)



## கார்ட்டூன்




## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | | | 7 | 4 | | | |
| | 1 | | | | | 4 | | |
| 6 | 7 | | 9 | | 5 | | | |
| | 8 | | 2 | | 6 | | | |
| | 6 | | 8 | 4 | 7 | | 2 | |
| | | | 5 | | 1 | | 8 | |
| | | | 7 | | 8 | | 9 | 2 |
| | | 6 | | | | | 1 | |
| | | | 4 | 1 | | | 5 | 8 |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 7 | 4 | 9 | 2 | 3 | 6 |
| 7 | 9 | 4 | 2 | 6 | 3 | 8 | 5 | 1 |
| 3 | 6 | 2 | 8 | 1 | 5 | 7 | 4 | 9 |
| 9 | 4 | 7 | 1 | 3 | 8 | 5 | 6 | 2 |
| 5 | 2 | 1 | 9 | 7 | 6 | 3 | 8 | 4 |
| 8 | 3 | 6 | 5 | 2 | 4 | 1 | 9 | 7 |
| 6 | 1 | 3 | 4 | 5 | 2 | 9 | 7 | 8 |
| 2 | 5 | 8 | 6 | 9 | 7 | 4 | 1 | 3 |
| 4 | 7 | 9 | 3 | 8 | 1 | 6 | 2 | 5 |

## செம்மண்

### வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!


**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.



# ஒன்றிணையட்டும் தமிழ் - முஸ்லிம் தலைமைகள்...!



- அகீல் -

> இந்த வேளையில் வடக்குக் கிழக்கில் குறிப்பாகக் கிழக்கில் பேசித் தீர்க்கத்தக்க சில சிறு பிரச்சினைகள் தமிழ் – முஸ்லிம் அரசியல் தலைமைகளின் அசமந்தத்தால் பூதாகரமாக மாறி மாற்றானின் கைக்கு மாறி விடும் நிலையிலுள்ளன, மிகப் பழமை வாய்ந்த கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலகத் தரமுயர்த்தல் விவகாரத்தை இந்தத் தலைமைகள் இன்னும் நீடிக்க விடக்கூடாது,

புதிய அரசின் எதிர்காலப் பயணம் எவ்வாறு அமையப் போகின்றது எனும் கேள்வி பல தரப்புகளிலும் அலசப்படுகின்றது. குறிப்பாகத் தமிழ் - முஸ்லிம் மக்களும், அவற்றின் அரசியல் தலைவர்களும் இது விடயத்தில் அச்ச உணர்வு மேலிட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இனி என்னதான் நடக்குமோ என்ற அங்கலாய்ப்பில் அவர்கள் உள்ளனர்.


நடந்து முடிந்த பொதுத் தேர்தல் காலத்தில் கோத்தபாய ராஜபக்ச அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கக்கூடாது என்பதில் பலரும் கரிசனை கொண்டனர். மூத்த ராஜதந்திரியான தயான் ஜயதிலக போன்ற பௌத்த புத்திஜீவிகள், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள், அரசியல் ஆர்வலர்கள் எனப் பலர் இது தொடர்பான எச்சரிக்கைச் சமிக்ஞைகளை விடுத்திருந்தனர்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை புதிய அரசுக்குக் கிடைக்குமாயின், தங்குதடையின்றி எதேச்சதிகாரம் நோக்கியே அந்த அரசு பயணிக்கும் எனவும் அவர்கள் எச்சரித்திருந்தனர்.

அவர்கள் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது போல் சிங்கள மக்கள் அள்ளி வழங்கிய வாக்குகளால், மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்ட அரசே நம்மை ஆளப்போகின்ற நிலை உருவாகிவிட்டது.

**தேர்தல் முடிந்த கையோடு வந்த சமிக்ஞை**

பொதுத் தேர்தல் முடிந்த கையோடு கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, பௌத்த - சிங்களக் கொள்கை



நோக்கியே புதிய அரசு பயணிக்கும் என்று ஆணித்தரமாகக் கூறினார். அவர் இவ்வாறு கூறியதன் உள்நோக்கத்தைப் பார்த்தால், பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கச் செயற்பாடுகள் இந்த ஆட்சியில் இன்னும் தீவிரமடையலாம் என்பது வெளிப்படையாகின்றது. கண்டியில் நடைபெற்ற புதிய அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வின்போது, கண்டிப் பகுதிச் சிறுபான்மையின மக்களைச் சுட்டுகின்ற நிறங்கள் அகற்றப்பட்ட கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்த சம்பவம் இதற்குக் கட்டியம் கூறுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

அத்தோடு ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதாக அமைந்த அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முற்றாக ஒழிப்பதற்கு அரசு வரிந்து கட்டி நிற்கிறது. எதிர்காலத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதிரான பல சட்டமூலங்கள் கொண்டு வரப்படலாமென்ற அச்சமும் இன்று மேலோங்கி நிற்கிறது. முஸ்லிம் சமய விவகார ஆன்மீக விழுமியங்களுக்குத் தடை போடக் கூடிய சட்டங்கள் வரலாம், பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க செயற்பாடுகள் தீவிரமடையலாம் என்ற எதிர்வு கூறல்களும் உள்ளன.

**தொல்லியல் பாதுகாப்பு எனும் போர்வை**

வடக்குக் கிழக்கில் தொல்லியல் மரபுரிமைப் பாதுகாப்பு எனும் போர்வையில் பெரும்பான்மையினரது பௌத்த மேலாதிக்கவாதத்தை நடைமுறைப்படுத்த விரைவான நடவடிக்கைகள் அரசு அமைவதற்கு முன்னரே முடுக்கி விடப்பட்டன.

கிழக்கில் மட்டும் 250க்கு மேற்பட்ட தொல்லியல் மரபுரிமை எச்சங்கள் இருக்கின்றன என்கிறார் எல்லாவெல தேரர். அவரது கூற்றின் மூலம் சிறுபான்மை மக்கள் தமது பாரம்பரிய இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்படலாமென்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கும் ஏன் நல்லூர் கந்தசுவாமிக் கோவிலுக்கும் கூடப் பௌத்த பேரினவாதம் உரிமைகோரும் நிலைமையும் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மீது அம்புகளாகப் பாயத் தொடங்கியுள்ளன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற வரையறைக்குள்ளிருந்து சிந்திக்க வேண்டிய நிலைக்கும், மாற்று வியூகங்களை வகுத்துச் செயற்பட வேண்டிய அவசிய அவசர நிலைக்கும் வந்துள்ளனர்.

**ஒன்றிணைந்து செயற்படவேண்டிய கட்டாயம்**

இன்றைய தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைமைகள் மற்றும் புத்திஜீவிகள் ஒன்றிணைய வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைமைகள் இனியும் காலத்தைக் கடத்திச் செல்லாது அரசியலில் கைகோர்த்துப் பயணிப்பதற்கு உடன் முன்வரவேண்டும். பேச்சளவில் ஒற்றுமையை வலியுறுத்திக் கொண்டு கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத் தரமுயர்த்தல் விவகாரத்தை இழுத்தடித்துக் கொண்டு போவதுபோலவோ, கொரோனா காலத்தில் மகிந்த ராஜபக்ச நடத்திய கூட்டத்துக்கு ஓடோடிச் சென்று நல்ல பிள்ளைகளான சம்பவம்போலவோ இல்லாது திடமான ஒற்றுமை உணர்வை, செயற்பாட்டை வெளிப்படுத்தத் தமிழ் - முஸ்லிம் சமூகங்களது அரசியல் தலைமைகள் முன்வரவேண்டும்.

**அபாயச் சங்கொலி அது...**

தெற்கிலிருந்து அபாயச் சங்கொலி கேட்கத் தொடங்கியிருக்கிறது. இந்தச் சூழலில் சிறுபான்மைச் சமூகங்கள் இரண்டும் தமது இருப்பைப் பாதுகாக்கவும், எல்லைப் புற நிலங்களைப் பாதுகாக்கவும் தமது கோரிக்கைகள் - ஆட்சேபனைகள் கனதியானவையாக ஆளும் தரப்பினரால் பார்க்கப்படவும் அவர்களின் ஒற்றுமையும் ஒன்றிணைந்த அரசியல் செயற்பாடுகளும் கட்டாயமானவை.

அதேபோல் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் இறைமை இருப்பது போல் முஸ்லிம் மக்களுக்கும் ஓர் இறைமை இருப்பதை ஏற்று இரு சமூகங்களும் கைகோர்த்துப் பயணிப்பதன் மூலம் நம் அரசியல் அபிலாசைகளை அடையமுடியும் எனவும் திடம் கொள்ள வேண்டும்.

**சிறு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்**

இந்த வேளையில் வடக்குக் கிழக்கில் குறிப்பாகக் கிழக்கில் பேசித் தீர்க்கத்தக்க சில சிறு பிரச்சினைகள் தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைமைகளின் அசமந்தத்தால் பூதாகரமாக மாறி மாற்றானின் கைக்கு மாறி விடும் நிலையிலுள்ளன. மிகப்பழமைவாய்ந்த கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலகத் தரமுயர்த்தல் விவகாரத்தை இந்தத் தலைமைகள் இன்னும் நீடிக்க விடக்கூடாது.

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் முஸ்லிம் ம்க்களுடனும் பேசி இந்தப் பிரதேச செயலகத் தரமுயர்த்தல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று கூறியுள்ளார். இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். காவி உடை தரித்தவர்களின் படையெடுப்புக்கு இடமளிக்காது பேசுவோம். பேசுவோம். விட்டுக் கொடுப்புகளுடன் பேசுவோம்.

## பிக் பாஸிக்குள் நீயா நானா...?

தொடர் நாடகங்களுக்கு அடுத்ததாகத் தனக்கென்ற பார்வையாளர்கள் பட்டாளத்தை உருவாக்கியிருப்பது பிக் பாஸ். நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்குவதாகத் தமிழில் அறிமுகமான அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சி அதற்குக் கிடைத்த பெருவரவேற்புக் காரணமாக இன்று பல பாகங்களாகத் தொடர்ந்த வண்ணமிருக்கிறது. 1, 2, 3 எனத் தொடர்ந்த அது கொரோனா இடரால் சற்றுத் தாமதத்தை எதிர் கொண்டுள்ளதும் உண்மை. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற புதிய முகங்கள் தமக்குரிய திரைத்துறை வாய்ப்புகளைப் பெறும் வசதியைத் தேடிக் கொள்கின்றன. ஏலவே திரைத் துறையிலுள்ளவர்கள் சம்பாதித்துக் கொள்கிறார்கள் என்பது பொதுவான கருத்து. ஜூலி, ஹரிஸ் கல்யான், றைசா எனப் பலர் திரைத் துறையில் தொடர, ஓவியா, வனிதா எனச் சிலர் விமர்சனங்களை அதிகம் சம்பாதித்துப் பேசப்படவும் வைத்தனர். இவ்வாறிருக்க, விரைவில் தொடங்க இருக்கின்ற பிக்ப ஜுஸ் சீசன் 4இல் நீயா நானா புகழ் கோபிநாத்தைப் போட்டியாளராக களமிறக்குவதற்குப் பேச்சுகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அவரைச் சம்மதிக்க வைக்க வேண்டும் எனப் பலர் முயன்று வருவதாகவும் இடைத் தகவல்கள்.



- செ.தர்மராஜா -

# சத்தியப் பிரமாணங்கள் எதுவரை...

2020ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ் அரசியல்வாதிகளில் மூவர் தாம் இந்த இடத்தில்தான் சத்தியப் பிரமாணம் செய்வோம் என அடம்பிடித்து முள்ளிவாய்க்காலில் இறந்த மக்கள் மீது ஆணை எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அங்கு சத்தியப் பிரமாணம் செய்த செய்திகள் ஊடகங்கள் மூலம் வெளியாகின. ஆனால் அவர்களில் இருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் பதவியேற்ற பின்னர் சபாநாயகரை வாழ்த்தி ஆற்றிய உரைகளில் ஒருவர் ஆங்கிலத்தில் மட்டுமே உரையாற்றினார், மற்றவர் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளிலும் உரையாற்றினார். முள்ளிவாய்க்காலில் இறந்த மக்களுக்கு இந்த இரு மொழிகளும் நன்கு பரிச்சயமாகியிருக்கும் என்று நாமும் எண்ணிக்கொள்வோம்.



**சத்தியப் பிரமாண வழக்காறு**

இலங்கையின் சத்தியப் பிரமாணம் ஆனது இனம், மதம், மொழி கடந்த சமரசம் நிலவுவதை உறுதிசெய்வது. இதில் எந்தக் கடும் போக்காளரும், துவேசிகளும், நல்லவர்களும்கூடத் தமக்கு விருப்பமான வகையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள முடியாது. அது ஒரு சட்டம். வழக்காறுகளுக்கு உட்பட்டது. இலங்கையின் சத்தியப் பிரமான வாசகத்தை நோக்கினால்...

(157 அ (7) உறுப்புரையும் 161 (ஈ xiii)ஆம் உறுப்புரையும்)

"...ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் பேணிக் காப்பேன் என்றும் இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவளிக்கவோ ஆக்கமளிக்கவோ ஊக்குவிப்பு அளிக்கவோ நிதி உதவவோ ஊக்குவிக்கவோ பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பய பக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன் -சத்தியம் செய்கிறேன்"

இத்தகைய ஓர் ஒப்புதல் வாக்கு மூலத்தை இலங்கை அரசுக்கு எழுத்து மூலம் உறுதிப்படுத்திய பின்னரே நமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியை உறுதி செய்ய முடியும். மேற்கூறப்பட்ட வாசகங்கள் அடங்கிய உறுதிமொழியை முள்ளிவாய்க்காலில் செய்தாலென்ன, நாடாளுமன்றத்தில் செய்தாலென்ன...? விடயம் சிங்கள ஆட்சியாளருக்குச் சாதகமானதே தவிர தமிழ் மக்களுக்கு அல்ல.

**"நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் பேணிக்காப்பேன் என்றும் இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவளிக்கவோ ஆக்கமளிக்கவோ ஊக்குவிப்பு அளிக்கவோ நிதி உதவவோ ஊக்குவிக்கவோ பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பய பக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன் - சத்தியம் செய்கிறேன்"**

இதில் இன்னும் விசித்திரம் என்னவென்றால் இந்த அரசியல்வாதிகள் மூவரும் முள்ளிவாய்க்காலில் ஆணையேற்றார்கள் என்று ஊடகங்களில் செய்திகள் பரப்பப்பட்டபோதும் அவர்கள் ஏற்றுக்கொண்ட உறுதியுரை வாசகங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

**எங்கு நின்று செய்தாலும் நோக்கம் ஒன்றே**

அதிகம் ஒவ்வாமையையும் முரண்பாடுகளையும் கொண்ட நாடாளுமன்றம் சென்றுள்ள தமிழ் உறுப்பினர்கள் எதிர்வரும் காலத்தில் ஒருமித்துச் செயற்படக்கூடிய நிலை இல்லாதிருக்கும்போது இலங்கை அரசுக்கு விசுவாசமாகச் செயற்படுவோம் என்ற சாராம்சம் கொண்ட சத்தியப் பிரமாணத்தை எங்கு நின்று செய்தாலும் அது ஒரே நோக்கம் கொண்டதே. இது விடயத்தில் தமிழ் மக்கள் மேலும் தெளிவு பெற வேண்டும் என்பதையே முள்ளிவாய்க்கால் சத்தியப் பிரமாணங்கள் காட்டி நிற்கின்றன.

இந்த சத்தியப் பிரமாணத்தின் தன்மையை விளங்கிக் கொள்வதால்தான் சம்பந்தர் "ஒருமித்த நாட்டுக்குள் பிளவுபடாத, பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வைக் காண்போம்" என்றார். டக்ளஸ் "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்றார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் "ஒரு நாடு இரு தேசங்கள் என்றார்" ஆனால், தேர்தலின் பின் ஒற்றையாட்சியை ஏற்றுத்தான் நாடாளுமன்றம் செல்கிறார்கள். அதுதான் யதார்த்தமும்கூட. அவர்கள் சொல்ல விரும்புபவற்றைச் சொல்வதற்குக்கூட அவர்கள் விரும்பாத வழியின் ஊடாகத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த யதார்த்தத்திற்கு மத்தியில் மக்களை மட்டும் உணர்ச்சிவசப்படுத்த இவர்கள் ஏன் முயற்சிக்கிறார்கள் என்பது புரியாத புதிரல்ல. வாக்கு அரசியல் மட்டுமே அதற்குக் காரணம்.

# தவறாக நடந்து கொண்டார் பிரியங்கா

## ரியா பரபரப்பு குற்றச்சாட்டு

பொலிவூட் நடிகர் சுஷாந் சிங்கின் இறப்புக்குப் பின்னர் அதையொட்டிய விடயங்கள் திரையுலகில் சூடுபிடித்துள்ளன. சுஷாந்த் சிங்கின் இறப்பில் அவரது தோழி ரியா சக்ரபோர்தி மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் குவிந்துள்ளன. இந்த நிலையில் சுஷாந்தின் தங்கை தன்னிடம் தவறாக நடக்க முயன்றார் என்று ரியா சக்ரபோர்தி தெரிவித்துள்ளார். இது குறித்து ரியாவின் வழக்கறிஞர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ரியாவும் சுஷாந்தும் பழக ஆரம்பித்த சில நாள்களில் அவ்வப்போது ஒருவர் வீட்டுக்கு இன்னொருவர் சென்று தங்குவதை வழக்கமாக வைத்திருந்தனர். அந்த சமயத்தில் சுஷாந்தின் தங்கை பிரியங்கா சிங்கும் அவரது கணவரும் சுஷாந்த் வீட்டில் இருந்துள்ளனர். ஒருமுறை சுஷாந்தின் தங்கை அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு போதையில் ஆண், பெண் என வித்தியாசமின்றி வரம்பு மீறி நடந்துகொள்ள ஆரம்பித்தாராம். பின்னர் அவரை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்ததும், சுஷாந்தும் அவரது தங்கையும் மீண்டும் மது அருந்த ஆரம்பிக்க, ரியாவோ சுஷாந்தின் அறைக்கு சென்று தூங்கிவிட்டாராம். திடீரென நள்ளிரவில் விழிப்பு வந்து எழுந்து பார்த்தபோது சுஷாந்தின் தங்கை பிரியங்கா தன்னை கட்டிப்பிடித்தபடி தன்னருகில் படுத்திருந்ததையும், தன்னிடம் அத்துமீறி நடந்ததையும் கண்டு அதிர்ச்சி அடைந்த ரியா, மறுநாள் சுஷாந்திடம் இதுபற்றி கூறிவிட்டு கோபத்துடன் தனது வீட்டுக்கு சென்றாராம். இதுகுறித்து சுஷாந்த் தனது தங்கையை திட்டியதாகவும், பின்னர் வந்த நாள்களில் சுஷாந்தின் குடும்பத்தினர் ரியாவிடம் பேசுவதை தவிர்த்தார்களாம். அதனால் தான் சுஷாந்தின் இறுதிச்சடங்கில் பங்கேற்றவர்கள் பட்டியலில் ரியாவின் பெயரை வேண்டுமென்றே சேர்க்கவில்லை' என்றுள்ளது.



# அருகிப்போகும் யாழின் பொக்கிசம் குருவிக்காடு..!!



குமரன்

கோளவடிவான பூமியில் வடக்கு அரைக்கோளத்தில் நிலவும் குளிர் காலநிலை காரணமாக அங்கு வாழும் பறவையினங்கள் பல. உலகின் தென் பகுதியான இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு வருகின்றன. அந்த வகையில் இலங்கையின் வடக்கிற்கு வருகின்ற பறவைகள் பலவும் வாழும் இடம்தான் சரசாலை குருவிக்காடு.

இவ்வாறு வருகைதரும் வெளிநாட்டுப் பறவைகள் இங்கு வந்து இளைப்பாறித்தான் இலங்கையின் ஏனைய பகுதிகளிற்கும், தெற்கிற்கும் இடம்பெயர்கின்றன. பெரும்பாலும் மாசி மாதம் தொடக்கம் சித்திரை வரையான காலப்பகுதி, ஆடி முதல் புரட்டாதி வரையான காலம் போன்றவற்றில்தான் அதிகமான வெளிநாட்டுப் பறவைகளைக் காண முடியும்..

பொதுவாக தொலைக்காட்சி, கணினி, தொலைபேசி போன்றவற்றில் நாம் பறவைகள் பற்றிய ஒளிப் படங்களையும், அவற்றின் அசைவுகள் நகர்வுகள் என்பவற்றையும் காணுகின்றோம், ஆனால் நேரில் சென்று எம் கண்களால் பார்கின்ற போது கிடைக்கின்ற அனுபவம் மெய்சிலிர்க்க வைக்கும். பறவைகள் வெளியிடும் ஒலிகளும், அவற்றின் அசைவும், தங்களுக்கிடையே அவை நடாத்துகின்ற சம்பாசனைகளும் ஏன் நாங்கள் அவைகளாக மாறிவிடக்கூடாது, என்று ஒரு கணம் எண்ண வைத்துவிடுகின்றது.

விடுமுறை நாள்களை கடற்கரைகளுக்கும், பெரிய பெரிய உணவு விடுதிகளுக்கும் எனச் சென்று பொழுதினைப் போக்கும் எமக்கு வருடத்தில் குறிப்பிட்ட சில மாதங்களுக்கு மட்டுமே இயற்கையோடு ஒன்றிணைந்து இயற்கையை ரசிக்க கடவுளாய் தந்த வரம் தான் இந்த சரசாலை குருவிக்காடு.

பாடசாலைகள், கல்விக்கூடங்கள் ஊடாக கல்விச்சுற்றுலா என்று சிறுவர்களையும், மாணவர்களையும் விலங்குகளும், பறவைகளும் கூண்டினுள் அடைக்கப்பட்டு நன்கு பயிற்றுவிக்கப்பட்டு அடைக்கப்பட்டிருக்கும் மிருகக்காட்சிச் சாலைகளுக்கு அழைத்துச் செல்லக்கூடாது. மிருகங்களையும் பறவைகளையும் வெறும் காட்சிப்பொருளாக மட்டுமே அங்கு காணலாம், மாறாக இயற்கைச் சூழலுடன் பொருந்திய சரசாலை குருவிக்காடு போன்ற இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லவேண்டும். அடைத்து வைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டவற்றை பார்ப்பதிலும் பார்க்க இயற்கையோடு இணைந்த குருவிக்காடு போன்ற இடங்களில் உள்ள பறவை களைக் காணும்போதும் அவர்களுக்குமே மனதில் ஓர் சொல்லமுடியாத சந்தோசம் நிச்சயம் உருவாகும்.

தமிழர் பண்பாடு வந்தாரை வாழ வைத்தல் என்பதனை மறந்து வந்தாரை சாகடித்தல் என்பதாகத்தான் இனிக் கூறவேண்டும் போலும், ஏனென்றால் சரசாலை குருவிக்காட்டை நம்பி தமது பருவகாலத்தினை களிக்க வரும் வெளிநாட்டுப்பறவைகளை சில விசமிகள் வேட்டையாடுகின்றார்கள். குறித்த பகுதிகளுக்கு காலை மற்றும் மாலை வேளைகளில் பெருமளவான பறவைகள் வருகைதருகின்றன. அவ்வாறு வரும் பறவைகளை சில விசமிகள் வேட்டையாடி வருகின்றனர். வலைகளை பறவைகள் மீது வீசுவதும், கெட்ரப்போல் போன்றவற்றினை பயன்படுத்தியும் அவர்கள் இந்த வேட்டையை நிகழ்த்துகிறார்கள். இதனால் தற்போது அப்பகுதிக்கு பறவைகளின் வருகை குறைவடைந்துள்ளது என்கின்றனர் பறவைகள் நல ஆர்வலர்கள். என்னதான் எமது பிரதேசத்தின் அழகினை மேலும் அழகாக்க இத்தகைய பிரதேசங்கள் அமையப்பெற்றிருந்தாலும் அந்த அழகினை அழுக்காக்குவதற்கும் அந்தந்த பிரதேசங்களில் சில விசமிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

ஒருபுறம் விசமிகள் பறவைகளை வேட்டையாடுவதன் காரணமாக குருவிக்காட்டின் வளம் அற்றுப் போகின்றது என்றால், மறுபுறம் சாவகச்சேரி பிரதேச சபையினால் பாதுகாக்கப்பட வேண்டிய இந்தப்பகுதி அவர்களின் கவனயீனத்தினால் மத்திய அரசின் நேரடிக்கண்காணிப்பின் கீழுள்ள வனஜீவராசிகள் திணைக்களத்திடம் சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் அழகினை மெருகூட்டும் இவ்வாறான பகுதிகள் எம்மவர்களின் சோம்பேறித்தனத்தினால் இனி அபிவிருத்தி என்கின்ற பெயரில் என்ன என்ன நடக்கப்போகின்றது என்று நினைத்துப்பார்த்தால் எல்லாம் கவலையே.

எவ்வாறாயினும், எமது பிரதேசத்தின் அழகினை மெருகூட்டும் இத்தகைய பிரதேசங்களினை கவனிப்பார் அற்று விடாமல் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தென்னிலங்கை மற்றும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே சுற்றுலாத்தலங்களைத் தேடி அலையாமல் எங்களிடம் இருக்கின்ற வளத்தினைச் சரியாக பயன்படுத்தினால், நாங்கள் தேடிப் போகும் பிரதேசத்தவர்கள்கூட எமது பிரதேசத்தினை நோக்கிப் படையெடுக்கக்கூடும்.

கையில் வெண் ணெய்யை வைத்துக்கொண்டு நெய் தேடி அலைவதாய் போய்விட்டது எம் வாழ்க்கை. இனியாவது அதனை மாற்ற முயற்சிக்க வேண்டும்..




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781